Registered as a Newspaper

PUMP
(with
Standard Accessories
Select




NEWTONE
Water Pumps

# சஞ்சீவி

அறிவு-ஆக்கம்-அபிவிருத்தி

விலை ரூபா 4-00

தரமான
உதிரிப்பாகங்களை
கொண்டு தயாரிக்கப்படும்



நியூரோன்
வாட்டர் பம்புகளை
வாங்குங்கள்

மலை: 4 யாழ்ப்பாணம் சுக்கில ஆண்டு ஆவணி மீ 24 உ சனிக்கிழமை ஸபர் 1410 ஷவ்வால் பிறை 08 (09-09-89) SANJEAVY REGENERATIVE TAMIL WEEKLY சிகரம்: 68

# அமைதிப்படை விலகல் குறித்து பெல்கிறேட்டில் புதிய இணக்கம்

## நல்லதென ராஜீவ் வர்ணனை;

### பிரேமா அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்படும்

பெல்கிறேட், செப்டம்பர் 9

அமைதிப்படையை விலக்கிக் கொள்வது தொடர்பாக, பெல்கிறேட்டில் வைத்து, இலங்கைக்கும் — இந்தியாவுக்கும் இடையில் புதிதாக இணக்கம் ஒன்று ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

பிரஸ்தாப இணக்கத்தை நல்லதொரு உடன்பாடு என்று இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி வர்ணித்தார்.

அதேவேளை, புதிய இணக்கத்தின் அம்சங்கள் குறித்து இலங்கை ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இரண்டு நாடுகளின் பிரதிநிதிகளுக்கும் இடையே பெல்கிறேட்டில் பேச்சுக்கள் நடைபெற்றது தெரிந்ததே. அப்போதே புதிதாக இணக்கநிலை காணப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

பெல்கிறேட்டில் இருந்து இந்தியப் பிரதமர் ராஜீவ் காந்தி நேற்று புதுடில்லி திரும்பினார்.

விமான நிலையத்தில் செய்தியாளர் மத்தியில் பேசுகையில் பிரதமர் காந்தி புதிய இணக்கம் குறித்துப் பின்வருமாறு கூறினார்.

இலங்கை — இந்தியப் பேச்சுக்களில் நல்லதொரு இணக்கம் காணப்பட்டுள்ளது.

உடன்பாட்டின் அம்சங்களை இலங்கைப் பிரதிநிதிக் குழு ஜனாதிபதி பிரேமதாஸாவிடம் தெரிவிக்கும். அதுவரை இது

(4ஆம் பக்கம் பார்க்க)

## சாப்பிட்டுக் கொண்டிருந்த வேளை

## சிப்பாய்கள் மீது திடீரெனச் சூடு!

### 4 பேர் துடிதுடித்து மரணம்; மூவர் படுகாயம்

கொழும்பு, செப் 9

சாப்பிட்டுக்கொண்டிருந்த இராணுவச் சிப்பாய்கள் மீது சக சிப்பாய் ஒருவர் திடீரெனச் சரமாரியாகச் சுட்டார்.

அப்போது 4 சிப்பாய்கள் அவ்விடத்திலேயே துடிதுடித்து இறந்தனர். மற்றும் மூவர் படுகாயமடைந்தனர்.

தெரணியகலை இராணுவ முகாமில் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) இரவு இந்த திடுக்கிடும் சம்பவம் இடம்பெற்றது.

இந்தத் திடீர் தாக்குதலில் சடுபட்ட சிப்பாய் ரி 56 துப்பாக்கியையும் எடுத்துக்கொண்டு அங்கிருந்து தப்பிச் சென்றுவிட்டார்.

சம்பந்தப்பட்ட சிப்பாய் நேற்றுப் பிற்பகல் கேகாலையில் வைத்துச் சுட்டுக் கொல்லப்பட்டார் என்று பிந்திக் கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

இவர் அண்மைக் காலத்தில் இராணுவ தொண்டர் படைக்கு ஆட்சேர்ப்பு நடைபெற்றபோது புதிதாகச் சேர்ந்தவர் என்று கூறப்பட்டது.

தென்பகுதியில் நேற்று இடம்பெற்ற ஏனைய சம்பவங்கள் வருமாறு:-

★ மாத்தறை: வெலிகல என்னுமிடத்தில் வீடு ஒன்றில் குண்டு ஒன்று வெடித்தபோது 4 மாணவர்கள் உயிரிழந்தனர்.

பி. காமினி என்ற மாணவன் குண்டு ஒன்றை எடுத்து சகாக்களுக்கு காட்டிக்கொண்

(4 ஆம் பக்கம் பார்க்க)

#### யாழ் பல்கலைக்கழகத்துக்கு

## பிரிட்டிஷ் நிறுவனம் ரூ. 3 கோடி பெறுமதியான உபகரணங்களை வழங்கும்

யாழ்ப்பாணம், செப் 9

யாழ். பல்கலைக்கழக விஞ்ஞான ஆய்வு கூடங்களுக்கு உரிய- மூன்று கோடி ரூபா பெறுமதியான- உபகரணங்கள் இம்மாத இறுதிக்குள் வந்துசேரவுள்ளன.

யாழ். பல்கலைக்கழகத்துக்கு நேற்று விஜயம் செய்த பிரிட்டிஷ் கவுன்சில் அதிகாரிகள் ஜோன்பெயின், திருமதி ரூபா விக்கிரமரத்ன ஆகியோர் தகவலை வெளியிட்டனர்.

பிரிட்டிஷ் நிறுவனமான ஓ. டி. ஏயின் உதவியாக இவ் உபகரணங்கள் வழங்கப்படுகின்றன.

நேற்று பல்கலைக்கழகத்துக்கு வந்திருந்த பிரிட்டிஷ் பிரதிநிதிகள் உபவேந்தர் பேராசிரியர் அ. துரைராஜா, விஞ்ஞான பீடாதிபதி பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம், வைத்திய பீடாதிபதி பேராசிரியர் பாலசுப்பிரமணியம், கலைப் பீடாதிபதி பேராசிரியர் பாலகிருஷ்ணன் ஆகியோருடன் ஆய்வு கூடத் தேவைகள் குறித்துப் பேச்சுக்கள் நடத்தினர். (ஓ-3)

## 11 நெசவு நிலையங்கள் மாகாண சபையின் கீழ்

திருகோணமலை செப் 9

புதிய புடைவைக் கைத்தொழில் அமைச்சின் கீழ் உள்ள பதினொரு கைத்தறி நிலையங்களின் நிர்வாகங்களை வடக்கு, கிழக்கு மாகாண கைத்தொழில் அமைச்சு பொறுப்பேற்கவிருக்கிறது.

யாழ். மாவட்டத்திலுள்ள மாவிசந்தி, இராசலடி, வயாவிளான், இமையாணன் ஆகிய நெசவு நிலையங்களும், திருகோணமலை மாவட்டத்திலுள்ள சாம்பல்தீவு, பெரிய கிண்ணியா, கோமரங்கடவல ஆகிய நெசவு நிலையங்களும், மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள ஆரையம்பதி, காத்தான்குடி, பெரியகல்லாறு, கல்லடி ஆகிய நெசவு நிலையங்களையும் பொறுப்பேற்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (உ-150)

## போலிச் சான்றிதழ்களுடன் நிவாரணவிண்ணப்பங்கள்!

யாழ்ப்பாணம், செப். 9

புனர்வாழ்வு அமைச்சின் ஊடாக வழங்கப்பட்டுவரும் நிவாரணப் பணத்தைப் பெறுவதற்கு பலர் தமது விண்ணப்பப்படிவங்களுடன் போலி அத்தாட்சிப் பத்திரங்கள், சான்றிதழ்களை இணைத்திருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

யாழ். செயலக புனர்வாழ்வு மற்றும் நிவாரண அலுவலகளில் ஈடுபட்டிருக்கும் உயரதிகாரிகள் இந்த மோசடிகளைக் கண்டுபிடித்துள்ளனர்.

ஏற்கனவே நிவாரணம் பெற்ற பலரும் தமக்கு நிவாரணம் கிடைக்கவில்லை எனக் கூறி போலிச் சான்றிதழ்களை இணைத்தும்—

இராணுவ நடவடிக்கை

(4ஆம் பக்கம் பார்க்க)

#### மின்சாரம் வழங்குவது பற்றி ஆராய

## அமைச்சர் பெஸ்டஸ் இன்று காங்கேசன் வருகிறார்

யாழ்ப்பாணம், செப். 9

யாழ் குடாநாட்டு மின்சாரப் பிரச்சினை பற்றி ஆராய எரிபொருள், மின்சக்தி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா இன்று காலை காங்கேசன்துறை வருகிறார்.

யாழ் குடாநாட்டுக்கு மின்சாரம் வழங்குவதற்காக காங்கேசன் லங்கா சிமெந்து நிறுவன மின் இயந்திரத்தை மின்சார சபை பொறுப்பேற்கும் நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்காகவே அமைச்சர் இன்று வருகிறார்.

இவருடன் மின்சார சபைத் தலைவர், முகாமையாளர் மற்றும் அதிகாரிகளும், லங்கா சிமெந்து நிறுவன உயர் அதிகாரிகளும் கொழும்பிலிருந்து வரவிருக்கின்றனர்.

82 ஆம் ஆண்டு பொருத்தப்பட்ட இரண்டு கால் ரேர் பைன் ஜெனரேட்டர்கள் லங்கா சிமெந்து தொழிற்சாலையில் உள்ளன. ஒரு ஜென

(4ஆம் பக்கம் பார்க்க)

### அன்னை திரேசா சுகவீனம்

புதுடில்லி, செப். 9

அன்னை திரேஸா ஆபத்தான நிலையில் கல்கத்தா அரசு ஆஸ்பத்திரியில் நேற்று அனுமதிக்கப்பட்டார்.

79 வயதான அன்னை கடும் காய்ச்சலாலும் மூச்சுவிடும் கஷ்டத்தாலும் அவஸ்தைப் படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அவரது உயிருக்கு ஆபத்து இல்லை என்று டாக்டர்கள் தெரிவித்தனர். (ஓ-எ)

#### பதிவு செய்யப்படாமல் ஓடும்

## இந்திய வாகனங்கள் பற்றி ஐ. ஜி. பியின் கவனத்துக்கு

கொழும்பு, செப் 9

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பதிவு செய்யப்படாமல் ஓடும் இந்தியா அனுப்பிய வாகனங்கள் பற்றிய பிரச்சினை பொலீஸ் மா அதிபரின் (ஐ. ஜி. பி.) கவனத்துக்கு அனுப்பப்பட்டுள்ளது.

பதில் வெளியுறவு, யாதுகாப்புத் துணை அமைச்சர் ஜோன் அமரதுங்க நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் இத் தகவலைத் தெரிவித்தார்.

சுதந்திரக் கட்சி எம். பி. லயனல் ராஜபக்ஸாவின் கேள்வி ஒன்றுக்கு பதிலளிக்கையில் பதில் அமைச்சர் மேலும் சொன்னதாவது:-

1989 ஆம் ஆண்டு பெப்ரவரி, மார்ச், ஜூன் ஆகிய மாதங்களில் மூன்று தடவைகளாக இந்தியா வடக்கு - கிழக்கு மாகாணத்திற்கு 75 ஜீப் வண்டிகள், 48 டாட்டா பஸ்கள், 20 லொறிகள், 4 பவுஸர்கள், 8 அம்புலன்ஸ்களை அனுப்பி வைத்தது.

நிவாரண உதவித் திட்டம்

(4 ஆம் பக்கம் பார்க்க)

### சுபநேரம்

(09 - 9 - 1989)

ஆவணி 24 சனிக்கிழமை

நக்ஷத்திரம்: மூலம்

சுபநேரம்:

03-03 முதல் 04-33 வரை

ராகுகாலம்:

09-03 முதல் 10-33 வரை

இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

நவமி பின்னிரவு 12.45 வரை

ஆவணி மூலம்

## மட்டக்களப்பில் 9 மணிநேர ஊரடங்கு!

கொழும்பு, செப். 9

மட்டக்களப்பு நகரத்திலும் அதனை அண்டிய பகுதிகளிலும் நேற்றிரவு எட்டு மணி முதல் இன்று [சனிக்கிழமை] அதிகாலை வரை ஊரடங்கு உத்தரவு அமுல் செய்யப்பட்டிருந்தது.

மட்டக்களப்பு நகரில் இருந்து சுமார் 12 மைல் தொலைவிலுள்ள சித்தாண்டியில், ஆலயம் ஒன்றில் நடைபெற்ற அசம்பாவிதத்தைத் தொடர்ந்தே இந்திய அமைதிப்படையினர் ஊரடங்கு உத்தரவு குறித்து ஒலிபெருக்கி மூலம் அறிவித்தனர்.

ஆலய உற்சவத்தின் போது இனந்தெரியாத சிலர் வந்து குழு ஒன்றின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்றும்—

துப்பாக்கிச் சூட்டுச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட குழுவைச் சேர்ந்த மூன்று பேர் மரணமானார்கள் என்றும் — தெரியவந்தது.

இச் சம்பவத்தைத் தொடர்ந்து மட்டக்களப்பு நகரத்திலும் பதற்ற நிலை உருவாகியுள்ளதாக அறிவிக்கப்படுகிறது.

ஊரடங்கு இன்றும் நீடிக்கப்படுமா என்பது குறித்து எதுவும் தெரிவிக்கப்படவில்லை. [அ-1]

#### பெல்கிறேட் பேச்சின் பெறுபேறுகளை

## அமைச்சர் ரஞ்சன் இன்று ஜனாதிபதிக்கு விளக்குவார்

கொழும்பு, செப் 9

பெல்கிறேட்டில் இருந்து நேற்று நாடு திரும்பிய அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்தின இன்று ஜனாதிபதி திரு ஆர். பிரேமதாஸாவைச் சந்தித்து சில முக்கிய விடயங்களை விளக்குவார்.

நேற்றைய தினமே ஜனாதிபதியை அமைச்சர் ரஞ்சன் சந்தித்துப் பேச இருந்தபோதிலும் ஜனாதிபதி—எதிரணியினரின் பேச்சு தொடர்ந்து கொண்டிருந்ததால் அது முடியாமற் போனதாக கொழும்பில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தன.

பிரதமர் ராஜீவுடன் தாம் நடத்திய பேச்சுக்களின் விவரங்களை ஜனாதிபதிக்கு திரு. விஜேரத்தின விளக்கிக் கூறுவார். (ஓ-1)

### ஈ. ஜ. முவும் ரெலோவும் பங்குபற்றும்

கொழும்பு, செப். 9

ஜனாதிபதி கூட்டும் அனைத்து அரசியல் கட்சிகள் மாநாட்டில் ஈழவர் ஜனநாயக முன்னணியும், தமிழ் ஈழ விடுதலை இயக்கமும் [ரெலோ] பங்குபற்றும் எனக் கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (ஓ-எ)

### புலோலியில் மோதல்!

வல்வெட்டித்துறை, செப் 9

நேற்றுக்காலை 7.45 மணியளவில் புலோலி சாரையடியில்

(4 ஆம் பக்கம் பார்க்க)

## எதிர்க்கட்சிகளுடன் ஜனாதிபதி இரவிரவாக நேற்றுப் பேச்சு!

கொழும்பு, செப் 9

ஐந்து பிரதான எதிர்க்கட்சிகளின் பிரதிநிதிகள் நேற்று மாலை 6.30 மணிக்கு ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாஸாவைச் சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தினார்கள்.

எதிர்க்கட்சியினர் இந்தச் சந்திப்பின்போது மூன்று விடயங்களை வலியுறுத்தியதாகப் பிந்திக்கிடைத்த செய்திகள் தெரிவித்தன.

★ நாடாளுமன்றத்தைக் கலைத்து இடைக்கால அரசு ஒன்றை அமைக்க வேண்டும்.

★ அந்த இடைக்கால அரசின் மேற்பார்வையில் பொதுத் தேர்தல் ஒன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகளை மேற்கொள்ளவேண்டும்.

★ ஜனாதிபதிக்குரிய நிறைவேற்று அதிகாரங்களை நாடாளுமன்றத்திற்குப் பாரதீனப் படுத்தக் கூடியதான ஏற்பாடுகளை உடனடியாக மேற்கொள்ளல்.

—இவையே வலியுறுத்தப்பட்ட மூன்று விடயங்களும் ஆகும்.

பேச்சுவார்த்தை நேற்று நள்ளிரவு வரை தொடரும் என எதிர்பார்க்கப்பட்டது.

நேற்றைய பேச்சுவார்த்தையின் பெறுபேறுகள் குறித்து ஐந்து எதிர்க்கட்சிகளும் இன்று காலையில் கூட்டறிக்கை ஒன்றை வெளியிடும் என்று நேற்றிரவு கொழும்பில் தெரிவிக்கப்பட்டது. (உ-1)

### உச்சி மாநாடு முடிவுற்றது

அணிசேரா இயக்க நாடுகளின் ஒன்பதாவது உச்சி மாநாடு நேற்று முடிவடைந்தது.

இறுதியில் 10 பக்கக் கூட்டறிக்கை ஒன்று வெளியிடப்பட்டது. (ஓ-9)

### எரிபொருள் வந்தது

யாழ்ப்பாணம், செப். 9

யாழ் மாவட்டத்துக்குத் தேவையான எரிபொருள்கள் நேற்று சரக்கு ரயில் மூலம் இங்கு கொண்டுவரப்பட்டன.

52 ஆயிரத்து 740 லீற்றர் பெற்றோல், 30 ஆயிரத்து 800 லீற்றர் டீசல், 71 ஆயிரம் லீற்றர் மண்ணெண்ணை ஆகியவும் 186 மெட்றிக் தொன் அரிசியும் இந்த ரயிலில் கொண்டுவரப்பட்டன. (ஓ-10)

### இரு அதிபர்கள் கொலை

கொழும்பு, செப். 9

பதுளை, வலஸ்முல்லை ஆகிய பகுதிகளில் நேற்றுப் பாடசாலை அதிபர்கள் இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

அதேசமயம் நேற்று தென் பகுதியின் பல பகுதிகளிலும் 15 சடலங்கள் கண்டெடுக்கப்பட்டன என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஓ-1)

## இளைஞரும் குடும்பஸ்தரும் கொக்குவிலில் சுட்டுக்கொலை

யாழ்ப்பாணம், செப். 9

கொக்குவில் மேற்கு காளிகோவிலடியில் நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) இரவு இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இளைஞரான கந்தையா இந்திரன் (வயது 19), குடும்பஸ்தரான பரமு இராசலிங்கம் (வயது 40) ஆகிய இருவருமே கொலையுண்டவர்கள் ஆவர்.

இரு சடலங்களும் யாழ் ஆஸ்பத்திரிக்கு கொண்டுவரப்பட்டு பிரேத பரிசோதனை மற்றும் மரண விசாரணைகள் நடத்தப்பட்டன. (ஓ-10-51)

### மனோகரா சந்தியில் இளைஞர் சடலம்

யாழ். கே. கே. எஸ். வீதி மனோகரா சந்தியில் நேற்றுக்காலை சூட்டுக்காயங்களுடன் இளைஞர் ஒருவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது.

கொலையுண்டவர் நயினாதீவைச் சேர்ந்த நடராசா சிவகுமாரன் வயது 25 எனத் தெரிவிக்கப்பட்டது. (ஓ 10 51)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதுமையும் எழிலும் பொலியும் பல்சுவை வார இதழ்

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மின்சாரம் இல்லாதநேரத்திலும் குழாய்க்கிணறு/ சாதாரண கிணற்றிலிருந்து வீட்டுத்தேவைக்கான தண்ணீர் பிரச்சினையை இலகுவில் தீர்த்து வைக்கின்றது: ஹைட்ரோ [Hydro] கைப்பம்புகள் வீட்டில் மின்மோட்டார்கள் பொருத்தி வைத்திருப்பவர்கள் அதே பைப்பில் இதைப்பொருத்தி அதிகலாபம் அடையுங்கள்: மேலதிக விபரங்களுக்கு: Vasanthy Electricals 110, K. K.S Road, Cchunnakam. [சி/3645]

Black Hyline முட்டையிடும் 8 கோழிகள், Black& Silver கலர் 2 வயது Japanese Spitz ஆண் நாய், (குழந்தைகளுடன் அன்பாக பழகக் கூடியது.) உடன் விற்பனைக்குண்டு. தொடர்பு 887, ஆஸ்பத்திரி வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம். (2086)

எம்மிடம் அண்மையில் வெளியிடப்பட்ட மருத்துவ நூல்கள் (Medical Books), அதி நவீன கம்பியூட்டர் நூல்கள் (Latest Computer-Books), கதைப் புத்தகங்கள், பாடப் புத்தகங்கள் மற்றும் சகலவிதமான வாழ்த்து மடல்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்: மண்டேலா ரேடர் 'புத்தகசாலை) இல.02 பஸ் நிலையம், யாழ்ப்பாணம். (1551)

Kenwood Chef, sisil Fridge food, Warmer, Drink Mixer cooler Loud speakers, Vedio Deck, Tuner Radio, Show case மீன் தொட்டி Love birds Cage இரும்புக் கதிரை செற், பாவித்த நிலை கதவுகள், மற்றும் மின்சார உபகரணங்களுக்கு Jeyas Auction Mart, No. 161 Main Street Jaffna. (2117)

மிக நல்ல நிலையில் உள்ள canon வீடியோ கமெரா canon வீடியோ டெக் (நஷனல் NV 100 போல் உள்ளது) tuner, chager என்பவற்றுடன் விற்பனைக்கு உள்ளது. எவர் விஷன் 21 மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம், (சி/3638)

Radiogram, Tape Recorder, TableFan விற்பனைக்குஉண்டு: இத்துடன் சிறிது திருத்த வேலைகளையுடைய Fridge உம் உண்டு. புதிய மொடல் C-50 Honda Motor Cycle இற்கு மாற்றம் செய்யலாம். இ. வத்சலன் C/o. Ramsons சுதுமலை வடக்கு, மானிப்பாய். (2072)

### காணி விற்பனைக்கு

58, சிவன் வீதி, நல்லூரில் 1½ பரப்புக் காணி கிணறு மலசலகூடத்துடன் உடன் விற்பனைக்குண்டு: தொடர்பு J. மகேந்திரன் 17 கோவில் வீதி, யாழ்ப்பாணம் அல்லது வின்ரோ, மகேந்திரா நவீன சந்தை, (மேல்மாடி) யாழ்ப்பாணம். (2082)

ஆனைக்கோட்டை புக்கை தின்னிப் பிள்ளையார் கோவிலுக்கு அருகாமையில் வீடு, கிணறு, கட்டட 12 பரப்பு காணி விற்பனைக்குண்டு. பகுதி பகுதியாகவும் பிரித்துக்கொடுக்கப்படும்: தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க. ஜெயசூரியர், மெமோறியல் லேன், மானிப்பாய். (2048)

### கோழிக்குஞ்சுகள் விநியோகம்

Hyline கறுப்பு, வெள்ளை சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் Golden Comet சிவப்புப் பேட்டுக் குஞ்சுகள் Indian River, புரொயிலர் குஞ்சுகள், இறைச்சிக் கோழிகள். முன் கூட்டியே பதிவு செய்யவும்: பரம் ஏஜன்சி, கிளிநொச்சி: (1767)

### புரொயிலர் குஞ்சு விநியோகம்

Christombu Farm, Bairaha Farm புரொயிலர் குஞ்சுகள் ஒவ்வொரு வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். விலை குறைக்கப்பட்டுள்ளது: முன் கூட்டியே பதிவு செய்து ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராசா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில்: (சி/3609)

### கோழிக்குஞ்சு விநியோகம் (Uplands Farm)

(Dekalb) பிறவுண் சேவல் குஞ்சுகள் (cobb) புரொயிலர் குஞ்சுகள் (13-9-89) புதன் கிழமை விநியோகிக்கப்படும்: முன் கூட்டியே பதிவு செய்க: இல. 9, கந்தையா லேன், சுன்னாகம் (புகையிரத நிலையத்துக்கு அருகில்) (2075)

### இறைச்சிக்கோழி

புரொயிலர் இறைச்சிக்கோழி சேவல், முட்டை இட்டு இளைத்த கோழிவிற்பனைக்கு உண்டு சற்குணராசா&பிறதர்ஸ் பிரம்படிலேன், கொக்குவில். (2088)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Golden Comet பிறவுண் பேட்டுக்குஞ்சுகள் சேவற்குஞ்சுகள் 13ஆம் திகதி புதன்கிழமையும் Christombu Farm புரொயிலர் குஞ்சுகள் 14ஆம் திகதி வியாழக்கிழமையும் விநியோகிக்கப்படும். முன் கூட்டியே பதிவு செய்க சற்குணராசா & பிறதர்ஸ் பிரம்படி லேன், கொக்குவில்: (2089)

### தேவை

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கல்வி ஸ்தாபனம் ஒன்றிற்கு சந்தோர் காப்பாளராக பணியாற்றுவதற்கு 45 வயதிற்குட்பட்ட பெண் தேவை: கல்வித்தகைமைகள் அவசியமென்றில்லை: குடும்பப் பொறுப்பற்ற விதவைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்: 597, C/o, Uthayan. (2067)

அலுவலக பெண் உதவியாளர் தேவை: முற்பணம் கட்டக் கூடியவர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர் A/L சித்தி அடைந்தவராகவும் அலுவலகத்தை திறமையாக நிர்வகிக்கக் கூடியவராகவும் இருத்தல் வேண்டும்: தொடர்பு: ஆ: சி. த: தமிழழகன், மானிப்பாய்வீதி, ஆறுகால்மடம் ஆனைக்கோட்டை: (2115)

3'' அல்லது 4'' பம்ப் டிராக்டரில் பொருத்தி இறைக்கக் கூடியதாக அல்லது இன்ஜினுடன் சேர்ந்த பம்ப் தேவை. தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: க: சோதிநாதன், அரசடி வீதி, திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம் அல்லது சோமரட்ணம் அரசடி வீதி, திருநெல்வேலி, கிழக்கு. (1891)

### மணவாளன் தேவை

யாழ்ப்பாண இந்து வேளாள செவ்வாய்க் குற்றமுள்ள 25 வயது Bcom ஆசிரியைக்கு டாக்டர் என்ஜினியர் கணக்காளர் அல்லது அதனோடொத்த மணமகன் தேவை: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம். யாழ்ப்பாணம். (2129)

### மணமகன் தேவை

யாழ்ப்பாணம் சைவ வேளாள குலத்தைச் சேர்ந்த 29 வயதும், அழகும் 4 இல் செவ்வாயும் உள்ள Bsc பட்டதாரி ஆசிரியைக்கு பெற்றோர் அந்தஸ்தானவான உத்தியோகம் 31- 36வயதுடைய தாவர உணவுடைய மணமகனைத் தேடுகின்றனர்: பொருத்தம் உடையவர் தம் பிறந்த திகதி, நேரம் சாதகக்குறிப்பு குடும்ப விபரங்களுடன் தொடர்பு: C/o. 92, உதயன், யாழ்ப்பாணம். (2125)

யாழ் இந்து வேளாளகுல 34 வயது படித்த, அழகு, குணம், செல்வம் கொண்ட கொழும்பில் தொழில் பார்க்கும் கொழும்பில் மாடிவீடு கொண்ட பிள்ளைகள் இன்றி விவாகரத்துப் பெற்ற பெண்ணுக்கு மணமகன் தேவை. பிள்ளைகள் அற்ற விவாகரத்துப்பெற்றவரும்; தாரமிழந்தவரும், வெளிநாட்டிலுள்ளவரும் விண்ணப்பிக்கலாம்: No. 89 C/o உதயன், யாழ்ப்பாணம்: (18 74

யாழ். இந்து வேளாளகுல 25 வயது நிரம்பிய அழகிய கன்னி கிரகபாவம் அற்ற A/L Pass மணமகளுக்கு வங்கி அரச தனியார் நிறுவனங்களில் பணிபுரியும், அல்லது வெளிநாட்டில் நிரந்தர வேலையுடைய மணமகன் தேவை சீதனம் கொடுக்கப்படும் 593 C/o உதயன்: (2033)

### மணப்பெண்கள் தேவை

யாழ்ப்பாண இந்து வேளாளர் 37 வயது B. A ஆசிரியருக்கும், செவ்வாய்க்குற்றமுள்ள 39 வயது Bsc ஆசிரியருக்கும் மணப்பெண் தேவை: மங்கள ஏஜென்சி, கொய்யாத்தோட்டம், யாழ்ப்பாணம். (2128)

### மணமகள் தேவை

இந்து உயர் குலத்தைச் சேர்ந்த 36, 50 வயதுகளை உடைய இரு அரச கூட்டுத்தாபன ஊழியர்களுக்கு ஆசிரியை அல்லது அழகிய படித்த மணப்பெண்கள் தேவை: சகல விபரங்களுடன் தொடர்பு கொள்ளவும்: விளம்பர இல: 598, C/o, உதயன், யாழ்ப்பாணம்: (2077)

### தவறிவிட்டது

ந. நகுலராஜ் ஆகிய எனது முக்கிய தஸ்தாவேஜுகள் அடங்கிய பேர்ஸ் கடந்த புதன்கிழமை ஆஸ்பத்திரி வீதிக்கும் பண்ணை வீதிக்கும் இடையில் தவறிவிட்டது: எடுத்தவர்கள் தயவு செய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (1932)

கு. ஜெனிற்று, சாந்தா ஜெமிஸ் ஒழுங்கை, இளவாலை ஆகிய எனது அடையாள அட்டை இல. 8181250 V வேலணை பஸ்ஸில் தவறிவிட்டது: கண்டெடுத்தவர்கள் உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும்: (2080)

(6-9-89) புதன்கிழமை நண்பகல் மாவிட்டபுரத்திற்கும் குடவத்தைக்கும் இடையில் Van இல் பிரயாணம் செய்யும்போது எனது பணப்பை தவறிவிட்டது: அதில் பணம்காதணிகள், அடையாள அட்டை (527620066V) இருந்தன: கண்டெடுத்தவர்கள் என்னிடம் ஒப்படைக்கும்படி தயவாகக் கேட்டுக்கொள்கிறேன். சன்மானம் வழங்கப்படும்: ந.மகேஸ்வரி 'துவாரகை' துன்னாலை தெற்கு, கரவெட்டி: (2090)

### சேவை

பாவித்த தரமான பொருட்களை வாங்க விற்க அல்லது பொருளுக்குப் பொருள்மாற்றிப் பெற்றுக்கொள்ள நாட வேண்டிய புதியஸ்தாபனம்: Jeyas Auction Mart, No.161 Main Street, Jaffna. (2116)

திருமண சேவை காணி வாங்கவும், விற்பனை செய்யவும் காணி அளவை படம், வரைதல் (உத்தரவு பெற்ற நில அளவையாளர்) தமிழ் மலரி சேவிஸ், ஆ. சி. த: தமிழழகன், மானிப்பாய் வீதி, ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை: (2113)

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கிலம் ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்: Fudo Enterprises 39/17, மின்சார நிலைய வீதி, 8 ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்: (சி 3601)

### SPOKEN ENGLISH

30 தொடர் வகுப்புகள் சனி, ஞாயிறு தவிர்ந்த ஏனைய நாட்களில். நேரம் பகல் 10 - 11. 30மணி ஆரம்பம்: 11- 9- 89 முன்பதிவு செய்தல் வேண்டும்: S. B. Iyar, 12 வைமன் வீதி, நல்லூர்: (1898)

### பிரயோக கணிதம் 89

உயர்தர பிரயோககணித மாதிரி வினாத்தாள்களும் விடைகளும், வெளியாகியுள்ளன. மூன்று தொடை வினாத்தாள்களும், விடைகளும் A/L 89, மாணவர்கள் நேரம் கணிப்பிட்டு விடையளிப்பதன் மூலம் பரீட்சைகளுக்குத் தம்மைத்தயார் செய்வதற்கேற்றது. சகலபிரபலபுத்தக விற்பனையாளர்களிடமும் பெற்றுக்கொள்ளலாம்: ஆசிரியர் சி: துரையப்பா சென் ஜோன்ஸ் கல்லூரி: (2056)

### ஜோதிடம்

ராகு கேது மாற்றம் ரூபா 3/50: எங்கும் கிடைக்கும்: இடப, சிங்க, துலா, தனுசு இராசிக்காரர்களுக்கு யோக பலன்கள் ஏற்படும்: நூலாசிரியர் (ஆத்மசோதி) தத்துவ ஞானம் Prof சத்தியதாசன் Mech E Elec.E விற்பனையாளர்கள் பூபாலசிங்கம் புத்தகசாலை, யாழ்ப்பாணம்: (2085)


### கல்வி

உங்கள் இருப்பிடங்களிலேயே சிறிய அல்லது பெரிய அளவிலான ஆங்கில வகுப்புக்களை ஒழுங்கு செய்யக் கூடிய ஆண், பெண் (ரூபாலாரும் உங்கள் முகவரியை மாத்திரம் தபால்மூலம் தெரிவித்தால் ஆங்கில ஆசிரியர் உங்களுடன் நேரில்: தொடர்பு கொள்ளவும் I E T. 11B, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம் (2068)

### வாடகைக்கு

சுன்னாகத்தில் அமைந்துள்ள கல்வி ஸ்தாபனம் (இருபத்தைந்து பேர் வரை உள்ளடக்கக் கூடியதான) தளபாடங்களுடன் குத்தகைக்கு விடப்படும்: விபரங்களுக்கு நேரில்தொடர்பு கொள்ளவும்: எஸ். சபாநயகம், 164, ஸ்ரேசன் ரோட், சுன்னாகம்: (2069)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்



## திரு. சுப்பிரமணியம் குருநாதன்

(சட்டத்தரணி)

தோற்றம்:- 09 · 10 · 1924 மறைவு:- 10 · 08 · 1989

எங்கள் இதயத்தில் என்றும் நீங்காது நிலைத்து நிற்கும் அன்புத் தந்தையே! எமக்கு நல்வழி காட்டி அன்பு, பண்பு, பாசத்துடன் வளர்த்த அன்புத் தெய்வமே! உங்கள் நினைவலைகள் என்றும் எம்மை விட்டு நீங்கா:

10-08-1989 (வியாழக்கிழமை) சிவபதம் எய்திய எமது குடும்பத்தலைவர் திரு. சுப்பிரமணியம் குருநாதன் (சட்டத்தரணி) அவர்களின் சமக்கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும், ஆறுதலளித்து எமக்குப்பல உதவிகள் வழங்கிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்:

இன்று 09 09-1989 (சனிக்கிழமை) எமது இல்லத்தில் நடைபெறவுள்ள வீட்டுக்கிருத்தியத்திலும், மதிய போசனத்திலும் கலந்து சிறப்பித்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்:

இங்ஙனம்
குடும்பத்தினர்.

18/3, கச்சேரி கிழக்கு ஒழுங்கை,
சுண்டுக்குளி. (1892)

## 2 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்: 1928· 09· 10

மறைவு: 1987 09· 02



## தம்பிமுத்து துரைராசா

(பிறிலங்கா ஸ்ரோர்ஸ், உரிமையாளர்)

தரணியில் வாழும் போது தனக்கென வாழ்ந்திடாது மக்கள் சேவையே மகேசன் சேவையென மதித்து எங்கள் வாழ்வு ஒளிமயமாக வேண்டும் என விரும்பி முயற்சி செய்த நீங்கள் மறைந்தோ இருளாய் இரண்டு ஒளியின்றி ஓடினவோ: ஆறுமோ எம் நெஞ்சம்?
உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்:

அக்கா, அத்தான், மருமக்கள்

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி: [2131]

# ECALOM

மனோகரா சந்தி, யாழ்ப்பாணம்.

## A/L 89

பொருளியல் பகுதி II

வினாவிடை
சென்மதி நிலுவை

திரு. உதயன்
பிரிவு I செவ்வாய் — வெள்ளி
(காலை 7மணி)
பிரிவு II திங்கள் — வெள்ளி
(7மணி) — (8மணி)
ஆரம்பம்: 11 - 09 · 1989

91 புதிய பிரிவு ஆரம்பமாகின்றது
ஆரம்பம்: 10 - 09 - 1989
சனி, ஞாயிறு 3 மணி

## SPOKEN ENGLISH WITH GRAMMAR

திரு. ஜெயகாந்
புதன் 13 - 09 - 1989 4 மணி

## O/L 1989

மீண்டும் தோற்றும் மாணவர்களுக்கு மீட்டலுடனான வினா - விடை வகுப்புகள்
கணிதம் · விஞ்ஞானம்
· ராஜ்தேவன் ·
புதன் 3 — 4 p. m: (சி/3646)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



உயர்திரு
## பொன்னையா குமாரசாமி சுந்தரலிங்கம்

[இளைப்பாறிய அஞ்சலக அதிபர், சட்டத்தரணி]

மலர்வு: 01. 01. 1929 உதிர்வு: 20. 09. 1988

திதி: நவமி 09.09.1989

அன்பின் பிறப்பிடமாய், பண்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எம்மை ஆருத்துயரின் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட எம் குடும்பத் தலைவரே, உங்கள் இழப்பை ஈடுசெய்ய முடியாமல் தவிக்கின்றோம்:

உங்கள் ஆத்மா சாந்திபெற இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்;

பிரிவால் வாடும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்,
உறவினர், நண்பர்கள்;

'மணி மாளிகை',
பருத்தித்துறை வீதி,
உடுப்பிட்டி: (2063)

## 3 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



## தம்பையா கணேந்திரராஜா

தோற்றம்: 1952-02-29 மறைவு: 1986 09 21

மூன்று ஆண்டு ஓடிமறைந்தாலும் முகவுரை இல்லாமல் ஏங்குகின்றோம்: தேடுகின்றோம் உங்கள் திருமுகத்தை உங்கள் ஆத்மாசாந்தியடைய எமது கண்ணீரைக் காணிக்கையாக்குகின்றோம்:

உங்கள் நினைவால் தவிக்கும்:
ஐயா, அம்மா, சகோதரர்கள்,
மச்சான்மார், மச்சாள்,
மருமக்கள்;

அளவெட்டி வடக்கு,
அளவெட்டி: (2132)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

CITY PHARMACY
சிற்றி பார்மஸி
மானிப்பாய்

பற்சிகிச்சை நிலையம்

பல்வைத்திய நிபுணர்
Dr. S. RAJARATNAM
(L. D. S. M. D. D)

ஞாயிறு, திங்கள், புதன் கிழமைகளில் காலை 9; 00 மணிதொடக்கம் பகல் 12; 00 மணிவரை நோயாளர்களைப் பார்வையிடுவார்

EXTRACTIONS, FILLINGS, DENTURES
ORTHODORITICS

மற்றும் பற்கள் சம்பந்தமான சகல நோயாளர்களுக்கும் நவீன வசதிகள் கொண்ட ஒரே இடம்

சிற்றி பார்மஸி
பிரதான வீதி,
மானிப்பாய்.
(இ/3324)

★ COMPUTER COURSES ★
DIPLOMA IN BASIC PROGRAMMING
புதிய பிரிவுகள்: 08 - 09 - 1989 (பிரிவு - I)
15 - 09 - 1989 (பிரிவு - II)
நேரம் 9—00 a.m. இல் ஆரம்பமாகும்
I.D.P. COMPUTER CENTRE
342, KKS ROAD, JAFFNA.
Branch:- 7th mile post MALLAKAM
(C/3620)

மாதகல்
தனியார் துறை மினிபஸ் சேவை சங்கம்
அறிவித்தல்

சங்கப் பொதுக்கூட்டம், எதிர்வரும் 10 - 9 - 89 ஆம் திகதி நடக்க இருக்கின்றது.

காரியதரிசி
ஆ. சிவஅன்பு
(2084)

## கேள்விப் பத்திரங்கள்-1989

எமது விற்பனை அபிவிருத்தித் திணைக்களத்தால் 1989 ஆம்ஆண்டின் 4 ஆவது காலாண்டிற்குரிய வைத்திய சாலைகளுக்குப் பாண், விறகு போன்ற பொருட்கள் விநியோகம் செய்வதற்கும், வாகன சேவைக்கும் கேள்விகள் கோரப்படுகின்றன. அதற்கான விண்ணப்பப்படிவங்களும், விபரங்களும் எமது பணிமனையில் நேரடியாகவோ தபால் உறையினை அனுப்பியோ பெற்றுக் கொள்ளலாம்;

இவ் விண்ணப்பப் படிவங்களைப் பூர்த்தி செய்து எமது பணிமனைக் கேள்விப்பத்திரப் பெட்டியில் இட்டோ அல்லது பதிவுத் தபால் மூலமோ 21; 09 1989 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.

சு. சண்முகரட்ணம்,
பிராந்தியக் கணக்காளர்,
வட பிராந்தியம்,

விற்பனைத் திணைக்களம்,
259, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/3636)

SPOKEN ENGLISH

90 நாட்களில் ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க நவீன உளவியல் ரீதியில் கற்றுக் கொடுக்கப்படும்; எம்மிடம் பல நூற்றுக்கணக்கான மாணவர்கள் இப் பயிற்சியின் தபால் மூலம் படித்து பயனடைந்துள்ளனர்; ஆங்கிலத்தை இரண்டாம் மொழியாகக் கற்பவர் எவ்வாறு இலகுவில் ஆங்கிலம் அதனை கற்றுக் கொள்ளலாம் எனும் துறையில் London Diploma பெற்றவரின் அனுசரணையுடனே பாடங்கள் யாவும் தயாரிக்கப்பட்டதாகும்;

மேலதிக விபரங்களுக்கு முத்திரையொட்டிய தபாலுறையுடன் தொடர்பு கொள்க;

Bright Training Centre
P. O. BOX 162
COLOMBO.
(இ-3621)

பலாலி ஆசிரியபயிற்சிக் கலாசாலையில்

# மீண்டும் ஆங்கிலப் பயிற்சிநெறி

தாவடி, செப்; 9

பலாலி ஆசிரியபயிற்சிக்கலாசாலையில் மீண்டும் ஆங்கிலப் பயிற்சிநெறி ஆரம்பிக்கப்படவுள்ளது:

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலையில் இயங்கிவந்த ஆங்கிலப் பயிற்சிநெறி சில வருடங்களுக்குமுன்னர் மூடப்பட்டது.

இதனால் வடக்கு, கிழக்கு மாகாண ஆசிரியர்கள் ஆங்கிலப் பயிற்சி நெறியைப் பெறுவதற்கு நீர்கொழும்பு, பேராதனை ஆகிய இடங்களுக்குச் செல்லவேண்டி இருந்தது।

பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை அதிபர், கல்வி அமைச்சின் ஆசிரிய பயிற்சி நெறிக்குப் பொறுப்பான அதிகாரிகளிடம், வடக்கு, கிழக்கு மாகாண ஆங்கில ஆசிரியர்கள் எதிர்நோக்கும் கஷ்டங்களைச் சுட்டிக் காட்டி இருந்தார்;

இதனை அடுத்தே பலாலி ஆசிரிய கலாசாலையில் ஆங்கில பயிற்சிநெறிப் பிரிவு ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

1984 ஆம் ஆண்டுக்குப் பின்னர் பலாலி இலங்கை இராணுவமுகாம் விஸ்தரிக்கப்பட்டதை அடுத்து, பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை இரு பாகையில் உள்ள கோப்பாய் மகாவித்தியாலயக் கட்டடத்திலும், கோப்பாய் ஆசிரிய கலாசாலையின் கட்டடத்தின் ஒருபகுதியிலும் இயங்கி வருவது தெரிந்ததே। (இ 144)

## வினை வேரறுக்கும் துர்க்கா

உடலம் பதறி நடு நடுங்க
உணர்வும் மாறிப் புளகமுற
ஊன விழிகள் நீர் பெருக்க
உளமே கசிந்து கசிந்துருக
நடனஞ் செய்யுங் கால் நிலைக்க
நன்றே கரமுங் குவிந்திருக்க
நானு முந்த னருட் கதைதனை
நனிதே காதுங் கேட்டிடுமோ?
திடமே கொண்டு நிதமுமிவை
செய்தே நின்றெம் மருளுன்னிச்
சேவித் திருக்குந் நெறி தன்னைத்
தேவி! எமக்கு நல்குதியே!
விடமே கொண்ட பெருமானுர்
விரும்பி லரித்த வித்தகியே!
வினைவேரறுக்குந் தெல்லியம் பதித்
துர்க்கா! துர்க்கா!! துர்க்காவே!!!

— செ. அரியகுணசிங்கம்

(இன்று துர்க்கை அம்மன் வேட்டைத் திருவிழா)

கம்பியூட்டர் கல்வி
Diploma in Computer Programming
& Data Processing
Basic Language
4 Months
Weekend Classes
Commencement: 16 — 09 — 89
Fees Only Rs 300/- per month
★ Lectures by members of I. D. P. M (London)
★ Practical on I. B. M (Compatibles)
★ தமிழிலும் விளக்கங்கள்
★ பயிற்சி முடிவில் Diploma சான்றிதழ்
★ வெளிநாடு செல்பவர்களுக்கோர் அரிய வாய்ப்பு
C. I. M. A, I. D. P. M, I. A. B
Short Hand & Typing
நடைபெறுகின்றன.
SCHOOL OF BUSINESS ADMINISTRATION
(Leaders in Computer Education)
16, 3rd Cross Street,
(O L R தேவாலய மேற்குப்பக்கம்)
JAFFNA.
(சி-3616)

## நூறுவது ஜயந்தி

யாழ்ப்பாணம், செப்; 9

சிவத்திரு இத: மு: ப: சிதம்பரநாதச் செட்டியாரின் நூறுவது ஜயந்தி விழா இன்று சனிக்கிழமை மாலை 4 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி சிவஞான வைரவர் ஆலயத்தில் நடைபெறவிருக்கிறது;

சட்டத்தரணி ச: செல்வராசா தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நல்லை ஆதின முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்குவார்;

யாழ்; பல்கலைக்கழக வரலாற்றுத் துறைத்தலைவர் கலாநிதி எஸ் கே; சிற்றம்பலம், செல்வி புஷ்பா செல்வநாயகம் வடகோவை அ; சபாபதிப் பிள்ளை ஆகியோர் சிறப்புரை ஆற்றுவார்கள்; (ச- 3)

## நாடகம்

யாழ்பல்கலைக்கழக நுண்கலைத் துறையினர் தயாரித்து வழங்கும் மஹாகவியின் ''புதியதொருவீடு'' நாடகம் நாளைய தினம் ஞாயிற்றுக் கிழமை பல்கலைக்கழக கைலாசபதி அரங்கில் காலை 9. 30 மணிக்கு ஆரம்பமாகும்;

கலாநிதி சி: மௌனகுரு கரு சண்முகலிங்கம் ஆகியோரின் நெறியாள்கையில் கண்ணனின் இசையமைப்பில் உருவான இந்நாடகத்தில் யாழ் பல்கலைக்கழக மாணவர்கள் பங்கு கொள்கிறார்கள்; அன்றைய தினம் பிற்பகல் 3. 30 மணிக்கும் இந்த நாடகம் நடைபெறும்; (சு)

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினை
பெறுவதற்கான
கம்பியூட்டர் கல்வி

Diploma in Data Processing and Computer Programming in Basic Language
ஆரம்பம்: 15 - 09 - 1989 [திங்கள், புதன், வெள்ளி]
பயிற்சிக் காலம்: 3 மாதம்
சேரும் போது செலுத்த வேண்டியது ரூபா 500/

O/L படித்த இருபாலாரும் சேரலாம்; குளிரூட்டப்பட்ட அறையில் கூடிய நேர செய்முறைப் பயிற்சி I. B M (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும்; தமிழிலும் விளக்கம் அளிக்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்;

குறிப்பிட்ட தொகை மாணவ மாணவியரே சேர்க்கப்படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவு செய்யவும்;

விண்ணப்ப முடிவுத் திகதி: 14-09-1989

UNIKCO
COMPUTER CENTRE
No: 5, Power House Road,
2nd Lane, Jaffna.
(Near Sub - Post Office)
(C/3640)

விசேட ஆங்கில வகுப்பு

க பொ. த சா/உ, தொழில்நுட்ப. பல்கலைக்கழக பட்டதாரி மாணவர்களுக்குரிய

AN ADVANCED ENGLISH COURSE

இரு முன்னணி ஆசிரியர்களின் இணைந்த சேவை
திரு. K. Sabanayakam திரு. R. Niles
4 மாத தீவிரப்பயிற்சி
ஆரம்பம்: 16 - 09 - 1989

பாடநெறி:
1. கடிதங்கள், கட்டுரைகள் எழுதும்பயிற்சி
2. வாசித்து விளங்கிக் கொள்ளுதல்
3. பிறருடன் பிழையின்றிப் பேசுதல்

(G; C; E. O/L சித்தியடைந்தவர்கள், அதற்கு மேற்பட்ட தரம் உடையோருக்கு மட்டுமே உரியது)

★ இலவச அச்சடித்த பாடக்குறிப்புகள்
★ வகுப்புகள் சனி, ஞாயிறு தினங்களில் மட்டும் (மு; ப; 10-00—12-00)
★ கட்டணம் ரூபா 300. 00
(முழுப் பயிற்சிக்கும் 2 தவணைகளில் செலுத்தலாம்)

விபரங்களுக்கு:-
ASTAN INSTITUTE
101/10, Stanley Road, Jaffna.
(மக்கள் வங்கிக்கருகாமையில்) (இ/3629)

## 31 ஆம் நாள் நினைவு அஞ்சலியும் வீட்டுக் கிருத்திய அழைப்பிதழும் நன்றி நவிலலும்



திருமதி கணபதிப்பிள்ளை நாகம்மா

தோற்றம்: 01-05-1912
மறைவு: 10-08-1989

அன்பின் உறைவிடமாய், பாசத்தின் சிகரமாய் வாழ்ந்து எம்மவரையெல்லாம் ஆழ்ந்த துயரத்தில் ஆழ்த்தி விட்டு இறைவனிடம் சேர்ந்த எங்கள் குடும்பத் தலைவியே! நீங்கள் மறைந்து 31 நாட்கள் சென்றாலும் இன்று எங்கள் கண் முன்னே நடமாடும் தெய்வமாகக் காட்சி தருகிறீர்கள்.

09 - 09 - 1989 சனிக்கிழமை (இன்று) எமது இல்லத்தில் நடைபெற இருக்கும் வீட்டுக்கிருத்தியத்திலும் மதிய போசனத்திலும் கலந்து அன்னாரின் ஆத்ம சாந்திக்காகப் பிரார்த்திக்குமாறு உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்;

அத்துடன் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்டோருக்கும் பல்வேறு விதத்தில் உதவிய யாவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவிக்கின்றோம்;

பிரிவால் துயருறும்:
கணவர், மக்கள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்;

'பரமேஸ்',
8 ஆம் வட்டாரம்,
புங்குடுதீவு.
(2093)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் முருகா

**செல்வச்சந்நிதி முருகன் இரதோற்சவ தினம்**

ஆலய வீதியில் மில்க்வைற் விளம்பர விற்பனை வாகனம் உங்களுக்காகக் காத்திருக்கும். ரூபா 20/-க்கு மில்க்வைற் சோப் வாங்கி அன்பளிப்பாக அகத்தி கன்று கந்தரனுபூதி, முருகன் ஸ்ரிக்கர், கவர்ச்சியான பொலித்தீன் பாக்கில் பெற்றுக் கொள்ளுங்கள் மில்க்வைற் அபிமானிகள் மில்க்வைற் மேலுறைகளைக் கொடுத்து உரிய பரிசுப் பொருட்களைப் பெற்றுக்கொள்ளுங்கள்.



# சஞ்சீவி

09 - 09 - 1989 சனிக்கிழமை



ஓம் சக்தி

**இலவச அன்பளிப்பு**

தெல்லிப்பளை அருள்மிகு துர்க்காதேவி இரதோற்சவ தினத்தன்றும் தீர்த்த விழா அன்றும் ஆலய வீதியில், "மில்க்வைற்" விளம்பர விற்பனை வாகனத்தில் ரூ.20/ க்கு எமது தயாரிப்புகளை வாங்குவோருக்கு அகத்திக்கன்று, சகலகலாவல்லிமாலை புத்தகம், சரஸ்வதி ஸ்ரிக்கர், கவர்ச்சியான பொலித்தீன் பை முதலியனவும்,

மில்க்வைற் மேலுறைக்கான பரிசுப் பொருட்களும் பெற்றுக்கொள்ளலாம்.


## ஹெவி டீசல் வந்தது; சுழற்சி மின் தடைப்படாது

யாழ்ப்பாணம், செப் 9

சுன்னாகம் மின்சார நிலைய ஜெனரேற்றர்களுக்குத் தேவையான ஹெவி டீசல் நேற்று ரயில் மூலம் அங்கு கொண்டு செல்லப்பட்டது.

26 ஆயிரத்து 370 லீற்றர் ஹெவி டீசலுடன் ஜெனரேற்றர்களுக்குத் தேவையான வேறு எண்ணெய் வகைகளும் ரயில் மூலம் எடுத்துச் செல்லப்பட்டுள்ளன.

இன்றும் ரயில் மூலம் ஹெவி டீசல் கொண்டு வரப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

இதனால் சுழற்சிமுறை மின் விநியோகத்தில் ஏற்பட இருந்த தடங்கல் தவிர்க்கப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டது. (ஒ-10)


UNIVERSITY OF JAFFNA

**Tender Notice**

Supply Of Generators

Sealed Tenders are invited for the Supply of 3 Nos, 25 KVA Generaters;

Tenders should Specify the following details:

a. Make & Country of Origin

b. Engine Make

c. Guranteed Period

d. Availability Of Stock

e. Terms and Conditions about Payments Catalogues also should be annered,

Generators to be delivered at the University of Jaffna;

All envelopes containing the tenders be marked "Tender for 25 KVA Generators" and forwarded to Bursar. University of Jaffna, on or before 20-69-1989 at 3.00 P.m. and tenders will be opened on the same day at 8.30 P.m. in the Board Room of the University of Jaffna.

**Actg. Registrar.**

(C/3320)


### சாப்பிட்டு..

டிருந்த சமயம் அது திடீரென வெடித்ததாகச் சொல்லப்பட்டது.

★ புத்தளத்தில் தீவிரவாதி ஒருவர் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்டார்

★ அனுராதபுரம் மாவட்டத்தில் 14 தீவிரவாதிகள் சரண் அடைந்தனர் என்று அரசு அறிவித்தது. (ஓ-எ-1)

### போலிச்சான்றிதழ்.

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

களினால் பாதிக்கப்படாதவர்கள் கூட தாம் இராணுவ நடவடிக்கையில் பாதிக்கப்பட்டதாகக் கூறி போலிச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்துள்ளதும்—

இயற்கையாக மரணமடைந்தவர்களின் பெயரில் அவர்கள் இராணுவ நடவடிக்கையால் மரணமடைந்ததாகக் கூறி உறவினர்கள் போலி இறப்புச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்துள்ளதும்— கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

இந்த மோசடி விண்ணப்பதாரிகளால் உண்மையாகப் பாதிக்கப்பட்டவர்களுக்கும் நிவாரணம் வழங்குவதில் தாமதம் ஏற்படலாம் என்று நிவாரணம் வழங்குவதற்குப் பொறுப்பான உயரதிகாரி ஒருவர் சஞ்சீவிக்குக் கவலை தெரிவித்தார் (அ-10)

### அமைதிப்படை..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

பற்றி கருத்துச் சொல்ல இயலாது.

இலங்கைக் குழுவுடன் விரிவாகப் பேசினோம். இந்திய — இலங்கை சம்பந்தப்பட்ட பிரச்சினைகளில் இரு நாடுகளும் ஓர் இணக்கத்தைக் கண்டுள்ளன.

நல்லதொரு உடன்பாடு என்று நாம் கருதும் ஒன்றை நாம் கண்டுபிடித்திருக்கிறோம்.

இது சம்பந்தமாக இலங்கையின் கருத்து அந்த நாட்டில் இருந்து வெளியாகும் வரை நாம் காத்திருக்கப் போகிறோம் — என்று திரு. ராஜீவ் காந்தி குறிப்பிட்டார்.

(அ-எ)


எமது புதிய வெளியீடு

அர்ஜுன் — சீதா — S. S. சந்திரன் நடித்த

ஏ. வி. எம். இன்

**'சொந்தக்காரன்'** (ஒறிஜினல்)

**வீடியோ விமல்**

117, மானிப்பாய் வீதி,

ஐந்து சந்தி, யாழ்ப்பாணம். (1934)



## தேவை

(ஜக்பொட்) சோலட்மெஷின்கள்

[Jack Pot] Slot Machines

Rol - A Top/ Century/

Golden Bell chief/

Wareagle

✱ நல்ல விலை தரப்படும்.

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்.

**Mr. A. C. H. Najumudeen**

C/o Murshitha Trades

75, Grand Bazaar,

JAFFNA. (2071)



இப்பத்திரிகை நியூ உதயன் பப்பிளிகேஷன்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 198/8 இல் உள்ள அச்சகத்தில் 09-09-1989இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.


வடக்கு - கிழக்கு

## புனர் நிர்மாணப் பணிகளுக்கு ஐ.நா. அபிவிருத்தித் திட்டம் உதவும்

திருகோணமலை, செப். 9

வடக்கு—கிழக்கு மாகாணத்தில் மேற்கொள்ளப்படும் புனர்நிர்மாணப் பணிகளுக்கு, முகாமைத்துவ ரீதியிலான உதவிகளை வழங்க ஐக்கியநாடுகள் சபையின் அபிவிருத்தித் திட்ட (யு. என். டி. பி) நிறுவனம் முன்வந்திருக்கிறது.

முகாமைத்துவத்துக்குத் தேவைப்படும் ஆளணியினரையும், ஏனைய உதவிகளையும் வழங்குவதோடு, புனர்வாழ்வு, புனர்நிர்மாணப் பணிகளைக் கண்காணிக்க கம்யூட்டர் நிலையம் ஒன்றையும் யு என். டி பி. அமைத்துக் கொடுக்க இணக்கம் தெரிவித்துள்ளது.

இத்தகவலை வடக்கு — கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் தெரிவித்தார்.

முகாமைத்துவத் துறை சார்ந்த முதற்கட்ட உதவியாக நிர்ம்சித் திட்டம், தொழில் நுட்பம், கம்பியூட்டர் ஆகிய பிரிவுகளுக்கான அதிகாரிகளை நியமிக்க யூ என். டி. பி முன்வந்திருக்கிறது. புனர்நிர்மாண திட்டங்களைப் பரவலாகச் செயற்படுத்த நிர்ம்சித் திட்ட இணைப்பாளரை ஏற்கனவே யூ. என். டி. பி. நியமித்துள்ளது. மட்டக்களப்பு மேலதிக அரசாங்க அதிபராக பணிபுரிந்த திரு. பூ. சங்காரவேல் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

புனர்நிர்மாணப் பணிகளை மேற்கொள்ளும்போது தொழில்நுட்ப நிபுணர்களின் தேவையிருப்பதைக் கருத்தில் கொண்டு அதற்கான அதிகாரிகளை நியமிக்க யூ. என். டி. பி துரித நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. மேலும் புனர்வாழ்வு நிதி எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது, புனர் நிர்மாண வேலைத் திட்டங்களின் முன்னேற்றம், மந்தகதியில் மேற்கொள்ளப்படின் அதற்கான காரணங்கள், துரிதப்படுத்தவேண்டிய நடவடிக்கைகள் என்பவற்றை கம்பியூட்டருடாகக் கணித்து உரிய நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு கம்பியூட்டர் நிலையமொன்றையும் அமைக்க யூ என். டி. பி. முன்வந்திருக்கிறது. (அ-150)

### அடம்பனில் அறுவர் கைது

அடம்பன் சகாயவீதிப் பகுதி நேற்று முன்தினம் (வியாழக்கிழமை) சுற்றி வளைக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டது.

தேடுதலின்போது அப்பகுதியைச் சேர்ந்த ஆறுபேர் விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டனர்.

அந்த அறுவரும் வருமாறு: பி.கன்னிநாயகம்(34 வயது) எஸ் சந்திவேல் (23 வயது); அருளப்பு (45 வயது), பி. ஜெயக்கிரீடம் (50 வயது), தி. ஜஸ்ரின் (19 வயது), ரூபங்கா (45 வயது).

இந்த அறுவரும் அடம்பன் முகாமில் தடுத்துவைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஓ-ரி)

### நூலகம் ஒரு வாரத்துக்கு மூடப்படும்

கண்டிகுளி பொது நூலகம் இம் மாதம் 12ஆம் திகதி தொடக்கம் ஒரு வார காலத்துக்கு மூடப்பட்டிருக்கும்.

இருப்பு எடுப்பதற்காக நூலகம் மூடப்பட உள்ளது என்று பிரதம நூலகர் கலாநிதி வே. இ. பாக்கியநாதன் தெரிவித்தார். (இ)

### இந்திய..

ஒன்றின் கீழ் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் பயன்படுத்த என்று இவை அனுப்பிவைக்கப்பட்டன—என்று அவர் கூறினார். (ஓ-எ)

### அமைச்சர்-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ரேட்டர் கம்பியூட்டர் கருவி பழுதான நிலையில் உள்ளது. மற்றையது நிர்மாணக் கட்டத்தில உள்ளது.

சுவிஸ் நிறுவன அதிகாரி வந்து கம்யூட்டர் கருவியைப் பொருத்தினால் ஒரு வாரத்தில் ஒரு ஜெனரேட்டர் மூலம் மின் வழங்க முடியும் என தெரிவிக்கப்பட்டது. மற்ற ஜெனரேட்டரை ஒரு மாதத்தில் இயங்க வைக்க முடியும் என்று தெரிவிக்கப்பட்டது. (ஓ-ஏ)

## மின்சார விநியோக நேர அட்டவணையில் மாற்றம்

### 12ஆம் திகதி முதல அமுலுக்கு வரும்

யாழ்ப்பாணம், செப். 9

சுன்னாகம் மின்சார நிலையத்தில் உற்பத்தி செய்யப்படும் மின்சாரத்தைச் சுழற்சிமுறையில் வழங்கும் நேர அட்டவணையில் எதிர்வரும் 12 ஆம் திகதி முதல் மாற்றம் செய்யப்படவிருக்கிறது.

இப்போதுள்ள நடைமுறையின்படி யாழ் நகரப் பகுதிக்கு மூற்பகல் 11 மணிக்குப் பின்பே மின்சாரம் வழங்கப்பட்டு வருகிறது.

காலைநேரத்தில் பருத்தித்துறை, சாவகச்சேரி, வட்டுக்கோட்டை ஆகிய பகுதிகளுக்கு சுன்னாகம் மின் நிலையத்தில்இருந்து நேரடியாக வழங்குவதால் யாழ் போதனா வைத்தியசாலைக்கு சில வேளைகளில் காலை நேர மின்சாரம் தடைப்படுகிறதாம். அதனால் ஆஸ்பத்திரியில் அவசர சத்திர சிகிச்சைகள் பாதிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து வைத்தியசாலைக்கு காலையில் மின்சாரம் ஒழுங்காக வழங்கும் வகையில் இப்போது நடைமுறையில் உள்ள நேர அட்டவணையில் மாற்றம் செய்யப்பட உள்ளது [அ-8]

## நாவலர்மட வயோதிபர்களை விடுவிக்க தீவிர முயற்சி

வல்வெட்டித்துறை, செப் 9

நவிண்டில் நாவலர் மடத்தடியில் நேற்று முன் தினம் (வியாழக்கிழமை) இடம் பெற்ற அசம்பாவிதத்தை அடுத்து அந்தப் பகுதியில் இருந்து கூட்டிச்செல்லப்பட்ட வயோதிபர்கள் சிலர் நேற்று நண்பகல்வரை விடுவிக்கப்படவில்லை.

இவர்களை விடுவிக்கும் முயற்சியில் நவிண்டில் பிரசைகள் குழுத் தலைவர் திரு. எஸ் கணபதிப்பிள்ளை, செயலாளர் திரு. எஸ். கதிரவேற்பிள்ளை ஆகியோர் தீவிரமாக ஈடுபட்டிருந்தனர்.

அசம்பாவிதத்தின் போது நாவலர் மடத்தடியிலுள்ள சிலர் காயமடைந்தனர் என்று தெரிவிக்கப்பட்டது.

அவர்கள் விவரம் வருமாறு: செல்லையா சந்திரசேகரம் (வயது 60), தம்பையா இரத்தினம் வயது 56), எஸ். சிதம்பரநாதன் (வயது 58), தம்பையா தவபாலசிங்கம் (வயது 54), லட்சுமணன் கிருஷ்ண குமார் (வயது 40), லட்சுமணன் சாந்தகுமார் (வயது 37) எஸ். வைத்திலிங்கம் என்போர் ஆவர்.

அன்று இடம்பெற்ற ஷெல் தாக்குதலில் நவிண்டில், நாவலர் மடம் பகுதிகளைச் சேர்ந்த சிலரின் வீடுகள் சேதமுற்றதாகவும் கூறப்பட்டது. (ஓ-160)

## நந்தாவில் அம்மன் கோவில் இரவில் உடைத்து திருட்டு

யாழ்ப்பாணம், செப். 9

கொக்குவில், நந்தாவில் அம்மன் கோவில் கதவை உடைத்த திருடர்கள், அம்மன், ஆறுமுக சுவாமி சிலைகளை சேதமாக்கியதுடன் அங்கிருந்த பெறுமதி மிக்க பொருள்களையும் அபகரித்துச் சென்றுள்ளனர்.

மூல விக்கிரகமான அம்மன் சிலையைத் தகர்க்க முயற்சி மேற்கொள்ளப்பட்டதாகவும் கூறப்பட்டது.

அம்மனின் வெள்ளியிலான நகைகளும் திருடப்பட்டுள்ளன. புதன்கிழமை இரவு இச்சம்பவம் நிகழ்ந்திருக்கிறது. [ஓ-3]

### இன்றைய கலந்துரையாடல்

யாக்கரை அமைதிப்படை முகாமில் இன்று சனிக்கிழமை கலந்துரையாடல் ஒன்று நடைபெற ஏற்பாடாகி உள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வடமராட்சிப் பகுதியில் உள்ள பிரசைகள் குழுவினரும், அமைதிப்படை உயர் அதிகாரிகளும் கலந்துகொள்வர் என நம்பிக்கையாக அறிய வந்துள்ளது.

பிரஸ்தாப கலந்துரையாடலில் மக்களின் பாதுகாப்பு அவசியமற்ற தேடுதல்கள், இளைஞர்கள் கண்டபடி கைது செய்யப்படுதல் என்பன தொடர்பாக பிரசைகள் குழுக்கள் சார்பில் சில கோரிக்கைகளை முன்வைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாம்.

இந்தக் கலந்துரையாடலின் போது அமைதிப்படை தரப்பில் ஓர் முக்கிய அரசியல் முயற்சி குறித்துப் பிரஸ்தாபிக்கப்படலாம் என்றும் வடமராட்சிப் பகுதியில் பேசப்படுகிறது. (அ-160)

### கள்ளப்பாடு மக்களின் பீதி!

முல்லைத்தீவில் கள்ளப்பாடு கிராம மக்கள் இரவுப் பொழுதை பீதியுடன் கழிக்கின்றனர்.

இன்னும் சிலர் வீடுகளில் தங்காமல் வேறு இடங்களில் இரவைப் போக்குகின்றனர்.

இரவில் ஷெல் தாக்குதல்களும் துப்பாக்கிப் பிரயோகங்களும் மேற்கொள்ளப்படுவதே இதற்குக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. [ஓ-94]

### புலோலி.-

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

மோதல் சம்பவம் ஒன்று இடம்பெற்றது.

மோதலின்போது பொது மக்களில் சிலர் காயமடைந்தனர்.

பீதியினால் மக்கள் இப்பகுதியை விட்டு இடம் பெயர்ந்தனர். போக்குவரத்துச் சேவைகளும் மந்திகை, மாலிசந்தியில் இருந்து நடைபெற்றன. (அ-160)

## வசதிக் கட்டண ஆசிரியருக்கு விடுக்கப்பட்டுள்ள அழைப்பு

யாழ்ப்பாணம், செப். 9

யாழ் மாவட்டத்தில் வசதிக் கட்டணத்தில் கடமையாற்றும் ஆசிரியர்களை எதிர்வரும் திங்கட்கிழமை காலை 10 மணிக்கு ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் யாழ் காரியாலயத்துக்கு வருகைதருமாறு மாகாணசபை உறுப்பினர் திரு. சே. இரவீந்திரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வசதிக்கட்டண ஆசிரியர் சங்கங்கள் நேரிலும், மகஜர்கள் மூலமாகவும் வடக்குக் கிழக்கு மாகாணசபை உறுப்பினர்களுக்கும், ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கும் விடுத்த வேண்டுகோளைத் தொடர்ந்து. திரு கே. இரவீந்திரன் மாகாண அரசுடனும் இவ்விடயம் தொடர்பாகப் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றார்.

தொண்டர் ஆசிரியர்களின் நியாயமான கோரிக்கைகளை மாகாண அரசு ஏற்றுக்கொண்டுள்ள இச் சந்தர்ப்பத்தில், மேலதிக விவரங்களைத் திரட்டும் பொருட்டும், சில முக்கிய விடயங்களைத் தொண்டர் ஆசிரியர்களுக்கு அறிவுறுத்தும் நோக்குடனுமே மேற்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்பட்டது. [ஒ

## மன்னாரில் அடகு நகை மீளளிப்பு

யாழ்ப்பாணம், செப் 8

மன்னார் மாவட்டத்தில், முருங்கன் பகுதி மக்களின் இரண்டாம் தொகுதி அடகு நகைகள் இன்று 9 ஆம் திகதியும், நாளை 10 ஆம் திகதியும் மன்னார் மக்கள் வங்கிக் கிளையில் மீளளிக்கப்பட உள்ளன.

அடகு நகைகள் மன்னாருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக மக்கள் வங்கி வட்டாரங்கள் தெரிவித்தன. (ஓ-10)


## மரண அறிவித்தல்கள்

### நடராசா சிவகுமாரன் (சிவா) (நயினாதீவு)

நயினாதீவு 6ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த நடராசா சிவகுமாரன் அகால மரணமானார். இவர் நடராசா-புவனேஸ்வரி தம்பதிகளின் ஏக புதல்வனும், மதிவதனா, நிரஞ்சனா, சிவரஞ்சனா, நந்தனா ஆகியோரின் சகோதரரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் 10-9-89 ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு நயினாதீவில் நடைபெறும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

தகவல்

S. K. N. முத்துலிங்கம்

நயினாதீவு 6 (2096)

### திரு. கண்ணப்பர் சபாபதி [அச்சுவேலி]

திரு. கண்ணப்பர் சபாபதி அவர்கள் (இளைப்பாறிய தபால் ஊழியர்) 07-09-1989 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற கண்ணப்பர் சின்னாச்சியின் இளைய மகனும், திருமதி இராசமுத்துவின் அன்புக் கணவரும், திரு. திருமதி தம்பிப்பிள்ளை கோணேஸ்வரி அவர்களின் மாமனாரும், தர்மசீலன் (சுவிஸ்), உதயகுமார் (சுவிஸ்), உதயராணி (ஆசிரியை), உதயதாஸ் (சுவிஸ்), விஜயதாஸ் (மாணவன்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை 10-09-1989 நாளை காலை 10-00 மணியளவில் அச்சுவேலியில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

கணபதிப்பிள்ளை தம்பிப்பிள்ளை

மகா வித்தியாலய வீதி,

அச்சுவேலி. [ஒ/3329]

### திருமதி கனகம்மா மார்க்கண்டு

திருமதி கனகம்மா மார்க்கண்டு (ரோசம்மா) 01-09-1989 அன்று காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிர்காமசேகரம்பிள்ளை மார்க்கண்டு (ஓய்வுபெற்ற கிளப்பர். மத்திய வங்கி) அவர்களின் அன்பு மனைவியும், சண்முகராசா (இலங்கை வங்கி, கொழும்பு), டாக்டர் தேவராசா (லண்டன்), தம்பிராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், அன்னம்மா, காலஞ்சென்ற சின்னத்துரை, அப்புத்துரை, செல்லம்மா, இராசம்மா ஆகியோரின் சகோதரியும், லீலாவதி, மானல் ஆகியோரின் மாமியாரும், டாக்டர் ஜெயபாலன், செழுமதி, வளர்மதி, ஜெயமதி, யோகமதி, டினேஸ், சுரேஸ் ஆகியோரின் பேத்தியாரும், ப்ரீத்தியின் பூட்டியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் 03 09-1989 அன்று இல. 20, பின்டோ பிளேஸ், வெள்ளவத்தை இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் கனத்தை மயானத்தில் இந்து சமய முறைப்படி தகனம் செய்யப்பட்டது. இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

பிற்குறிப்பு: தவிர்க்க முடியாத காரணங்களினால் முன் கூட்டியே அறிவித்தல் தர முடியவில்லை என்பதை மனவருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

தகவல்:

இல. 20, பின்டோ பிளேஸ், வெள்ளவத்தை. மா. சண்முகராசா [2127]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

NESON'S
Funeral
Undertakers
Florist
● Caskets, Embalming,
Funeral Coaches ●
No. 563, Hospital Road,
Vembadi Junction, Jaffna.

சஞ்சீவி சஞ்சிகை

09 - 09 - 1989 சனிக்கிழமை

அந்தியகால சேவைக்கு
உங்கள் அருகிலேயே இருக்கும் அன்பன்!
"நேசன்ஸ்"
★ பிரேதப் பெட்டிகள்
★ ஊர்வல வாகனம்
★ மலர்வளையங்கள் ★ எம்பாமிங்.
நேசன்ஸ்
(வேம்படி சந்தி)
563, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

# பிற உலக ஜீவராசிகளின் செய்திகளை பெற நாஸா விஞ்ஞானிகள் தீவிரம்

கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் வானியல் வல்லுநர்கள் ஒரு திகைப்பூட்டுகிற எச்சரிக்கையை விடுத்தார்கள்.

புதிய தலைமுறையைச் சேர்ந்த செயற்கைக் கோள்களிலிருந்து வெளிப்படும் வலுமிக்க சிக்னல்கள் வானொலி வானியல் ஆய்வுகளுக்குத் தடையேற்படுத்திவிடும் என்பதுதான் அது.

விண்வெளியிலிருந்து இயற்கையாக வருகிற வானொலிக் கதிர்களை ஆராய்வது வானொலி வானியல் (Radio Astronomy) எனப்படும் துறையாகும்.

பிரிட்டனின் தலைமை வானியல் நிபுணரான ஸர். பிரான்ஸிஸ் கிரஹாம் -ஸ்மித் 'இந்தப் பிரச்சினை உலகளாவியது' என்கிறார்.

### வானொலி சிக்னல்கள்

கூடிய விரைவில் பூமியில் எந்த ஓர் இடத்திலிருந்தும் வானொலி வானியல் ஆய்வுகளைச் செய்ய முடியாமல் போகலாம்.

பிரபஞ்சத்தில் வேறு பல கோள்களில் இருப்பதாக நம்பப்படுகிற நாகரிக சமூகங்கள் மங்கலான வானொலி சிக்னல்களை அனுப்பிக் கொண்டிருந்தால் அவற்றைப் பதிவு செய்ய முடியாமல் செயற்கை கோளிலிருந்து வரும் வலுவான வானொலி சிக்னல்கள் அமுக்கி விடும் என்று நாஸா விஞ்ஞானிகள் கவலைப்படுகிறார்கள்.

### இடையூறு

பிரபஞ்சத்தின் பல மூலைகளிலிருந்தும் வருகிற மங்கலான வானொலி அலைகளை வானொலித் தொலைநோக்கிகள் (Radio Telescopes) பதிவு செய்கின்றன.

தொடக்கத்திலிருந்தே பூமியிலுள்ள வானொலி நிலையங்களிலிருந்து வெளிப்படும் வானொலி அலைகள் குறுக்கிட்டு வானொலி வானியல் ஆய்வுகளுக்கு இடையூறு செய்துவருகின்றன.

### வானிலிருந்து....

பூமியிலுள்ள வானொலி மூலகங்களிலிருந்து வரும் வானொலி அலைகள் அடிவானத் திசையிலிருந்துதான் வானொலித் தொலைநோக்கிகளை நோக்கிவரும். அவற்றைப் பதிவுசெய்யாதவகையில் வானொலித் தொலைநோக்கிகளை வடிவமைக்க முடியும்.

ஆனால், உச்சிவானிலுள்ள வானொலி அலை பரப்பிகள் பெரும் இடைஞ்சலாக உள்ளன.

இராணுவ விமானங்களிலிருந்து வரும் வானொலி சிக்னல்கள் பல வானொலித் தொலைநோக்கிகளின் காட்சிப் பதிவுகளை நாசமாக்கியிருக்கின்றன.

பறக்கும் விமானங்களின் உலோக உடற்பரப்புகள் எங்கெங்கேயிருந்தோ வருகிற வானொலி அலைகளைப் பதிவு செய்கின்றன.

### செயற்கைக் கோள்கள்

வானிலிருந்து கொண்டு தரை, கடல், வான் வழிப் போக்குவரத்துகளை வழிநடத்தும் செயற்கைக்கோள்கள் (Navigation Satellites)

**- தி. மேனகன் -**

மிகக் கடுமையான பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றன.

அவை வலுமிக்க வானொலி சிக்னல்களை இடைவிடாது பூமிக்கு அனுப்பிக்கொண்டே இருக்கின்றன.

சோவியத் யூனியன் குளோநாஸ் (Glonass) எனப்படும் வழி நடத்து செயற்கைக் கோளை விண்ணில் ஏவும் திட்டத்தை மேற்கொண்டுள்ளது.

அவை 1,600 மெகாஹெர்ட்ஸ் அதிர்வெண் அலைகளைப் பரப்புகின்றன. அவை ஹைட்ராக்சில் அதிர்வெண் பதிவுகளுக்கு இடையூறு செய்கின்றன. இந்த ஹைட்ராக்சில் உறுப்புகள் விண்மீன்கள் உருவாகிற இடங்களிலுள்ளன.

அவற்றிலிருந்து வரும் வானொலி அலைகளை ஆராய்ந்து விண்வெளித் தூசியிலிருந்தும் வாயுக்களிலிருந்தும் விண்மீன்களும் கோள்களும் உருவான விதத்தைக் கண்டுபிடிக்கலாம்.

பிரான்சிலுள்ள நான்கே (Nancay) வானொலி தொலைநோக்கி எல்லா குளோநாஸ் செயற்கைக் கோள்களும் அடி வானத்திற்குக் கீழே போன பிறகுதான் செயற்பட முடிகிறது.

அமெரிக்காவின் நேவ்ஸ்டார் (Navstar) வழிநடத்து செயற்கைக்கோள்கள் 1.381 மெகாஹெர்ட்ஸ் அதிர்வெண்ணில் அலை பரப்புகிறது.

பெருந் தொலைவிலுள்ள உடுமண்டலங்களிலுள்ள ஹைட்ரஜன் அணுக்களில் இருந்து வரும் வானொலி அலைகளுடன் அதுகுறுக்கிடும்.

அந்த வானொலி அலைகள் உடுமண்டலங்கள் உருவாகும் விதத்தைப் பற்றி முக்கியமான தகவல்களை அளிக்கிறவை.

### பிற உலக மக்கள்

நாஸா நிர்வாகம் 1992 முதல் 1998 வரை வேறு உலகங்களிலிருந்து ஏதாவது சமூகங்கள் நமக்கு வானொலி மூலம் செய்தியனுப்பிக் கொண்டிருக்கின்றனவா என்பதைத் தீவிரமாக ஆராயப் போகிறது.

அது 1,000 முதல் 10,000 மெகாஹெர்ட்ஸ் வரை அதிர்வெண்ணுள்ள வானொலி அலைகளைப் பதிவுசெய்து ஆராயும்.

அனாவசியமான குறுக்கீடுகளை வடிகட்டிவிடுகிற சாதனங்களைத் தமது அலைவாங்கிகளில் பொருத்திச் சோதித்து வருகிறது.

எனினும் பூமியிலுள்ள மக்கள் அனுப்புகிற செய்திகளும் அவற்றிப் பதிவாகத் தான்போகின்றன.

வேற்றுலகங்களிலிருந்து இதுவரை சிக்னல்கள் ஏதும் கண்டுபிடிக்கப்படவில்லை. அவை மிகவும் வலுக்குறைவாக இருப்பது இதற்குக் காரணமாக இருக்கலாம்.

இந்த நூற்றாண்டின் முடிவுக்குள் அத்தகைய சிக்னல்களைக் கண்டுபிடித்து விட வேண்டும்.

அதன் பிறகு பூமியிலுள்ள வானொலி மூலங்களின் அதிகரித்த குறுக்கீடு காரணமாக வெளியுலகச் செய்திகளைக் கண்டுபிடிப்பது முடியாமலே போய்விடும்.

விண்வெளியில் வானொலி தொலைநோக்கிகளை நிறுவி பூமி மற்றும் செயற்கைக் கோள்களிலிருந்து வரும் வானொலி குறுக்கீடுகளைத் தவிர்க்கலாம்.

ஆனால் அதற்குப் பெரும் பணச் செலவு பிடிக்கும்.

குறுக்கீடுகளே இல்லாத ஒரே இடம் சந்திரனின் மறு பக்கம்தான்.

அங்கு ஒரு வானொலித் தொலைநோக்கியை நிறுவினால் பூமியிலிருந்து எந்த வானொலி அலையும் அதைப் பாதிக்காது.

ஆனால் அதற்கு ஆகும் செலவு மலைப்பூட்டுவதாகும்.

கருவியமைப்பை நிறுவுவதற்கே எல்லாப் பணத்தையும் செலவழித்துவிட்டால் அதை இயக்குவதற்கு ஆகும் செலவுக்குப் பணம் கிடைக்காது.

ஆனால் எதிர்காலத்தில் சந்திரனில் மனிதன் தளங்களை அமைக்கத் தொடங்கிவிட்டானானால், அலைக்குறுக்கீட்டுத் தொல்லை அங்கும் வந்துவிடும். (எ-4)

## கருத்துக் கலசம் — மயூரா

### நம்பிக்கை

நம்ப நட, நம்பி நடவாதே என்றும், நம்பினோர் கெடுவதில்லை என்றும் நம்பிக்கை குறித்து பலவாறுக் கூறப்படுவது உண்டு.

நம்பிக்கை மனித வாழ்வின் ஆதாரம். என்ன கெடுதல் நடந்தாலும், இனிமேலாவது நல்லது நடக்கும் என்ற ஒரு நம்பிக்கையுடன் தான் ஒவ்வொரு மனிதனும் வாழ்க்கையோடு ஒட்டிக் கொண்டிருக்கிறான். அவ்வாறு இல்லையெனில் துன்பம் வரும் பொழுதெல்லாம், வேதனை வரும் வேளையெல்லாம் மனிதன் தன்னை மாய்த்துக் கொள்வான். அப்படிச் செய்தால் மனித சமூகம் இயங்குவதற்கு வாய்ப்பு ஏது?

எந்தச் செயலும், விடயமும் நடந்த பின்னர்தான் நம்பிக்கையாகிறது; ஊர்ஜிதமாகிறது. இன்ன நாளில், இந்த நேரத்தில், இது நிச்சயமாக நடக்கும் என்று நம்பிக்கையுடன் இருக்கமுடியாது. எதிர்பாராத விதமாக இடையில் ஏதாவது இடையூறு வந்துவிடலாம். எதுவும் நடந்த பின்னர் தான் நிச்சயமாகிறதது.

எனினும் மனிதன் அது அப்படி நடக்கும் என நம்பியும், இது இப்படி நடக்கவேண்டும் என எதிர்பார்த்தும் தனது வாழ்க்கையை இயக்குகின்றான்; அதனால் தான் நம்பிக்கை மனித வாழ்வின் ஆதாரம் ஆகிறது.

அடுத்தவன் நல்லவன், நல்லதையே செய்வான் என்று பிறர்மீது வைக்கும் நம்பிக்கையும் ஒருவகை நம்பிக்கை. ஆனால் அந்த நம்பிக்கையைப் பேணாமல், நம்பிக்கைத் துரோகிகளாக நடப்பவர்களே இன்று அதிகம் உளர். ஒருவர் தன்மீது வைத்த நம்பிக்கையைக் காப்பாற்றி நாணயமாக நடந்து கொள்ள நினைக்காதவர்கள் சிலர்.

அதனால் மனிதன் ஒருவனை அடுத்தவன் நம்பி நடக்கத் தயங்குகிறான். அவனை நம்பி ஒரு காரியத்தில் இறங்கலாமா? சம்பந்தப்பட்டவன் நடுவழியில் நாசம்செய்து குழப்புவானா? அல்லது மோசம்செய்து மூழ்கடிப்பானா என்பதை, ஒன்றுக்குப் பல தடவைகள் சிந்தித்தே எதையும் செய்யத் துணியவேண்டிய தேவை எவருக்கும் உளது.

அடுத்தவனை நம்புவதை விட ஒருவனுக்குத் தன்னம்பிக்கை தேவை. தன்னம்பிக்கை உடையவன் தளம்பல் இல்லாதவன்; அடுத்தவனும் நம்பும்படி நடப்பான். தன்னம்பிக்கை உடையவன் பிறர் உதவியை நம்பியிருக்கும் தேவை உண்டாகாது.

வாழ்க்கையில் முன்னேற, வெற்றிகாண ஒவ்வொருவருக்கும் தன்னம்பிக்கையும், மற்றவர் நம்ப நடக்கும் பண்பும், நாணயமும் அவசியம். அவை இல்லாவிடில் வாழ்க்கை அந்தகாரமாகிவிடும்.

★

# தமிழ்ச் சிறுகதை வளர்ச்சியில் பாரதியார் பங்கு; தனி ஆய்வு நடத்தப்பட வேண்டும்!

தமிழகத்தில் விமரிசனத் துறையில் 'இலக்கிய இரட்டையர்'களாக மதிக்கப்படுபவர்கள் திரு. பி. ஜி. சுந்தரராஜனும் திரு. சோ. சிவபாதசுந்தரமும் ஆவர்.

சிட்டி என்றழைக்கப்படும் 80 வயது நிரம்பிய திரு. சுந்தரராஜன் 'மணிக்கொடி' காலத்து எழுத்தாளர்.

77 வயதான திரு. சோ. சிவபாதசுந்தரம் இலங்கைத் தமிழ் எழுத்தாளர். இலங்கை வானொலி, பி. பி. சி. வானொலி ஆகியவற்றில் பணிபுரிந்த இவர், 'ஒலிபரப்புக் கலை' என்ற நூலை எழுதிப் புகழ்பெற்றார்.

திரு. சிவபாதசுந்தரம் திரு. சுந்தரராஜனுடன் இணைந்து 'தமிழ் நாவல் நூறாண்டு - வரலாறும் வளர்ச்சியும்' என்றநூலை 1978இல் வெளியிட்டார்.

இப்போது இருவரும் கூட்டாக 'தமிழ்ச் சிறுகதை: வரலாறும் வளர்ச்சியும்' என்ற ஆராய்ச்சி நூலை வெளியிட்டிருக்கின்றனர்.

தற்போது லண்டனில் நிரந்தரமாக வசித்து வரும் திரு. சிவபாதசுந்தரம் அண்மையில் சென்னைக்கு விஜயம் செய்தார். புதிய நூலுக்கு இறுதி வடிவம் கொடுக்கும் முயற்சியாக அந்த விஜயம் அமைந்திருந்தது.

அச்சமயம் திரு. சிவபாதசுந்தரம் தமிழ் சிறுகதை வளர்ச்சி, இன்றைய நிலை பற்றி அளித்த பேட்டி இங்கு கேள்வி-பதில் வடிவில் தரப்படுகிறது. இனி வாசியுங்கள்:

**★ தமிழ்ச் சிறுகதை வரலாற்றை எழுதும் பெரும் பொறுப்பை ஏற்க உங்களைத் தூண்டியது என்ன?**

முதலாவது தமிழ் நாவலான பிரதாப முதலியார் சரித்திரத்தை எழுதிய மாயூரம் வேதநாயகம் பிள்ளையின் நூற்றாண்டு விழாவை இலக்கிய உலகம் 1976இல் கொண்டாடியது.

அப்போது தமிழ் நாவல் வரலாறு பற்றி இரண்டு சிறப்புரைகளை நிகழ்த்தும்படி மதுரை காமராஜ் பல்கலைக் கழகத் தமிழ்த்துறை என்னையும் பி. ஜி. சுந்தரராஜனை (சிட்டி) யும் அழைத்தது. அச்சமயம் நாம் நிகழ்த்திய விரிவுரைகள் சில திருத்தங்களுடனும் இணைப்புக்களுடனும் 'தமிழ் நாவல் நூறாண்டு வரலாறும் வளர்ச்சியும்' என்ற நூல் 1977 இல் வெளியிடப்பட்டது.

இந்த ஆராய்ச்சி நூல் நல்ல வரவேற்பைப் பெற்றது. மதுரை காமராஜர் பல்கலைக்கழக தமிழ்ப்பேராசிரியர் டாக்டர் முத்து சண்முகம் மீண்டும் 1978 இல் எம்மை அழைத்து தமிழ்ச் சிறுகதைத் துறை வரலாறு பற்றி விரிவுரைகளை நிகழ்த்தும்படி செய்தார்.

**★ தமிழ் நாவல் வரலாறு பற்றிய நூலை அடுத்த ஆண்டிலேயே வெளியிட்டீர்கள். ஆனால் தமிழ்ச்சிறுகதை வரலாறு பற்றிய உரைகளை நூலாக வெளியிட 10 ஆண்டுகாலம் எடுத்திருக்கிறது. இந்தஇடைவெளி பற்றி விளக்கமுடியுமா?**

நல்லது... நாவல் பற்றிய விஷயங்களைச் சேகரிப்பது எமக்கு அவ்வளவு கஷ்டமானதாக இருக்கவில்லை. சிறுகதைகளைப் பொறுத்தவரையில் பல வட்டாரங்களில் இருந்து நிறையத் தகவல்களைச் சேகரிக்க வேண்டியதாக இருந்தது.



சோ. சிவபாதசுந்தரம்

'நாம் இருவரும் (சிட்டி' என்றழைக்கப்படும் பி. ஜி. சுந்தரராஜன்) 70 வயதிற்கு மேற்பட்டவர்கள். எமது பணிக்கு அமைப்பு ரீதியான ஆதரவு கிடைக்கவில்லை. நாம் இருவருமே தனியாக நிறைய ஆராய்ச்சி செய்யவேண்டியதாயிற்று.

நூல் நிலையங்களில் இருக்கும் நாவல்கள், சிறுகதைத் தொகுதிகள் ஆகியவற்றுடன் நாம் எம் ஆராய்ச்சியை முடித்திருக்கலாம். நூல் நிலையங்களில் பழைய சஞ்சிகைகள் இருப்பது அரிது. எண்ணிக்கையற்ற சஞ்சிகைகள் மற்றும் வெளியீடுகளிலும் சிறுகதைகள் வெளியாகி இருந்தன.

சிறுகதைத் தொகுதிகளை வெளியிட்டவர்களும் அந்தக் கதைகள் முதலில் வெளியான திகதி மற்றும் விவரங்களை சரியாகத் தரவில்லை.

உதாரணத்திற்கு, புதுமைப்பித்தன் இறந்த பின்னர் வெளியான அவரது கதைகள் சில மாப்பஸானின் கதைகளின் தழுவல்களா? என்பதை அறிந்து கொள்ள எமக்குப் பல ஆண்டுகள் எடுத்தன.

மீண்டும் எம்மில் ஒருவர் மலேசியா, இலங்கை, சிங்கப்பூர் ஆகிய நாடுகளுக்குச் சென்று தமிழ்ச் சிறுகதை வளர்ச்சிக்குக் குறிப்பிடத்தக்க பங்கு ஆற்றிய எண்ணற்ற எழுத்தாளர்கள் பற்றிய விவரங்களைச் சேகரிக்க வேண்டியதாயிற்று.

**★ தமிழ்ச் சிறுகதைத் துறையின் ஆரம்பம் பற்றி என்ன சொல்லுகிறீர்கள்? தமிழில் முதன்முதலாக எழுதப்பட்டதாக பொதுவாக நம்பப்படும் வ. வே. சு. ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்' கதைதான் ஆரம்பம் என்று நீங்கள் கருதுகிறீர்களா?**

— தமிழ்ச் சிறுகதை வளர்ச்சி ஒரு பரிணாம நடைமுறையாகும். வ. வே. சு. ஐயர் காலத்தில் எங்கோ இருந்து திடீர் என்று தோன்றியது ஒன்று என நம்புவது தவறானது.

தமிழில் அச்சேறிய முதலாவது சிறுகதை வீரமாமுனிவர் எழுதிய 'பரமார்த்த குருவின் கதை' தான். 1822 இல் இது வெளியிடப்பட்டது. இத்தாலியப் பாதிரியார் கொன்ஸ்டன்னடன் பெஸ்கி (1680 - 1749) தான் வீரமாமுனிவரானார்.

இந்திய மொழிகளிலிருந்து பல கதைகள் பின்னர் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டன.

19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் பல தமிழ்ச் சஞ்சிகைகள் வெளியாகின. அவற்றில் கதைகளும் கட்டுரைகளும் செய்திகளும் வெளியாகின. யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியான 'உதயதாரகை' அவற்றில் ஒன்று.

அதன் ஆசிரியர் சதாசிவம் பிள்ளை தமிழர் வாழ்வை அடிப்படையாக வைத்து கதைகள் எழுதினார். அவை ஆங்கிலக் கதைகளின் தழுவல்களாக இருந்தாலும் அவை அந்தக்காலத்து கலாசாரம், ஒழுக்கநிலை ஆகியவற்றை வலியுறுத்துவதாக இருந்தன.

சி. வி. சுவாமிநாத ஐயரை ஆசிரியராகக் கொண்டு 1892இல் ஆரம்பமான விவேக சிந்தாமணி சிறுகதை பரிணாம வளர்ச்சியில் முக்கிய பங்கு வகித்தது.

அலயன்ஸ் கம்பெனியைச் சேர்ந்த குப்புசாமி ஐயரால் வெளியிடப்பட்ட மாதப் பத்திரிகை 'விவேகபோதினி' சிறுகதைத் துறையை ஊக்குவித்தது.

வ. வே. சு. ஐயரின் 'குளத்தங்கரை அரசமரம்' சிறுகதை இந்த விவேகபோதினியில்தான் வெளியானது.

நாவலாசிரியர் மாதவையாவும் சிறுகதைகளை எழுதியிருக்கிறார். சுப்பிரமணிய பாரதியாரும் சிறு கதைகளை எழுதியிருக்கிறார். அவர் கைவைக்காததுறையேஇல்லை.

கவிதை, வசனத் துறையில் பாரதியார் வழிகாட்டியாக விளங்கினார்.

சிறுகதை வளர்ச்சியில் பாரதியாரின் பங்கு குறிப்பிடக்கூடியதாக இருந்தது. பாரதியாரின் கதைகளை வைத்து சிறப்பு ஆராய்ச்சி கூட நடத்தமுடியும்.

(மிகுதி அடுத்த வாரம்)

**உள்ளே . . . .**

கவிஞர் முருகையன் அவர்கள் எழுதும் 'தமிழ் எழுத்து முறையில் மாற்றங்கள்' என்ற தலைப்பிலான கட்டுரைத் தொடர் ஒன்று இவ்வார சஞ்சிகையில் ஆரம்பமாகியுள்ளது.

முதலாவது பகுதி 7ஆம் பக்கத்தில் பிரசுரமாகி இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேவைக்கு கிடைத்த பரிசு!

அந்தப் பாடசாலைக் 'கென்டீனி'ல் வம்பளப்பு ஆரம்பமாகிற்று. சொந்த வாழ்வில் ஆயிரம் பிரச்சினைகள் இருந்தாலும் அதைப் பற்றியெல்லாம் துளிகூடக் கவலைப்படாமல், அடுத்தவனைப்பற்றிப் புறம் பேசுவதில் இந்த மனிதர்களுக்கு அப்படி என்னதான் சந்தோஷம் கிடைக்கிறதோ கடவுளுக்குத்தான் வெளிச்சம்!

இன்றைய 'வம்பளப்பு மகாநாட்டி'ற்கு வழமை போலச் சிவானந்தன் மாஸ்ரர்தான் தலைமைவகிக்கிறார். நாற்பது வயதாகியும் நரைகாணாத தலை, நன்றாக 'ஷேவ்' செய்யப்பட்டு, தோலுரித்த கோழிபோல் எப்பொழுதும் 'வழுவழு'ப்போடிருக்கும் கன்னங்கள்! அடுத்தவன் விவகாரம் பற்றிப் பேசிப் பேசியே வரண்டுபோன குரல்.

'அதுசரி...இந்த ராசதுரை மாஸ்ரரின்ர பெஞ்சாதி 'ப்ரக்னன்ட்' எண்டு கேள்விப்பட்டனான்... மெய்யே?' என்று செல்லையா மாஸ்ரரைப் பார்த்துச் சிவானந்தன் மாஸ்ரர் கேட்க, நரேன் மாஸ்ரர் முந்திக்கொண்டு பதில் சொல்லுகிறான்.

'ஓமோம்... மெய்தான் நானும் கேள்விப்பட்டனான்'

சற்று நேரம் வரை ராசதுரை மாஸ்ரரின் மனைவியுடைய அந்தரங்கம் அக்கு வேறு, ஆணி வேறாக ஆராயப்பட்டது. ஒவ்வொருவரும் தங்கள் கற்பனைகளை மிக அழகாக விரித்துவிட்டார்கள். நாக்கூசாமல் ஒரு கற்புள்ள பெண்ணைப்பற்றி மிக மோசமாக விமர்சித்தார்கள். தங்களுக்கும் மனைவி, மக்கள் இருக்கிறார்கள் என்ற எண்ணமின்றி மனமறியப் பொய்க் கதைகள் பேசினார்கள்.

சில நிமிடங்களில் அவர்களின் பேச்சு திசை திரும்பிற்று. திசை திரும்பலுக்குக் காரணம், எட்டாம் ஆண்டு மாணவர்களை வரிசையாக விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துச் செல்லும் ரவிசங்கர் மாஸ்ரர்.

சுருள்முடியும், சிவந்த நிறமும், கட்டுடலும், இதழ்களில் தவழும் புன்னகையுமாய் இந்தப் பாடசாலைக்கு கடந்த மாதம் மாற்றம் பெற்றுவந்த ரவிசங்கர் இருபத்தைந்தே வயது நிரம்பிய இளைஞன். செயற்திறனும். உற்சாகமுமிக்க அவனது துடிப்பான இயக்கம் அந்தப் பாடசாலையில் படிப்பிக்கும் ஏனைய பல ஆசிரியர்களின் பொருமைக்கு அவனை ஆளாக்கியது. இருபதாம் திகதிக்காக மட்டுமே கற்பிக்கும் அல்லது கற்பிப்பதுபோல் பாசாங்கு செய்யும் ஆசிரியர்கள் அவன் மீது காழ்ப்புணர்ச்சி கொண்டார்கள்.

இந்தக் குறுகிய காலத்திற்குள் மாணவர் மத்தியிலும் பெற்றோர் மத்தியிலும் ரவிசங்கருக்கு ஏற்பட்ட மதிப்பும், மரியாதையும் சிவானந்தன், செல்லையா, நரேன் போன்ற ஆசிரியர்களின் நெஞ்சில் பொருமைக் கனலைக் கனன்றெழச் செய்தது. ரவிசங்கரைக் காணும் போதிலெல்லாம் காற்றுக் கிடைத்த உலைக் களமாய் அவர்களின் இதயங்கள் 'திகு திகு'வென எரியத்தொடங்கின.

'பார்த்தியே நரேன்...இந்த ஸ்கூலுக்கு வந்து முழுசா ஒரு மாசம் முடியவில்லே... அதுக்குள்ள இவன் பெரிய எடுப்பு எடுத்துத் திரியிறான்' என்று சிவானந்தன் ஆரம்பிக்க, நரேன் தொடர்ந்தான்.

'புதுத் தும்புத்தடி நல்லாய்க் கூட்டுமெண்டு ஒரு பழமொழி இருக்கு தெரியுமே? அதுமாதிரித்தான் இதுவும்... கொஞ்ச நாள் கழிச்சுப் பாருங்க மாஸ்ரர்... கழுதை தேய்ஞ்சு கட்டெறும்பாய் போயிடும்...'

கடகடவென வாய்விட்டுச் சிரித்தான் செல்லையா. 'நல்லாய்ச் சொன்னீர் நரேன் மாஸ்ரர்...வரவர மாமியார் கழுதை மாதிரின்னு. இந்தப் பொடியன் கெட்டுச் சீரழிஞ்சு போகப்போறதை நாங்கள் பார்க்காமலா விடப் போறோம்...?'

பொறாமைகொண்ட நெஞ்சத்தைப் போலக் கேவலமான எதுவுமேகிடையாது. அடுத்தவனின் வீழ்ச்சிக்காக அந்த நெஞ்சம் ஏங்குகிறது. அடுத்தவனின் கஷ்டங்களில் அந்த நெஞ்சம் புளகிக்றது. தனக்கு ஒரு கண்போனாலும் பரவாயில்லை, எதிரிக்கு இரண்டு கண்களும் போக வேண்டுமென அந்த நெஞ்சம் பிரார்த்திக்கிறது. மாற்றானின் உயர்ச்சியினால் கவலைப்பட்டுத் தன்னையறியாமலே தன் நிம்மதியையும், சுகத்தையும் அந்த நெஞ்சம் இழந்து தவிக்கிறது.

'அதுசரி... இவனென்ன, விஞ்ஞான வாத்தியாரா... இல்லே, விளையாட்டு வாத்தியாரா...? விஞ்ஞானம் படிப்பித்து வந்தவன் எதுக்காகப் பிள்ளைகளை விளையாட்டு மைதானத்திற்குக் கூட்டிக்கிட்டுப் போகவேணும்...?' என்று சிவானந்தன் தன் சந்தேகத்தைக் கேட்க, செல்லையா இகழ்ச்சியாகச் சிரித்துவிட்டுச் சொன்னான்.

'அந்த ரவிசங்கரைப் பார்த்தால் எனக்கு வாத்தியார் மாதிரியே தெரியயில்லே...!'

'பின்ன, எப்படித் தெரியிறான்..?'

'விளையாட்டுப்பிள்ளை மாதிரித்தெரியிறான்... இல்லேன்னா, வகுப்பில நிண்டு படிப்பிக்காமல், இப்படி 'ப்ளேக் க்றவண்ட்'டிற்குப் போவானோ...?'

'ஓமோம்... படிப்பிக்குறது கஷ்டம். ஆனால், விளையாடுறது லேசு, இல்லியே...? நரேன்... இந்த விஷயத்தை ஒருக்கால் 'ஸ்டாஃப் மீட்டிங்'கில நாங்கள் கதைக்க வேணும்...

வகுப்பு நேரத்தில் 'கென்டீனி'ல் உட்கார்ந்து வம்பு பேசுகின்ற தங்களை மறந்து போன அவர்கள், ரவிசங்கரின் மேல் நடவடிக்கை எடுக்க வேண்டுமெனத்தீர்மானிப்பது வேடிக்கைதான். உண்மையில், தன்னுடைய 'ஃப்ரீ' பாடவேளையில்தான் ரவிசங்கர் மாணவர்களை மைதானத்திற்கு அழைத்துச் செல்கிறான்.

அதுவும் எட்டாம் ஆண்டின் ஐந்தாம் பாடத்துக்குரிய ஆசிரியர் இன்று பாடசாலைக்குச் சமுகமளிக்கவில்லையாதலால், பதில் ஒழுங்கு செய்த அதிபர் ரவிசங்கரைக் கூப்பிட்டு, விளையாட்டுத் துறையில் பாடசாலை மிகவும் மோசமாகப் பின்தங்கி நிற்கும் நிலையை விபரித்து, அவர்களுக்கு ஏதாவது உதவ வேண்டுமென விண்ணப்பித்துக் கொண்டதன் பேரிலேயே அவன் இன்று முதன் முறையாக மாணவர்களை மைதானத்திற்குக் கூட்டிச் செல்கிறான்.

மறுநாள் ஆசிரியர் கூட்டம் கூடியபோது சிவானந்தன் மாஸ்ரர் எழுந்தார். 'ஒரு விஷயம்...' என்று பீடிகை போட்டார். தனது வலது புறமும், இடது புறமுமாய் இருக்கும் செல்லையாவையும், நரேனையும் ஒரு முறை பார்த்துக் கொண்டார். தொண்டையைக் கனைத்துக் கொண்டு பேசினார்.

'வந்து... பாட நேரத்தில் வகுப்பில் நின்று படிப்பிக்கச் சோம்பல் படுகின்ற சில ஆசிரியர்கள் மாணவர்களை விளையாட்டு மைதானத்திற்கு அழைத்துச் சென்று, ஏதோ விளையாட்டுச் சொல்லித் தருவது போல் பாவனை பண்ணி, தாங்கள் ஆலமரத்தடியிலிருந்து காற்று வாங்குகின்ற கண்றாவி இந்தப் பாடசாலையில் அண்மைக் காலமாக நடந்து வருவதை நாங்கள் வன்மையாகக் கண்டிக்கிறோம். ஆசிரியர்கள் தங்கள் பாடவேளைகளில் படிப்பிக்க வேண்டுமேயொழிய, விளையாடுவதற்காகவோ, ஓய்வெடுப்பதற்காகவோ மைதானப் பக்கம் செல்வதைக் கனம் அதிபர் அவர்கள் கவனித்து, உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கேட்டுக் கொள்கிறேன்...'

அங்கே நடைபெற்றுக் கொண்டிருப்பது ஆசிரியர் கூட்டம் என்பதையும் மறந்து செல்லையாவும், நரேனும் சிவானந்தனின் பேச்சைக் கை தட்டி வரவேற்றார்கள். அத்தோடு சட்டைக் கொலரைத் தூக்கிவிட்டுக் கொண்டு, ரவிசங்கரை இளப்பமாகப் பார்க்கவும் செய்தார்கள்.

அதிபருக்கு விஷயம் விளங்கிவிட்டது. ரவிசங்கரின் மேலுள்ள வஞ்சத்தினால்தான் சிவானந்தன் குழுவினர் இப்படியொரு பேச்சுப் பேசுகின்றனரென்பதைக் கணத்தில் அவர் உணர்ந்து கொண்டாலும், சிவானந்தன், நரேன், செல்லையா ஆகியோரின் பின்புறத்தில் இருக்கும் பணபலமும், அரசியற் செல்வாக்கும் அவரது வாய்க்குப் பூட்டுப் போட்டு விட்டன.

தானிருந்த கதிரையை மெதுவாகப் பின் தள்ளிவிட்டுக் கொண்டே ரவிசங்கர் எழுந்தான். கணீரென்ற குரலில் பேசினான்.

'என்னை விட வயதிலும், அறிவிலும், அனுபவத்திலும் சிறந்த ஆசிரியர் சிவானந்தன் அவர்கள் இந்தப் பாடசாலையின் நன்மை கருதி ஒரு தீர்மானம் கொண்டுவந்தார்கள். அதற்காக நாமனைவரும் அவருக்கு நன்றி சொல்லக் கடமைப் பட்டிருக்கின்றோம். ஆயினும் வகுப்புக்குக் 'கட்' அடித்துவிட்டு, மைதானத்துக்கு 'ஐஸ்' அடிக்கச் செல்பவர்கள் இந்தப் பாடசாலையில் இல்லையென்றே நான் நினைக்கிறேன்...'

ரவிசங்கர் சொல்லி முடிக்கு முன்பே சிவானந்தன் எழுந்தார். குரலை உயர்த்திச்சொன்னார். 'ஏன் இல்லை... இருக்கிறார்கள்...'

ரவிசங்கர் மிக்க நிதானத்துடன் கேட்டான்:

'நமக்குள் எதற்கு ஒளிவு, மறைவு...? அப்படி யாராவது இருந்தால் நீங்கள் பெயர் குறிப்பிட்டே சொல்லலாம்...'

'ஓ... தாராளமாகப் பெயர் குறிப்பிட்டுச் சொல்லுவேன்...'

'சொல்லுங்கள்...!'

'பின்பு நீ வருத்தப்படுவாய்...!'

'நானெதற்கு வருத்தப்பட வேண்டும்...?'

'நீதான் நேற்று மைதானத்திற்கு மாணவர்களை அழைத்துச் சென்றவன்...!'

ரவிசங்கர் தன் அழகிய பல்வரிசை மிளிரச் சிரித்துக் கொண்டபின் கேட்டான்.

'எனக்குரிய ஓய்வு நேரத்தில், ஆசிரியர் வராததினால் சத்தம் போட்டுக்கொண்டிருந்த ஒரு வகுப்பை அதிபரின் வேண்டுகோளின் பேரிலேயே அழைத்துச் சென்று விளையாட்டுச் சொல்லித் தந்த நான் குற்றவாளியா...?'

சிவானந்தன் விக்கித்துப் போய்விட்டார். அவசரப்பட்டுத் தான் முட்டாள்தனமாகத் தீர்மானம் கொண்டு வந்து, இப்போது அவமானப்படுவதை நினைக்க அவருக்கு ஆத்திரம் வந்தது. அந்த ஆத்திரத்தில் வெடித்தார்.

'நீ யார்...? உனக்கு... விளையாட்டுத் தெரியும்...? விஞ்ஞானம் படிப்பிக்க வந்த நீ, விஞ்ஞானம் படிப்பிக்கிறத விட்டிட்டு, விளையாட்டுப் படிப்பிக்கப் போகக் கூடாது... ஓம்!'

ரவிசங்கர் அமைதியாகச் சொன்னான்: 'நல்ல கேள்வி கேட்டீர்கள் மாஸ்ரர். அகில இலங்கை ரீதியில் நடந்த பல விளையாட்டுப் போட்டிகளில் நான் பரிசு பெற்றிருப்பதற்கான அத்தாட்சிப் பத்திரங்களை நாளைக்கே உங்கள் முன் கொண்டு வந்து சமர்ப்பிக்கிறேன். அப்போது தெரியும், நான் யாரென்றும். எனது திறமைகள் எப்படிப்பட்டவையென்பதுவும்... அத்தோடு, எனது ஓய்வு வேளைகளில் மாணவர்களுக்குப் பயன்படக்கூடிய எந்த ஒரு விடயத்தையும் கற்பிப்பதற்கு எனக்கு உரிமையுண்டு. அதனை நீங்கள் தடுக்க முடியாது'

சிவானந்தனுக்கும், அவரது அடிவருடிகளான செல்லையா, நரேன் ஆகியோருக்கும் நெற்றி, மூக்கு, கழுத்து, பிடரி என்று எல்லா இடங்களிலும் வியர்த்துக்கொட்டத் தொடங்கிய நேரத்தில் அதிபர் எழுந்தார். எழுந்து நிற்கும் சிவானந்தனையும், ரவிசங்கரையும் அமரச் செய்தார். பின்னர் சம்பிரதாயத்துக்காகச் சொன்னார்.

'இந்தப் பாடசாலையின் முன்னேற்றத்திற்காக எல்லா ஆசிரியர்களும் பாடுபடுகிறார்கள் என்பதையிட்டு நான் சந்தோஷமடைகிறேன். இனி, வருங்காலங்களிலும் உங்கள் அனைவரது ஒத்துழைப்பையும் இந்தப் பாடசாலையின் உயர்வுக்காக வழங்கும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்...'

ஒரு சின்னச் சலசலப்புடன் அன்றைய கூட்டம் முடிவடைந்தது.

மறுநாள் அதிபர் ரவிசங்கரைத் தன் ஓஃபீஸ் அறைக்கு அழைத்து இரகசியமாகச் சொன்னார். 'மாஸ்ரர்... உங்களின் கடமையுணர்வையும், உற்சாகத்தையும் நான் பாராட்டுறன். இந்தப் பாடசாலையின் முன்னேற்றத்திற்கான உங்க ஒத்துழைப்பை நான் என்னிக்கும் எதிர்பார்க்கிறன். சிவானந்தன், செல்லையா, நரேன் மாதிரி ஆக்களுக்கு இருக்கிற செல்வாக்குக்கும் நான் பயப்படாமல் இருக்கேலாது. ஏனென்டால் நான் பிள்ளைகுட்டிக்காரன். அவங்களுக்கிருக்கிற 'இன்ஃபுளுயன்ஸ்'க்கு என்னைத் தண்ணியில்லாத காட்டுக்கு மாற்றினாலும் மாற்றிப்போடுவாங்கள்... ஸோ, என்னால அவங்களை நேரடியாய்ப் பகைச்சுக் கொள்ளேலாது...'

அதிபர் மேலும் ஏதோ கூறப் போக அவரை இடைமறித்தான் ரவிசங்கர்.

'சேர்... கவலைப்படாதீங்கோ...! வாங்குகிற சம்பளத்துக்கு வஞ்சகமில்லாம நம்ம கடமையை நாங்கள் [illegible] எங்களைக் கடவுள் கவனிக்கக் கொண்டிருக்கிறார். ஓ. கே சேர்... என்னால முடிஞ்ச சகல ஒத்துழைப்பையும் இந்தப் பாடசாலையின் முன்னேற்றத்திற்காகத் தர்ரதுக்கு நான் தயாராயிருக்கிறேன்...'

அதன் பின்னர் ரவிசங்கர் கங்கணம் கட்டிக்கொண்டு தன் உழைப்பை அந்தப் பாடசாலைக்கு வழங்கினான். சனி, ஞாயிற்றுக்கிழமைகளிலும், ஏனைய விடுமுறை நாட்களிலும் மாலை நேரங்களிலும் முழு மனத்துடன் ஈடுபட்டு மாணவர்களுக்கு இலவச 'ட்யூசன்' வகுப்புக்கள் நடத்தினான்.

கிறிக்கற், ஃபுட்போல் என்றும் பல விளையாட்டுக்களைப் பயிற்றுவித்தான். அத்துடன் ஒழுக்கத்தையும் கண்ணியத்தையும் நேரம் கிடைக்கும் போதிலெல்லாம் கற்பித்தான்.

ஆயினும், பாடசாலையை ஒரு வாடி வீடாகக் கருதுகின்ற சிவானந்தன், செல்லையா, நரேன் போன்றவர்களினால் ரவிசங்கரின் இந்தத் தன்னலமற்ற சேவையை ஜீரணிக்கமுடியவில்லை. மாணவர்களும், பெற்றோர்களும் ரவிசங்கருக்கு ஒரு 'ஹீரோ'வுக்குரிய அந்தஸ்தைக் கொடுக்கமுனைவதை அவர்களினால் பொறுத்துக்கொள்ள முடியவில்லை. எனவே, ரவிசங்கரின் ஆளுமையை மட்டந்தட்டும் நடவடிக்கைகளில் அவர்கள் இறங்கத் தொடங்கினார்கள்.

அவனது முதுகுக்குப் பின்னால் வசைமாரி பொழிந்தார்கள்; மொட்டைக் கடிதங்கள் எழுதினார்கள்; பலர் முன்னிலையில் அவனைக் கீழ்த்தரமாக விமர்சித்தார்கள்.

எதற்குமே ரவிசங்கர் கலங்கவில்லை. எதைப் பற்றியும் அவன் கவலைப் படவில்லை. மாறாகப் புதிய உத்வேகம் பெற்றான்; தனக்கெதிராக மேற்கொள்ளப்படுகின்ற ஒவ்வொரு நடவடிக்கையினாலும் பலமும் உற்சாகமும் பெறத் தன்னைப் பழக்கப்படுத்திக் கொண்டான். தன்னிலிருந்து இந்தச் சமுதாயம் எவ்வளவு உச்ச பலனை அடைய முடியுமோ, அத்தனையையும் அவன் அள்ளி வழங்குவதில் ஆனந்தமடைந்தான்.

ஒருநாள் ரவிசங்கருக்குக் கல்விக் கந்தோரிலிருந்து ஒரு கடிதம் வந்தது. விரித்துப் பார்த்த அவன் பெரும் அதிர்ச்சியடைந்தான். எங்கோ தொலை தூரத்தில் உள்ள ஒரு காட்டுப் பாடசாலைக்கு அவனை இடமாற்றம் செய்திருந்தார்கள்.

விடயம் கேள்விப்பட்ட மாணவர்கள் வெகுண்டெழுந்தார்கள். அந்த இடமாற்றத்திற்கெதிராகத் தாங்கள் பாடசாலையைப் பகிஷ்கரித்து ஆர்ப்பாட்டத்தில் குதிக்கப் போவதாகச் சொன்னார்கள். ஆனால் அவர்களையெல்லாம் தன் சாந்தமான குரலினால் அமைதிப்படுத்தினான் ரவிசங்கர்.

'என்மீது நீங்கள் வைத்திருக்கும் மாசு, மறுவற்ற அன்புக்கு நான் என்றென்றும் கடமைப் பட்டிருக்கிறேன். ஆனால் அந்த அன்பின் காரணமாக இங்கே ஒரு குழப்பமான சூழ்நிலை உருவாகுவதை நான் விரும்பவில்லை. ஆசிரியன் என்பவன் ஒரு குறிப்பிட்ட பாடசாலைக்கு மட்டும் சேவை செய்யப் பிறந்தவனல்லன். இந்தப் பாடசாலையைவிடப் பின்தங்கிய பலபாடசாலைகள் இந்தநாட்டிலே இருப்பதை நீங்கள் மறந்துவிடக் கூடாது. அப்படியான ஒரு பாடசாலைக்குத்தான் இப்போது எனக்கு இடமாற்றம் கிடைத்துள்ளது. எனவே அந்தப் பாடசாலைக்கும் எனது சேவையை வழங்க, என்னை நீங்கள் மனப்பூர்வமாக வழியனுப்பி வைக்க வேண்டும்...'

கூறுகின்றபோதே அவனது கண்களின் அணை உடைத்துக் கொண்டது. வெள்ளமாய்க் கண்ணீர் பெருகத்தொடங்கிற்று. அவனது பேச்சுக்கு அடிபணிந்து மாணவர்கள் அமைதியானாலும், இத்துணை நல்ல ஆசிரியர் ஒருவரை இழக்கப்போகின்றோமே யென்பதினால் அவர்கள் வாய்விட்டே அழத்தொடங்கினர்.

இதோ... மாணவர்களின் கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக ஏற்றுக்கொண்டு, கையில் பெட்டியுடன் பஸ்ஸில் ஏறுகிறான் ரவிசங்கர். தங்களது பண பலத்தாலும், அரசியல் செல்வாக்கினாலும் கல்விப்பணிப்பாளரை வளைத்துக் காரியம் சாதித்துக்கொண்ட சிவானந்தன் மாஸ்ரரும், நரேன், செல்லையா ஆகியோரும் 'அப்பாடா... இப்பதான் நிம்மதி...' என்று பெருமூச்சுவிட்டுக்கொண்டே, அந்தப் பாடசாலைக் 'கென்டீனு'க்குள் அமர்ந்திருந்து வம்புக் கதைகள் பேசி மகிழ்ச்சி கொள்கின்றனர்.

பாவம் அவர்கள்...! தங்களின் சாவுக்குப்பின்னர் தாங்கள் கடவுளின் சந்நிதானத்தில் கணக்குக் கொடுக்க வேண்டியிருப்பதை ஏனோ மறந்துவிட்டார்கள்!

(யாவும் கற்பனை)



- எஸ். எச். நிஃமத் -




# கண்ணதாஸன் கருத்துக்கு வித்துவான் வேலன் விளக்கம்

'புல்லர்கள் என்ற பெயர் வரக் காரணம்' என்ற தலைப்பில் கண்ணதாஸன் தெரிவித்த கருத்து 26 - 8 - 1989 சஞ்சீவி சஞ்சிகையில் பிரசுரமானது.

புல்லாலே பயன் ஏது? பெருமை ஏது? அருமை ஏது? புல்லுக்கு விதை ஏது? அதனால்தான் கீழ்த்தரமானவர்களை 'புல்லர்கள்' என்கிறார்கள் — இப்படிக் கண்ணதாஸனின் கருத்து அமைகிறது.

இதற்கு வித்துவான் க. ந. வேலன் தரும் விளக்கம் இங்கு பிரசுரமாகிறது. வித்துவான் வேலன் அவர்களைச் சந்தித்து அவரது விளக்கத்தைக் கேட்டு எழுதி அனுப்பி வைத்திருக்கிறார் வட்டூர்க் கடம்பன்.

இனி வித்துவான் வேலன் கூறுவதை வாசியுங்கள்.

புல்லுக்கும் மரத்துக்கும் முக்கியமான வேறுபாடு ஒன்றுண்டு.

புல்லுக்குப் புறத்தில் வைரம்; மரம் அக வைரம் உடையது.

இதனாலேயே உயர வளர்ந்தாலும் மூங்கிலும் புல்லாகவே கொள்ளப்படுகிறது.

இதனை;

'புறக்காழெனவே புல்லென மொழிப'

'அகக் காழெனவே மரமென மொழிப'

— என வேறுபடுத்திக் காட்டுவர் தொல்காப்பியர்.

மரத்துக்குப் பெருமை அதன் உள்ளீடாகிய வைரம்— மனிதனுக்குப் பெருமை தருவது உள்ளீடாகிய அறிவு.

இதனாலேயே உள்ளீடாகிய அறிவற்றவர்களைப் 'புல்லர்கள்' எனக் குறித்தார்கள்.

புல்லானாலும் புருஷன் என்பதற்கும் பொருள் இது தான்.

உள்ளீடாகிய அறிவற்றவனாக இருந்தாலும் என் வினைக்கேற்ப வந்தவன் என அவனையும் தொழவேண்டும் என்பது பொருளாகும்.

உலகில் பயனற்றதென்று ஒன்று இல்லை; ஒன்றற்கு ஒன்று வேண்டியுள்ளது.

இது உலக நியதி என்பது சிந்திக்க வேண்டியதாகும்.

★

# சீர் இல்லா சீதனம்

கல்யாணங்களை
சொர்க்கத்தில் நிச்சயிக்க
முன் கூட்டிய பதிவு
நிறுத்தப்பட்டு விட்டதால்தான்
இன்று சீதனம் கல்யாணங்களைச்
சொர்க்கமாகச் செய்கின்றதோ?

ஜன்னல் கம்பிகள் ஊடும்
கிடுகு வேலிகளின் பின்னும்
எம் சகோதரிகள் விடும்
பெருமூச்சுக்கள் அனல் காற்றாய்
மாறியதனால் தானோ – இங்கு
கருமேகங்கள் கீழிறங்க
குளிர்காற்றுக்குத்
தட்டுப்பாடு ஏற்பட்டிருக்க வேண்டும்.

ஆம்!
சாளரங்களில் பூத்த சந்திர முகங்கள்
சந்தனமாய்த் தேயும் நிலை கண்டும்
சலிக்காமல் சன்மானங்களை
ஆடவர் நாடினால்
பெண்கள் எழில் பயணத்தில்
பசுமைகள் இலையுதிர் காலமே.

ஓ! பெண்களே
காலங்கள் ஓர் நாள்
மாறும் போது ஆண்கள்
சிந்தையும் மாறும் நாள் வரும்
அதுவரை
சிந்தை தெளிந்த ஆடவர்
எம்மில் இல்லை என்றெண்ணி
உங்கள் கண்ணீரின் அணையை
உடைத்து விடாதீர்கள்
பின்பு இங்கு
உடல்தான் மிஞ்சி இருக்கும்.

— யாழ். ரமணன்

# காத்திருக்கிறேன்

எனது கடந்த கால வாழ்க்கை
மிக கசப்பானது — ஆனால்
அதற்காக நான் வருத்தப்படவில்லை.

எனது நிகழ் கால வாழ்க்கை
மிக சோகமானது — ஆனால்
அதற்காக நான் யாரிடமும்
அடிபணிய விரும்பவில்லை.

எனது வருங் கால வாழ்க்கையில்
எனக்கு நம்பிக்கையுள்ளது
—அதற்காகவே நான் இன்று
வரையில் காத்திருக்கிறேன்.

—வீ. ஜீ. தவக்குமார்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எரிமலை உச்சியில் சிவன் கோயில்

காஷ்மீர் மாநிலத்தில் சங்கராச்சாரிய மலை உண்டு.

அந்த மலை உச்சியில் புராதன சிவன் கோவில் ஒன்று அமைந்துள்ளது.

அந்த மலை 40, லட்சம் ஆண்டுகளுக்கு முன்னர் அவிந்துபோன எரிமலை என்று பூகர்ப்பவியலாளர்கள் இப்போது கண்டுபிடித்து உள்ளனர்.

கண்டங்கள் நகர்ந்து கொண்டிருந்த ஒரு காலத்தில் இந்து சமுத்திரத்தினுல் வட இந்தியா சூழப்பட்டதாகவும் தீவுக்கூட்டங்களாக அப்பிராந்தியம் காணப்பட்டதாகவும் பூகர்ப்பவியலாளர்கள் கூறுகின்றனர்.

கடல் நீர் வற்றிய பின்னர் வட இந்தியாவில் பல எரிமலைகள் தோன்றின; பின்னர் அவிந்து போயின.

காஷ்மீர் மாநிலத்தில் ஏற்பட்டு அவிந்துபோன எரிமலைகளில் ஒன்றுதான் இன்று 'சங்கராச்சாரிய மலை' யாக நிமிர்ந்து நிற்கிறது.

மலை உச்சியில் சிவன் ஆலயம் இருப்பதால் எரிமலை அமைதியாக இருப்பதாக அப்பகுதி மக்கள் பரவலாக நம்புகின்றனர்.

ஆனால் சரித்திரரீதியான ஆதாரங்களின்படி கி. பி.



ஆதிசங்கரர்

1421 — 1472 க்கு இடைப்பட்ட காலத்தில் அப்பகுதியில் சிறிய நிலநடுக்கங்கள் ஏற்பட்டன. அப்போது சிவன் ஆலயத்தின் கூரை விழுந்தது. காஷ்மீர் மன்னராக இருந்த சுல்தான் செயில்— யுல் ஆப்தீன் பழுதடைந்த ஆலயத்தைத் திருத்தினர்.

கிறிஸ்துவுக்கு முன்னர் 1360 ஆம் ஆண்டில் ஜதலாக் என்று இம்மலை அழைக்கப்பட்டது.

கி. மு. 2564 — 2629 க்கு இடைப்பட்ட காலத்தில் சந்திமான் என்ற அரசன் இந்த ஆலயத்தைக் கட்டினுன் என்று சரித்திரவியலாளர்கள் கூறுகின்றனர்.

ஆதி சங்கரர் காஷ்மீருக்கு விஜயம் செய்தபோது இந்த ஆலயத்தில் இருந்து தியானம் செய்தார். அதன் காரணமாக சிவன் ஆலயம் இருந்த இம்மலை சங்கராச்சாரிய மலை என்று அழைக்கப்படலாயிற்று.

தற்போது இந்த ஆலயத்தில் உள்ள சிவலிங்கத் திருமேனி ரன்பிர்சிங் என்ற அரசனுல் கி.பி 1829–1885க்கு இடைப்பட்ட காலத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டதாகும்.

கடல்மட்டத்தில் இருந்து 6 ஆயிரத்து 500 மீற்றர் உயரத்தில் இந்த சிவன் ஆலயம் அமைந்து உள்ளது. ★

## காகிதத்தைத் தொடுவது போல்...

பிரம்மச்சாரியம் என்ருல், எந்த விதமான சந்தர்ப்பத்திலும், எந்தப் பெண்ணையும் தொடக்கூடாது என்று அர்த்தமல்ல. ஒரு காகிதத்தைத் தொடும் போது மனத்தில் பரபரப்பு எதுவும் ஏற்படாமல் அமைதி குடிகொண்டிருக்கிறது அல்லவா? அப்படியே ஒரு பெண்ணைத் தொடும்போதும் இருக்க வேண்டும்.

—'குழந்தையும் செல்வமும்' என்ற நூலிலிருந்து. ★

## கனவு காணுமலிருக்க....

மேலே உத்திரம் உள்ள வீடாக இருந்தால், உத்திரத்துக்கு நேரே படுக்காதே கனவு வரும்.

தலையணைக்கு அடியில் கொஞ்சம் விபூதியோ, குங்குமமோ வைத்துக் கொண்டு படு; கெட்ட கனவு வராது.

படுக்கப் போகும் போது பூஜை செய்து விட்டுப் படு; பயமோ கவலையோ இருக்காது.

யாரையும் திட்டி விட்டு, அதே கோபத்தோடு படுக்காதே; தூக்கம் வராது.

சாப்பிட்ட பிறகு, கொஞ்சம் குறு நடைபோட்டு விட்டுப் படு; தூக்கம் வரும்.

கண்ணதாசனின், 'நெஞ்சுக்கு நிம்மதி' நூலிலிருந்து. ★

# திசை மாறிய துருவங்கள்; விஞ்ஞானிகள் கண்டுபிடிப்பு!

1884 ஆம் ஆண்டில் ஒரு காந்தஊசி பெட்டியில் உள்ள முள் எப்போதும் வடக்குத் திசையையே காட்டிக்கொண்டிருந்ததைப் பார்த்து வியந்துபோனுன் ஒரு சிறுவன்.

அதன் மர்மங்களைக் கண்டறிவதில் அவன் தனது வாழ்நாள் முழுவதையும் கழித்தான். அந்தச் சிறுவனின் பெயர் ஆல்பர்ட் ஐன்ஸ்டீன்.

1905 ஆம் ஆண்டில் ஐன்ஸ்டீன் இயற்பியலால் விளக்க முடியாத ஐந்து மர்மங்களில் ஒன்ருகப் பூமியின் காந்தத்துவத்தைக் குறிப்பிட்டார்.

அது எப்படித் தோன்றுகிறது?

ஏன் தோன்றுகிறது?

இந்தக் கேள்விகளுக்கு இன்னமும் விடைதெரியவில்லை.

1906 ஆம் ஆண்டில் பெர்ஞர்டு புருன்ஸ் (Bemard Brunhs) என்ற பிரெஞ்சு இயற்பியல் நிபுணர் வெகு காலத்திற்கு முன்பு பூமியின் காந்தப்புலத்தின் திசை இன்றைக்கிருப்பதற்கு எதிராக இருந்தது என்று கண்டுபிடித்தார்.

இன்று பூமிக்காந்த வட முனையாக இருப்பது ஒரு காலத்தில் தென்முனையாக இருந்திருக்கிறது.

கடந்த 17 கோடி ஆண்டுகளில் பூமியின் காந்தப்புலத்தின் திசை சுமார் 300 தடவை மாறி மாறி வந்திருக்கிறதாக இப்போது கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது.

முதலில் காந்தப்புல வலு



ஐன்ஸ்டீன்

திடீரென்று குறைந்து பூஜ்யமாகிவிடுகிறது.

நெடுங்காலத்திற்கு அப்படியேயிருந்த பிறகு அதன் வலு மெல்ல மெல்ல அதிகரிக்கிறது.

ஆனல் அதன் திசை நேர் எதிராகத் திரும்பிவிடுகிறது.

கடந்த பல கோடி ஆண்டுகளில் பூமியின் வட துருவம் தென் துருவமாகவும், தென் துருவம் வட துருவமாவும் பல தடவைகள் மாறி வந்துள்ளதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

ரிச்சர்ட் முல்லர் (Richard Muller) டோனல் மாரிஸ் (Donald Morris) என்ற இரண்டு அமெரிக்க நிபுணர்கள் பூமியின் மேல் மாபெரும் குட்டிக்கோள்கள் அல்லது வால் விண்மீன்கள் வந்து விழுந்ததால் இவ்வாறு ஏற்பட்டதாகக் கருத்து வெளியிட்டிருக்கிருர்கள்.

பூமியின் பாறைகளை ஆராய்ந்தால் இதற்கான சான்றுகள் கிடைக்கும் என அவர்கள் கூறுகிருர்கள். ★

## மரியாதை பற்றி ஈ. வெ. ரா

பெரியார் ஈ. வெ. ரா அவர்கள் ஒரு கூட்டத்தில் பேசுவதற்காக மேடையில் அமர்ந்திருந்தார்.

அப்பொழுது கூட்டத்தின் முன் வரிசையில் இருந்த இளைஞன் ஒருவன் தன் கால்மேல் காலைப் போட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தான்.

மேடையில் இருந்த இன்னெருவர் பெரியாரிடம் "இந்த இளைஞனைப் பார்த்தீர்களா? நாம் எல்லாம் இருக்கும் போது அப்படிக் கால் மேல் காலைப் போட்டு உட்கார்ந்து இருக்கிருனே, கொஞ்சம் கூட மரியாதை இல்லாமல்"— என்று சொன்னர்.

அதற்குப்பெரியார் "அவன் கால் மேல் அவன் தன் காலைத் தானே போட்டுக் கொண்டிருக்கிருன், இதில் நம் மரியாதை எங்கு குறைகிறது?— என்று பதில் தந்தார். ★

# மனிதக் குரங்குகளுக்கு 'குளுகுளு' வீடு - பென்ஷன்

அமெரிக்காவில் ஏராளமான மனிதக் குரங்குகள் 'எய்ட்ஸ்' நோய் மற்றும் பல்வேறு மருத்துவ சோதனைகளுக்குப் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

இப்படிப் பயன்படுத்தப்படும் மனிதக் குரங்குகளுக்கு, ஓய்வுபெற்ற பின் 'பென்ஷன்' வழங்கவும் குளு குளு வசதி கொண்ட வீட்டு வசதி செய்யப்பட்டு உள்ளது.

மனித சமுதாயத்துக்குச் சேவை செய்யும் அவற்றுக்குப் பென்ஷன் அளிப்பதற்காக, அமெரிக்காவில் டெக்ஸாஸ் மாநிலத்தில் உள்ள சான் அன்டோனிட்டா நகரில் உள்ள வங்கியில் 15 கோடி ரூபா வைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பணம் அந்த மனிதக்குரங்குகளைப் பயன்படுத்திய நிறுவனங்கள் அளித்தது ஆகும்.

இவற்றிற்கு குளு, குளு' வசதிசெய்யப்பட்ட 62வீடுகள் கட்டவும் ஏற்பாடு செய்யப்பட்டு உள்ளது. ஒவ்வொரு வீடும் 20 லட்சம் ரூபா செலவில் கட்டப்படும்.

மனிதனின் முன்னேர்கள் குரங்குகள்.

தனது வழித்தோன்றல்களின் வளமான வாழ்வுக்குத் தங்களையே தியாகம் செய்யும் மனிதக் குரங்குகளுக்குப் பென்ஷனும் 'குளு குளு' வீடும் கிடைப்பதைப் பகுத்தறிவு படைத்த நமது சமுதாயம் வாழ்த்தவேண்டும். ★

## அகஸ்தியர் காலத்து ஆலமரம்

கேரள மாநிலத்தில் கொச்சியில் இருந்து 30 மைல் தூரத்தில் திரிக்களத்தூர் உள்ளது.

அங்குள்ள ஸ்ரீராமர் கோயிலுக்கு அருகே ஆயிரம் ஆண்டுகளுக்கு ஆலமரம் ஒன்று நின்றது.

இது அகஸ்தியர் காலத்தைச் சேர்ந்தது என்று கூறப்பட்டது.

இது அண்மையில் வேரோடு சாய்ந்து விட்டது. நூதனமான முறையில் ஊர் மக்கள் திரண்டு ஆலமரத்திற்கு இறுதிச் சடங்கு நடத்தினர்.

அந்த ஆலமரத்தின் அடிமரம் துண்டு துண்டாக வெட்டப்பட்டு ஒருகுழியில் போடப்பட்டு தீவைக்கப்பட்டது. ★

## மனிதனின் வெற்றி!

மட்டமான எண்ணங்கள் சில சமயம் நம்முள் எழத்தான் செய்கின்றன. எழுந்த சில கணநேரத்திற்குள் அதை அழித்துவிட்டு— நல்லவற்றில் மனத்தை மாற்றுங்கள். உலகில் இரவும் பகலும் இருப்பதுபோல, நமது உடலிலும் உற்சாகமான நிலையும், தளர்ந்த நிலையும் மாறி மாறி வருகிறது என்று கண்டிருக்கிருர்கள். நமது உள்ளம் இதிலிருந்து வேறுபட்டதல்ல. எனக்குப் பிடித்த வாசகம், ஒன்றைக் கூற விரும்புகிறேன்; வாழ்க்கையில் நாம் எல்லாரும் ஓரிரு முறை காந்தி ஆகிறேம். ஆனல், தொடர்ந்து காந்தி ஆகும் முயற்சியில்தான் நம் வெற்றி இருக்கிறது.'

— டாக்டர் எம். எஸ். உதயமூர்த்தி.

## மனதை உறுத்தும் மன்னிப்பு

உங்கள் எதிரிகளைத் தாராளமாக மன்னியுங்கள். உண்மையில் உங்கள் மன்னிப்பை விட அவர்களை மிகவும் உறுத்தக்கூடிய வேறு எதுவும் இல்லை.

மிகத் தாராளத்துடன், அன்புடன் மன்னிக்கப்பட்ட எதிரிகள் உங்களுக்கே உண்மையான நண்பர்களாகி விடுவார்கள்.

— சுவாமி சின்மையானந்தா உரையிலிருந்து. ★

# காடுகளைக் காப்பாற்ற ஒரு சர்வதேச அமைப்பு

நாள் ஒன்றுக்கு ஆயிரம் சதுர மைல் அளவிலான காடுகள் உலகமெங்கும் அழிக்கப்பட்டு வருகின்றன.

இதனுல் இயற்கைச்சூழலில் பெரும் பாதிப்புகள் உண்டாகின்றன. இதனைவிளக்குகிறது ஓர் ஆய்வு...!

கட்டடப்பணிகள், நெடுஞ்சாலைகள் உருவாக்குதல், எண்ணெய்க்கிணறுகள் தோண்டுதல் உள்பட உலகெங்கும் நடைபெறும் ஏராளமான பணிகளுக்கு மரம் தேவைப்படுவதால் இத்தகைய அழிமானங்கள் நடப்பதாகக் கருதப்படுகிறது.

காடுகள் அழிக்கப்படுவதால், வனவிலங்குகள், உயிரினங்களும் கூட அழிந்து வருகின்றன.

காடுகளைப் பாதுகாப்போம் வனவிலங்குகளைக் காப்போம் என்ற நோக்கோடு 'Survival Intenational' என்ற உலகளாவிய அமைப்பு ஒன்று மேற்சொன்ன அழிமானங்களுக்கு எதிரான தீவிரமான, ஆக்கபூர்வ நடவடிக்கைகளை எடுத்து வருகிறது. ★

## தோல்வியை விரும்பாத ரஷ்யர்

ஒரு சமயம் நடந்த டென்னிஸ் போட்டியில் ரஷ்ய வீரரும், ஒரு வெளிநாட்டு வீரரும் கடுமையாக மோதிக் கொண்டார்கள். ஆனல் இறுதியில் ரஷ்ய வீரர் தோற்றுப் போனர்.

தங்கள் வீரர் ஆட்டத்தில் தோற்றுப் போனர் என்று எழுத ரஷ்ய பத்திரிகைகளுக்கு மனம் வரவில்லை. எனவே அவைகள் கீழ்க்கண்டவாறு அந்தப் போட்டி முடிவைப் பற்றி அறிவித்தன. இன்று நடந்த டென்னிஸ் போட்டியில் ரஷ்ய வீரர் இரண்டாம் இடத்தை வகித்தார். ★

## உற்சாகமாக இருக்க சில வழிகள்....

★ மனம் தளரும்போது பாடுங்கள்; சோகமாக இருக்கும்போது சிரியுங்கள்; சோர்வு வரும்போது இரட்டிப்பாக உழையுங்கள்; சோம்பல் ஏற்படும்போது, போட்டிக்காரர்களை நினைத்துக் கொள்ளுங்கள். ★

# வீட்டில் விளக்கேற்றுபவளை தெரிவு செய்வது எப்படி?

முன் காலத்தில் பெண் பார்க்க வந்தவர்கள் பெண்ணை விளக்கேற்றச்சொல்வார்கள். எண்ணெய் ஊற்றி, திரியைத் திரித்து விளக்கேற்ற வேண்டும். அப்படிச் செய்தால் கையில் எண்ணெய் ஆகும்.

இந்த எண்ணெயை அந்தப் பெண் என்ன செய்கிருள் என்று மாப்பிள்ளை வீட்டார் கூர்ந்து பார்ப்பார்கள்.



பெண் தன் தலையில் தேய்த்துக் கொண்டால், தன்னை அழகாக வைத்துக் கொள்ளமாட்டாள் என்று அர்த்தம்.

சுவரில் தேய்த்தால் வீட்டை நன்ருக வைத்துக் கொள்ளமாட்டாள் என்று அர்த்தம்.

பின் இந்த எண்ணெயை எங்கு தேய்ப்பது?

விளக்கின் விளிம்பில் தேய்க்க வேண்டும் அந்தப் பெண்தான் சிறந்தவளாம்!

'தமிழ்நாட்டு மக்களின் பழக்கவழக்கங்கள்' என்ற நூலிலிருந்து. ★

# விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் சகோதரர்கள் பட்டபாடு

ஒரு புதுக் கருவியைக் கண்டுபிடிக்கிறதே மிகவும் கடினம்.

அதற்குப் பிறகு அதை மக்களுக்கும் அரசு அதிகாரிகளுக்கும் இயக்கிக் காட்டி அதன் மகிமையைப் புரிய வைப்பது அதை விடக் கடினமான காரியம்.

ஆகாய விமானத்தைக் கண்டுபிடித்த ரைட் (Wright) சகோதரர்கள் பட்டபாடு இதற்கு நல்ல உதாரணம்.

1903, டிசம்பர் 17–ம் நாள் அமெரிக்காவில் கிட்டிஹாக் (Kitty Hawk) என்னுமிடத்தில் அவர்கள் முதன்முதலாக ஒரு விமானத்தைப் பறக்க விட்டுக் காட்டிச் சாதனை படைத்தார்கள்.

அதன் பிறகு அவர்கள் சொந்த ஊரான டேட்டனுக்குத் (Dayton) திரும்பி வந்தபோது அவர்களை வரவேற்க அலங்கார வளைவுகளோ, மலர்மாலைகளோ இருக்கவில்லை.

யாரும் பேரணி கூட்டி வரவேற்பு விழா எடுக்கவில்லை. அவர்களை யாரும் கண்டு கொள்ளவுமில்லை.

ஏனெனில் விமானம் பறந்ததாக வந்த செய்திகளை மக்கள் நம்பவில்லை.

ஏதோ பலமாகக் காற்றடித்ததனுல் அந்த விமானம் மேலே எழும்பிப் பறந்திருக்கும் என்று அவர்கள் கருதினர்.

விமானமாவது பறக்கிறதாவது என்கிற வகையில் அவர்கள் பேசிக்கொண்டார்கள்.

ரைட் சகோதரர்கள் தாம் விமானத்தில் பறந்ததைப் பற்றிப் பெருமையாகத் தமது நண்பர்களிடம்கூடச் சொல்லிக்கொள்ளவில்லை.

அவர்களும் நம்புவார்களோ மாட்டார்களோ என்ற பயம் தான் அதற்குக் காரணம்.

டேட்டனிலிருந்து வெளிவந்துகொண்டிருந்த 'ஜர்னல்' என்ற பத்திரிகைகூட இந்தச் செய்தியைப் பிரசுரிக்கவில்லை.

வேறு சில பத்திரிக்கைகளில் சின்னதாக ஒரு மூலையில் அது குறிப்பிடப்பட்டிருந்தது.

அதைப் படித்தவர்களில் பெரும்பாலான வாசகர்கள் அந்தச் செய்தியை நம்பவில்லை. விஞ்ஞானிகள் அசைக்கமுடியாத வாதங்களை முன்வைத்து காற்றைவிடக் கனமான ஒரு வாகனம் வானில் பறக்கவே முடியாது என்று அடித்துக் கூறினர்.

நடக்கவே முடியாத ஒரு சாதனையைச் சைக்கிள் செப்பனிடும் தொழிலாளிகள் இரண்டுபேர் செய்துகாட்டியிருக்கிருர்கள் என்பதை எந்தப் பத்திரிகை ஆசிரியரும் ஒப்புக் கொள்ள முன்வரவில்லை. ★

# நூறு ஆண்டு நிறைவைக் கொண்டாடும் 12 கோடிப் பேர் ஏறி - இறங்கிய ஈபிள் கோபுரம்

பாரீஸ் என்ருலே அனைவருக்கும் முதலில் நினைவுக்கு வருவது 'ஈபிள் டவர்' தான். இது கட்டப்பட்டு 100 வருடங்களாகி விட்டது.

பிரான்கோ – பெருஷிய போரில் பிரான்ஸ் நாடு அவமானகரமான தோல்வி அடைந்தது. இந்தப் போர் முடிவடைந்த பின்பு பிரான்ஸ் தொழில்துறையில் வேகமாக வளர்ச்சியடைந்தது.

அப்போது பிரெஞ்சுப் புரட்சி நடந்து 100 ஆண்டுகள் கழிந்துவிட்டன.

இவற்றைச் சிறப்பிக்கும் வகையில் பிரான்ஸ் அழியாத நினைவுச்சின்னம் ஒன்றைக் கட்ட 1887 இல் முடிவு செய்தது. அதன் விளைவுதான் ஈபிள் கோபுரம்.

இதைக் கட்டிய அலெக்சாண்டர் கஸ்தவ் ஈபிள் என்பவரின் பெயரே அதற்கு வைக்கப்பட்டது.

1987 ஆம் ஆண்டுகளுக்கு முன்பு ஈபிள் புகழ் பெற்றவர் அல்லர். இந்தக் கோபுரத்தைக் கட்டியதும்தான் அவரது புகழ் பரவியது.

மொத்தம் 120 என்ஜினீயர்களிடம் இருந்து நினைவுச்சின்னம் கட்ட பிரான்ஸ் அரசுக்கு வரைபடங்கள் குவிந்தன. அதில் ஒன்றுதான் ஈபிள் அனுப்பியது.

ஈபிள் இதைக் கட்டத் தொடங்கியதும் அதற்குப் பொதுமக்களிடையே பலத்த எதிர்ப்பு கிளம்பியது. அந்தக் கோபுரத்தை பெரும் பூதம் என்றும் கருணையற்ற எலும்புக்கூடு எனவும் பலர் வர்ணித்தனர். சில என்ஜினீயர்கள் அது இடிந்துவிடும் என்றே பயமுறுத்தினர்கள்.

வேறு சிலர் அதற்கு மேலும் சென்று கோபுரம் கட்டுவதைத் தடுக்க முயன்றனர். ஒரு பத்திரிகை 'கோபுரம் சரிகிறது' என்றே எழுதியது.

இத்தனை தடைகளையும் மீறி கோபுரத்தைக் கட்டி முடித்தார் ஈபிள்.

300 மீற்றர் (975 அடி.) உயரமுள்ள இந்தக் கோபுரத்தைக் கட்ட 200 தொழிலாளர்கள் 2 ஆண்டுகள் இரவு பகலாக வேலை செய்தனர்.

1887இல் தொடங்கப்பட்ட கோபுரம் கட்டும் பணி 1889 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31ஆம் திகதி முடிவடைந்தது.

அப்போதைய மதிப்பில் ஈபிள் கோபுரம் ரூபா 2 கோடியே 40 லட்சம் செலவில் கட்டப்பட்டது.

இதைக் கட்டுவதற்கு 9,700 டன் இரும்பு பயன்படுத்தப்பட்டது. 1 ஹெக்டேர் நிலப் பரப்பில் அடித்தளம்போடப்பட்டது. 25 லட்சம் ரிவிட்டுகள் இரும்பு கம்பிகளில் அடிக்கப்பட்டன. கட்டி முடிந்தவுடன் மேல் பூச்சி பூசி அழகுபடுத்த 40 டன் பெயின்ட் உபயோகப்படுத்தப்பட்டது.

முதல் உலகப்போரின்போது ஈபிள் டவர், றேடியோ ஒலிபரப்பு நிலையமாகவும், வானிலை ஆராய்ச்சி மையமாகவும் பயன்படுத்தப்பட்டது.

சமீபத்தில் கோபுரத்தின் மீது டெலிவிஷன் ஒளிபரப்பு சாதனங்களும் அமைக்கப்பட்டுள்ளன.

கடந்த 100 ஆண்டுகளில் மட்டும் ஈபிள் கோபுரத்தை 12 கோடியே 30 லட்சம் பேர் அதன் உயரே ஏறிச்சென்று பாரிஸ் நகரின் அழகை கண்டுகளித்துள்ளனர்.

கோபுரம் முழுவதும் மின்சார விளக்குகளால் அலங்கரிக்கப்பட்டு இருக்கிறது.

ஏராளமான 'லிப்டு' கள்' ஒரு தபால் நிலையம், மியூசியம் கோபுரத்தில் அமைக்கப்பட்டிருப்பது அதன் தனிச் சிறப்பாகும். ★

# விழிப்புலனற்றவருக்கான எலெக்ரோனிக் ரைப்ரைட்டர்

உலகின் முதலாவது பார்வையற்ருேர்க்கான எலக்ட்ரோனிக் டைப்ரைட்டரை இங்கிலாந்து ராயல் தேசிய பார்வையற்ருேர் கல்லூரியில் கண்டு பிடித்துள்ளனர்.

'மௌண்ட் பேட்டன் டைப்ரைட்டா' எனப் பெயரிடப்பட்டுள்ள இதில் பிரெய்லி எழுத்து முறையில் ஆறு புள்ளிகளில் அமைக்கப்பட்டுள்ள 63 அடையாளங்களைக்கொண்டு உலகின் மிகவும் கடினமான எழுத்து வடிவம் கொண்ட ஜப்பான் மொழி உட்பட கணிதம் இசைக்கான குறிகளும் இதில் உள்ளன.

பார்வையற்ருேர் எளிய முறையில் கையாளத்தக்க வகையில் இதன் 'கீ பட்டன்கள் அமைக்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

ஆதாரம்:– ஸ்பெக்ட்ரம் பிரிட்டிஷ் சயன்ஸ் நியூஸ்.

பஞ்சாமிர்தம் பலாசுஅமிர்தம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயிருடன் விளையாடலாமா?

அன்று திங்கட்கிழமை; பாடசாலையில் வழமைபோல் பாடங்கள் ஆரம்பமாகியது; ரவியின் வகுப்பில் கூடவே படிப்பவர்களில் சுதனும் ரமேசும் ரவியின் நண்பர்களாவர்;

நேர அட்டவணையில் அன்றைய தினம் நான்காவது பாடம் உடற்கல்வி ஆகும். அன்று வகுப்பிற்கு ஆசிரியர் வராத காரணத்தினுல் மாணவர்கள் விளையாட்டு மைதானத்திற்கு வந்து தாமாகவே பயிற்சி செய்ய ஆரம்பித்தனர்;

வகுப்பில் நாற்பது மாணவர்கள் வரையில் பயில்கின்றனர். முதலில் இவர்கள் தங்கள் வழமையான உடற்பயிற்சிகளைச் செய்து முடித்தனர்;

பின்பு நேரம் இருந்த காரணத்தினுல் வெவ்வேறு விளையாட்டுக்களில் ஈடுபட்டனர்.

ரவி தனது நண்பர்களான சுதன், ரமேஸ் ஆகியோருடன் தனியான ஓர் இடத்தில் பந்து எறிந்து விளையாடிக் கொண்டிருந்தான்.

வெயில் வேளை என்பதால் அவர்கள் களைப்படைந்திருந்தனர்; ரவியின் முகத்தில் பந்து பட்டு விட்டது. மயங்கி வீழ்ந்தான் ரவி. இதனைச் சுதனும் ரமேசும் அவதானித்தனர்.

இருவருக்கும் பயம் காரணமாக உடல் நடுங்கியது; வியர்வை ஆறுகப்பெருகியது; அப்போது பாடம் முடிவடையும் வேளை என்பதால் மணி ஒலித்தது.

செய்வதறியாமல் திகைத்த சுதனும் ரமேசும் விளையாட்டு மைதானத்தின் ஓரத்தில் ஒரு குப்பைக் குவியல் காணப்பட்டதை அவதானித்தனர்.

'ரவி இறந்து விட்டான் என்னடா செய்வம்? சுதன் கேட்டான். அதற்கு ரமேஸ்,

'அதோ அதிலுள்ள குப்பைக்குள் போட்டு மூடிவிடுவோம்'

உடனே சுதனும் ரமேசும் ரவியின் உடலைக் குப்பைக் குவியலில் போட்டு மூடினுர்கள். பின்பு வகுப்பறைக்கு ஓடி விட்டார்கள்.

இச்சம்பவத்தை இவர்களின் உற்ற நண்பனுன கஜன் வேருெரு வகுப்பிலிருந்து அவதானித்துக் கொண்டிருந்தான். அப்போது அவனுக்கு கற்பித்துக் கொண்டிருந்த விஞ்ஞான ஆசிரியர் கஜனை நோக்கி,

'விஞ்ஞானம்' என்ருல் என்ன? என்று கேட்டார். வெளியே பார்த்துக் கொண்டிருந்த கஜன் உடனே ஆசிரியரை நோக்கி,

'சூழலைப்பற்றி ஆராய்தலே விஞ்ஞானம்' என்று பதிலளித்தான்; அதற்கு ஆசிரியர்,

'ஏன் அப்படிக் கூறுகிருய் கஜன்?

'சேர், நான் வகுப்பறையின் புறச் சூழலை அவதானித்துக் கொண்டிருந்தபடியால் தான் சேர் அந்தக் குப்பைக் குவியலைப் பற்றி இப்பவும் சிந்திக்கிறேன்' என்று, தொடர்ந்து நடந்ததை விளக்கினுன் கஜன்.

உடனே விஞ்ஞான ஆசிரியரும் கஜனும் குப்பைக் குவியலுக்கு விரைந்தனர். அங்கே குப்பைக்குவியலுக்கு வெளியே இரண்டு கால்கள் தெரிந்தன.

கஜன் குப்பையை நீக்கிய போது அதற்குள் காணப்பட்டான் ரவி. ஆசிரியர் நீர் தெளித்ததும் ரவி மயக்கம் தெளிந்து எழுந்தான். பின் தான் குப்பைக் குவியலுக்கு வந்த விபரத்தை அறிந்து கொண்டான் ரவி,

பின்பு ஆசிரியர் சுதனையும் ரமேசையும் அழைத்து விசாரித்தார். அவர்கள் நடந்ததைக் கூறி ஆசிரியரிடம் தெரியாமல் செய்தோம் என்று மன்னிப்புக் கேட்டனர். பின்னர் அவர்களை மன்னித்து அவர்களது பெற்ருேரை அழைத்து விபரம் கூறினுர் ஆசிரியர்.

மாணவர் தெரிந்தோ தெரியாமலோ தவறு இழைக்க நேரிட்டால் அது ஆசிரியருக்கோ பெற்ருேருக்கோ உடனே தெரியப்படுத்தவேண்டும்.

எதையும் விளையாட்டாக நினைக்கக்கூடாது. போனுல் வராதது ஒன்று மானம் மற்றது உயிர் என்ருர் அந்த விஞ்ஞான ஆசிரியர். ★

- வேலணையூர் கே. ஆனந்தன் -




## சின்ன வீடு கட்டுவேன்!

சின்ன வீடு கட்டுவேன்
சிறிய வீடு கட்டுவேன்
மண்ணு வீடு கட்டுவேன்
மகிழ்ச்சியோடு கட்டுவேன்!

பூனைக்குட்டி தாவிட
பொம்மை வைத்து ஆடிட,
பானை சட்டி வைத்திட
பாங்காய் வீடு கட்டுவேன்!

அம்மா இருந்து சமைத்திட
அப்பா இருந்து சாப்பிட
அண்ணன் அக்கா படித்திட
அழகு வீடு கட்டுவேன்!

தாத்தா பாட்டி தூங்கிட
தகுந்த வீடு கட்டுவேன்
மாமாவுக்குக் கட்டுவேன்
மாமிக்கும் தான் கட்டுவேன்!

- ஸ்ரீசங்கர்

# தாய்ப்பால் ஊட்டுவதால் ஏற்படும் நன்மைகள்

# குடும்பக்கட்டுப்பாடு; சிசு மரணம் குறைவு!

வளர்ந்து வரும் நாடுகளில் குழந்தைகளுக்குத் தாய்ப்பால் ஊட்டும் போக்குக் குறைந்து வருகிறது

குழந்தைகளுக்குத் தாய்ப் பாலூட்டுவது ஓர் இயற்கையான கருத்தடுப்பு முறை.

அந்த வழக்கம் மறைந்தால் அடிக்கடி கருவுறுதல் நிகழ்வதுடன், தாய்க்கும் சேய்க்கும் உடல்நலக் கோளாறுகளும் மற்ற சிக்கல்களும் ஏற்படலாம்;

இந்த விஷயம் அரிஸ்டாட்டிலின் காலத்திலேயே தெரிந்ததுதான்.

ஆனுலும் தாய்ப் பாலூட்டுவதால் ஏற்படும் கருத்தடையின் அளவு, நிபுணர்களுக்கு வியப்பூட்டுவதாகவே இருக்கிறது.

ஆபிரிக்காவில் தாய்ப்பால் ஊட்டும் வழக்கத்தினுல் ஒவ்வொரு பெண்ணுக்கும் சராசரியாக நான்கு குழந்தைகள் பிறப்பது தடுக்கப்பட்டிருக்கிறது.

ஆசியாவிலும் இந்த அளவு கிட்டத்தட்ட இதே அளவில் உள்ளது.

ஆனுல் வங்கதேசத்தில் பெண்கள் தாய்ப்பாலூட்டுவதை நிறுத்தினுல் ஆளுக்குக் கூடுதலாக 6, 7 குழந்தைகள் வரை பிறக்கிற சாத்தியக்கூறு உள்ளது;

சில நாடுகளில் தாய்ப்பால் ஊட்டுவதை நிறுத்தியதன் காரணமாக ஏற்படக்கூடிய ஜனத்தொகை வளர்ச்சியைத் தடுப்பதற்காக இரண்டு அல்லது மூன்று மடங்கு அதிகமான அளவில் கருத்தடைச் சாதனங்களைப் பயன்படுத்த வேண்டிய கட்டாயம் ஏற்படக் கூடும்.

### சிசு மரண விகிதம்

பிறக்கிற குழந்தை முதல் ஆண்டு முடிவதற்குள்ளேயே மரித்துப் போவதற்கான வாய்ப்பு சுகாதாரக் காரணிகள், சமூக பொருளாதாரக் காரணங்கள் ஆகியவற்றுடன் தாயின் அடுத்தடுத்த பிரசவங்களுக்கிடையிலான கால இடைவெளியையும் பொறுத்திருக்கிறது.

இரண்டாண்டுகளுக்குள் அடுத்தடுத்துக் கருத்தரிக்கும் போது குழந்தை தனது ஐந்தாவது வயதை எட்டும்முன்



மரித்துப் போவதற்கான வாய்ப்பு 50சதம் அதிகரித்து விடுகிறது.

இதற்கு என்ன காரணம் என்பது இன்னமும் தெளிவாகத் தெரியவில்லை.

ஆனுல் இடைவெளியின்றிக் குழந்தை பெறுவதன் காரணமாகத் தாயின் உடல்நலம் குன்றுவது இதற்கு ஒரு காரணமாக இருக்கலாம்;

முதல் குழந்தை பிறந்தவுடன் தாய் மீண்டும் கருத்தரித்தால் முதல் குழந்தைக்குப் பாலூட்டுவதைச் சீக்கிரமாக நிறுத்தி விடுகிருள்.

இதனுல் அக் குழந்தைக்குப் போதுமான அளவு இயற்கைப் புரதம் கிடைக்காமல் போகின்றது.

இந்தப் புரதப் பற்ருக்குறையினுல் தோன்றும் கோளாறுகளை க்வாஷியோர்க்கர் (Kwashiorkor) என்ற மேற்காப்பிரிக்க மொழிச் சொல்லினுல் குறிப்பிடுகிருர்கள்.

வளரும் நாடுகளில் செய்யப்பட்ட ஓர் ஆய்விலிருந்து ஆண்டுதோறும் 26 லட்சம் குழந்தைகள் போஷாக்குக் குறைவினுல் ஒரு வயது நிரம்புவதற்குள் இறந்து போகிறதாகத் தெரிய வந்துள்ளது.

தாய்மார்கள் சராசரியாக இரண்டு ஆண்டுகளுக்கொரு முறை தான் குழந்தை பெற்றுக் கொள்வது என்று முடிவு செய்வார்களானுல் இந்தக் குழந்தைகளில் 5 லட்சம் பேரையாவது காப்பாற்றிவிட முடியும்.

இதனுல் தாய்மார்களின் உடல்நலமும் மேம்படும்;

வளரும் நாடுகளில் உள்ள பெண்கள் 20 வயதுக்கு மேலும் 39 வயதுக்குக் கீழேயும் மட்டுமே குழந்தை பெறுவது என்று கட்டுப்பாடு விதித்துக் கொள்வார்களேயானுல் பேறு கால மரணங்களில் 11 சதம் வரை குறையும்;

அண்மையில் அமெரிக்காவில் செய்யப்பட்ட சோதனைகளிலிருந்து தாய்ப்பாலூட்டுகிற பெண்களுக்கு முலைப் புற்றுநோய் வருவதற்கான வாய்ப்பு 50 சதம் குறைந்திருப்பதாகத் தெரிகிறது,

பாலூட்டும் காலம் அதிகமானுல் இந்தப் பாதுகாப்பும் அதிகரிக்கிறது; ★

## 'அம்மி மிதித்தல்' தத்துவம்; வாரியார் கூறும் விளக்கம்!

'அம்மி மிதித்தல்' தத்துவம் என்ன கூறுகிறது?

இதற்கு வாரியார் சுவாமிகள் தரும் விளக்கத்தை வாசியுங்கள்:-

திருமணத்தின் போது அம்மியின் மீது மனைவியின் காலைக் கணவன் பற்றி வைக்க வேண்டும்;

கற்புவரம் வாங்குவதே இச்சடங்கின் கருத்தாகும்.

கற்பு என்ற சொல் 'கல்' என்ற சொல்லின் பகுதியையும், 'பு' என்னும் தொழிற்பெயரின் விகுதியையும் கொண்டது;

கல் போன்ற மனத்திண்மை கொள்வதே கற்பு.

மனத்திண்மைக்கு உவமையாகக் கல்லை ஏன் கொள்ள வேண்டும்?

இரும்பை மனத்திண்மைக்கு உவமையாகச் சொல்லலாமே!

ஏன் அப்படிச் சொல்லவில்லை என்ருல் பாரம் அதிகமானுல் இரும்பு வளைந்து கொடுத்துவிடும்.

கல்லோ வளைந்து கொடுக்காது. பிளந்து விடும்.

எதிர்ப்பு எல்லை மீறினுலும்



கிருபானந்தவாரியார்

கற்பு தன்னைத்தானே அழித்துக் கொண்டு மாயுமே தவிர, வளைந்து கொடுக்காது.

இதைத்தான் 'அம்மி மிதித்தல்' எடுத்துச் சொல்கிறது- என்கிருர் வாரியார். ★

### பழங்கள் தரும் பயன்கள்

அத்திப்பழத்தின் சுபாவம் குளிர்ச்சியானது: ஊட்டம் கொடுக்கக் கூடியது.

அன்னுசி குளிர்ச்சியானது. இரத்தத்தைச்சுத்தம் செய்யும் சக்தியுள்ளது.

தோடம்பழம் குளிர்ச்சியானது. பல்சம்பந்தப்பட்ட நோய்கள், தாகம், சரும வியாதிகள் ஆகியவற்றுக்குச் சிறந்தது.

ஆப்பிள் பொதுவாக எல்லாவற்றுக்கும் சிறந்தது; ★




# சித்தத்தைச் சிவன்பாலே வைத்த சித்தர்கள்

அன்பு, அருள், அறிவு ஆகிய மூன்றும் சிறந்த உயிர்ப் பண்புகளாகும். இம் மூன்றும் ஒன்று சேர்ந்து வளர்ந்துவிட்டால் ஏற்படுவதே பேரின்பமாகும்.

நாம் முதலில் எல்லா உயிர்களிலும் அன்பு கொள்ள வேண்டும். நம்முடைய உடம்பும் உறுப்புக்களும் அன்பின் வழியில் நின்று மற்றைய உயிரினங்களின் நன்மைக்காகக் காரியங்கள் ஆற்றுமாயின் அதுவே தொண்டு எனப்படும்.

இதனை யோகநூல்கள் கிரியா யோகம் என்றும், கன்ம யோகம்என்றும் கூறும். யாகத்திற்கு நெய் எவ்வளவு முக்கியமோ அதேபோல யோகத்திற்கு அன்பு ஆதாரமாகும்.

அனைத்து உயிர்கள் மீதும் அன்பு செய்தலாகிய கிரியா யோகம் கைவரப் பெற்ற பிறகு தெய்வத்தின் திருவருளைப் பெறுவதற்கு முயல வேண்டும். திருவருள் என்பது தெய்வத்தின் ஆற்றலால் நமக்குக் கிடைப்பதாகும்.

நாம் பிறரிடம் பயன் கருதாமல் செலுத்துவது உயர்ந்த அன்பாகும். இறைவனிடம் நாம் அன்பைச் செலுத்தி அவரிடம் இருந்து அருளைப் பெறவேண்டும்.

### மறைஞானம்

ஒவ்வொருவரிடமும் இருக்கின்ற நானென்ற நினைப்பு ஒழிதலே ஞான உதயம் எனப்படும். அன்பு, அறிவு, அருள் ஆகிய மூன்றும் ஆன்மா இறைவனை அடைவதற்கு வழிகாட்டும் ஒளிவிளக்குகளாக அமைந்திருக்கின்றன.

சிவஞானம் அல்லது பதி ஞானமே முத்திக்கு வழியாகும். இந்த ஞானத்தைப் பெறுவதற்கு தெய்வத்தின் துணை நமக்கு வேண்டும்; தெய்வத்தின் துணை கிடைத்தவர்களுக்கு அட்டமாசித்திகளும் கைகூடும்;

தமிழில் சித்து என்ற சொல் அருள் விளையாட்டு என்று பொருள்படும். இதனை ஆங்கிலத்தில் மிஸ்டிசிசம் (Mysticism) என்ற சொல்லால் குறிப்பர். மிஸ்டிசிசம் என்பதன் நேர்த் தமிழ்ப் பதம் மறைஞானம் எனப்படும்;

ஆன்மா பரம்பொருளோடு இரண்டற இணைய எடுத்துக் கொள்ளும் முயற்சி அல்லது அம் முயற்சியில் பெறும் அனுபவம் மறைஞானம் எனப்படும்.

சித்து என்ற சொல் சித்தம் என்ற சொல்லில் இருந்து தோன்றியது. சித்தம், மனம், புத்தி, அகங்காரம் ஆகிய நான்கும் அந்தக் கரணம் என்பர்.

இவற்றில் மனம் ஒன்றை நினைக்கும். புத்தி நிச்சயிக்கும். அகங்காரம் முனைப்பைத் தோற்றுவிக்கும். சித்தம் இம் மூன்றுக்கும் காரணமாகும். சித்தத்தின் சலனமே அனைத்துத் தத்துவங்களின் தோற்றமாதலால் சித்தத்தை வெல்லுதல் வேண்டும்.

### பிராணுயாமம்

பிராண வாயுவின் அசைவே சித்தத்தின் அசைவு என்பதை சித்தர்கள் உணர்ந்த காரணத்தினுலேயே இவர்கள் பிராணுயாமத்தை வலியுறுத்தினர். பிராணுயாமத்தின் மூலம் சித்தம் ஒடுங்கிய நிலையே சித்தர் நிலையாகும்,

திரையற்ற நீர் போலச் சிந்தை தெளிந்த சிவநிலை இதுவாகும். சித்தத்தை வென்றவன் சித்தன் என்றும் அவனது அருளனுபவநிலை சித்து அல்லது சித்தி என்றும் கூறலாம்.

ஆன்மா அறிவுடைய பொருளாக இருந்தாலும் தானுக அறியும் அறிவற்றது என்பது சைவசித்தாந்தம் கூறும் கருத்தாகும்; சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது ஆன்மா.

கதிரவனது ஒளியினுல் அக் கதிரவனைக் காணுதல்போல இறையறிவு உணர்த்த உணரும் அறிவே ஆன்மாவின் அறிவாகும். ஆதலின் இப் பேரறிவினைப் பெறுவது சித்து எனவும் அவ்வறிவினைப் பெற்றவன் சித்தன் எனவும் கூறலாம்.

கடல் நீரோடு சேர்ந்த மழைத்துளியும் கடல் நீராதல் போல இறைவனின் அருள் பெற்ற ஆன்மாவும் சித்தன் என்ற நிலையை அடைகிறது.

''கடவுளைக் காண முயலுபவர்கள் பக்தர்கள் என்றும் கண்டு தெளிந்தவர்கள் சித்தர்கள் என்றும்'' தேவாரம் பக்தர்களுக்கும் சித்தர்களுக்கும் வேறுபாடு காட்டுகிறது.

பக்தர் என்பவர் சமய உணர்வோடு வாழ்பவர். குறிப்பிட்ட தெய்வ வணக்கம் உடையவர். உருவ வழிபாடு உடையவர். கோயில் தோறும் சென்று உள்ளம் உருக இறைவனைப்பாடிப்பணிபவர். சமயச் சின்னங்களை அணிபவர்;

ஆனுல் சித்தர்களோ சமயம் என்ற எல்லையைக் கடந்தவர்கள். அருவாக உலகெங்கும் விரிந்துள்ள உயிரில் இறைமையைக் காண்பவர்,

''உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பாலயம்'' என்னும் கோட்பாட்டினர்; ஆன்மீகவாதிகளான இவர்கள் பெரும்பாலும் சமய ஆசாரக் கட்டுப்பாடுகளுக்கு அப்பாற்பட்டவர்களாக வாழ்ந்தார்கள்;

- சிவ. மகாலிங்கம் பி. ஏ. -

''எழும்பாமல் வாசனையைக் கொன்றேன் ஞானி ஏகாமல் வாசனையை அடித்தோன் சித்தன்'' என்று சட்டை முனிச்சித்தர் தனது பாடலிலே குறிப்பிடுகிருர்.

வாசனை என்பது கர்மவினையாகும். இதன் இயல்பாவது பிறவி தோறும் தொடர்வதாகும்; கர்ம வினையை எழும்பாமலே தடுப்பவன் ஞானி எனவும் ஏகாமலேயே தடுப்பவன் சித்தன் எனவும் சட்டை முனி தனது பாடலிலே பகர்கிருர்;

### கர்மவினை

சமுதாயத்துடன் சேர்ந்தும் சேராமலும் தாமரை இலை நீர் போல வாழ்ந்த இவர்கள் பல அரிய நூல்களையும் எழுதியுள்ளார்கள். இவர்கள் மருத்துவம், வானவியல், ரசவாதம், மாந்திரீகம் முதலிய பல துறைகளில் பலநூல்கள் எழுதியுள்ளார்கள்.

சித்தர்கள் கண்டறிந்த வைத்திய முறையே சித்த வைத்தியம் ஆகும். நாடிகளைப் பிடித்துப் பார்த்து நோயை அறியும் முறை சித்த வைத்தியத்திற்கே உள்ள தனி முறையாகும். நீண்ட நாள் பூரண ஆரோக்கியத்தோடு வாழும் முறையைச் சித்த வைத்தியம் சிறப்பாக எடுத்துக் காட்டுகின்றது;

நீண்டகாலம் வாழ்வதற்கான பயிற்சிகளும், காயகல்பம் என்னும் மருந்துவகைகளும் சித்தர் நூல்களிலே கூறப்பட்டுள்ளன. ஒடிந்த எலும்பை ஒட்ட வைக்கும் பச்சிலைகள் சித்த வைத்தியத்தில் உண்டு. முறிந்த எலும்பை வளர வைக்கும் பச்சிலைகளும் உண்டு.

நோய்களின் குணங்களைப் பற்றியெல்லாம் இவர்கள் பாடிய பாடல்கள் குணவாகடத்திரட்டு என்னும் நூலில் இருக்கின்றன. திருமூலருடைய மாணவர் கலிங்கநாதருடைய சீடராகிய போகர் என்பவர் மருந்துச் செடிக்காக ரோமாபுரி வரை சென்ருர் என வரலாறு கூறுகிறது;

### தேரையர்

தேரையர் என்ற சித்தர் எழுதியது நீர்க்குறி சாஸ்திரம். அதிலே சிறுநீரின் நிறத்தைக் கொண்டு நோய்களைக் கண்டறியும் வழி சொல்லப் பட்டு இருக்கின்றது;

சிறுநீர்ப் பரிசோதனையைக் கொண்டு நோயைக் கண்டறியும் ஆங்கிலேய வைத்திய முறைக்கு வழிகாட்டிய பெருமையும் நமது சித்தர்களுக்கே உண்டு; மக்கள் நோயின்றி, கவலையின்றி, நரை, திரை, மூப்பு, பிணியின்றி வாழ்வதற்காக யோகப் பயிற்சியை இவர்கள் வலியுறுத்துகின்றனர்;

மக்களின் ஒழுக்கத்தை வலியுறுத்திச் சித்தர்கள் பாடியிருக்கிருர்கள். பொய், சூது, கொலை, குடி, விபச்சாரம் முதலியவற்றை வன்மையாகக் கண்டித்திருக்கிருர்கள்; கூடா ஒழுக்கம் உடல்நோயை உண்டாக்கும். நல்வாழ்வை அழிக்கும்;

ஒழுக்க நெறியில் நிற்பவர்களே யோகப் பயிற்சியில் வெற்றி பெற முடியும்; இவர்களால் தான் உடல் வலிமையுடன் நீண்ட நாள் வாழ முடியும்;

தெற்கிலே பதினெண் சித்தர்கள் என்று குறிப்பது போல வடக்கிலே நவநாதச் சித்தர்கள் எனக் குறிக்கும் மரபு உண்டு.

சாத்திரக் குப்பையிலும் குலம் கோத்திரம் கூறுவதிலும் தமது பொன்னுன வாழ்வைப் பாழாக்காமல் அவற்றினை இகழ்ந்து தள்ளி மக்களிடம் பரிவு கொண்டு அவர்களிடையே வாழ்ந்து அவர்களை எல்லாம் நல்வழிப்படுத்த முயன்ற நவநாதச் சித்தர்களை வடநாட்டு மக்கள் போற்றி வருகின்றனர்.

ஆன்மாவானது கடவுளை அனுபவித்து அறிவதே அனுபூதிக் கலையாகும். இறையுண்மையை அறிவினுல் காண முடியாது; அனுபவித்தே காணமுடியும்; அனுபூதிமான்கள் பெறும் அனுபவத்தை மொழிகளால் சொல்ல முடியாது.

அதனுல் அவர்கள் குறியீடுகள் வாயிலாகவே வெளியிடுகிருர்கள். மனித மனத்தை விட்டு ஆசைகள் நீங்குமாயின் பேசா நிலையாகிய அனுபூதி நிலை பிறந்துவிடும் என்பதை,

'ஆசா நிகளம்
துகளாயின பின்
பேசா அனுபூதி பிறந்ததுவே'

எனக் கந்தர் அனுபூதியிலே அருணகிரி நாதப்பெருமான் தெளிவாகப் பகர்கிருர். அறிவின் முதிர்ச்சியினுல் மௌனம் ஏற்படுகின்றது. மௌனத்தின் உன்னதத்தில் இறைநிலை பொருந்துகிறது என்கிருர். தவராச யோகியாகிக் தாயுமானவர் மனதைச் செயலற்ற தாக்குதல் முத்திக்கான முதற்படி நிலையென்பது இவரது கருத்தாகும்;

மன ஒருமைப்பாட்டுடன் கண்மூடித் தியானத்தில் இருந்து புலன்களை ஒரு வழிப்படுத்தி இறைவனை உள்ளத்தில் இருத்த வேண்டுமென்பதை 'பேசாது இருந்து பெருநிட்டை சாடு' என்று சித்தராகிய இடைக்காடரின் பாடல் செப்புகிறது;

நாம் செய்கின்ற ஒவ்வொரு செயலுக்கும் ஏற்ற பலனை நாம் அனுபவித்தே தீர வேண்டும் என்று அறுதியாகக் கூறுகின்ற சமயம் எங்கள் சமயமாகும்;

'வினை விதைத்தவன் வினை அறுப்பான், தினை விதைத்தவன் தினை அறுப்பான்' என்பதில் நம்பிக்கை கொண்டவர்கள் நமது மக்கள்.

(வளரும்)




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சிரிப்புக் கட்டுரைகளின் மூலமாக சிந்தனைப் புரட்சி நடத்திய கல்கி!

- பொ. சண்முகநாதன் -

அமரர் 'கல்கி' திரு. ரா. கிருஷ்ணமூர்த்தி அவர்கள் தமிழ் எழுத்துலகிலும் பத்திரிகைத்துறையிலும் புதுமையும், புரட்சியும் செய்தவர். சிறப்பாக அக்காலத் தமிழ் வாசகர்களை தாம் என்ன என்னவெல்லாம் எழுதுகிறுர் என ஆர்வத்துடன் எதிர் பார்க்கச் செய்து, அவைகளையெல்லாம் விழுந்து விழுந்து படிக்கச் செய்தவர். அப்படியொரு பேராற்றல் பேராசிரியர் கல்கியின் எழுத்துக்கு இருந்தது.

அவரின் எழுத்துக்கு இந்த ஆற்றல் எப்படி வந்தது? அவரின் உரைநடையிலுள்ள எளிமை, இனிமை, தெளிவு, கற்பனைவளம்.. இப்படிப் பலவற்றைச் சொல்லலாம். ஆனுல், இவைகளுடன் இவையெல்லாவற்றிற்கும் மேலாக நகைச்சுவையும் சேர்ந்து அந்த உரைநடையை அணி செய்தன என்பதே முக்கிய காரணம். ஆம், அவர் எதை எழுதினுலும் அதில் நகைச்சுவையைக் கலந்தும் இழையோட விட்டும் எழுதினுர்.

இந்த அவலம் நிரம்பிய உலகிலே, மக்களில் பெரும்பாலோர்க்கு வேதனையே வாழ்வாக அமைந்துள்ள இன்றைய நிலையிலேயே நமக்குத் தேவையானது நகைச்சுவையே. அதனைத் தாராளமாகவும், ஏராளமாகவும் அள்ளி வழங்கிய கல்கியின் எழுத்துகளுக்கு வாசகர்கள் மத்தியிலே வரவேற்பும் மதிப்பும் இருந்தமை வியப்புக்கு உரியதல்லவே.

**வாழைப்பழ வசனநடை**

ராஜாஜி குறிப்பிடுவது போல் 'கல்கியின் வசன நடை வாழைப்பழத்தைப் போன்றது. யார் வேண்டுமானுலும் வாழைப்பழத்தை எட்டிப்பறித்துப் புசித்து அதன் இனிமையை அனுபவிக்கலாமல்லவா? அதிலும் அவரது எழுத்துகளைப் படிக்கும் போதெல்லாம் அவருக்கேயுரிய அந்த உரைநடை- அவருக்கு மட்டுமே கைவந்த அந்த நடை கைகட்டிக் கொண்டு அவருக்குப் பணி புரிவது போலிருக்கும். அத்தனை இலாவகமாகவும் சரளமாகவும் கூடவே நகைச்சுவையுடனும் 'அது' அமைந்திருக்கக் காணலாம்.

தமது எழுத்துக்களில் நகைச்சுவைக்கு அதிக முக்கியத்துவம் அளித்து வந்தவரான கல்கி அவர்கள் மிகுந்த நகைச்சுவை உணர்வு மிக்கவர்.

'தனி மனித வாழ்க்கையிலும் சரி தேசிய வாழ்க்கையிலும் சரி நகைச்சுவையானது முன்னேற்றத்திற்கு இன்றியமையாத அம்சங்களில் ஒன்றுகும்' என்பது அவர் மனமார நம்பி ஏற்றுக்கொண்ட கருத்து.

கடவுள் மனிதனுக்கென்று பிரத்தியோகமாய் அளித்து இருக்கும் வரப்பிரசாதமாகிய சிரிப்பை உண்டாக்கவும், பெருக்கவும், வளர்க்கவும்

**பிரபல தமிழ் எழுத்தாளர் கல்கியின் நினைவுதினம் இன்று ஆகும்.**

பாடுபடுகிறவர்கள் எல்லோரும் கடவுளுக்கு உகந்த திருப்பணியைச் செய்கின்றவர்கள் அல்லவா?'

இவ்வாறு நகைச்சுவை எழுத்தாளர்களை மிக மிக உச்சத்தில் வைத்து மதிப்பளிக்கிறுர் அவர்.

'உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாயின் வாக்கினிலே ஒளி உண்டாகும்' என்பது போல் இயல்பாகவும் இயற்கையாகவும் நகைச்சுவை உணர்வு வாய்க்கப் பெற்றவர்களுக்குத்தாம் நகைச்சுவைக்கலை எளிதாகவும் லாவகமாகவும் கைவரும்.

கல்கி அவர்களுக்கு அந்த உணர்வு இருந்திருக்கிறது என்பதற்கு அவரது சொந்த வாழ்க்கையிலிருந்தும் பல எடுத்துக்காட்டுகள் காட்டலாம்.

**துணுக்கு**

பின்வரும் துணுக்குச் செய்தி அதிலே ஒன்று.

'நகைச்சுவை நடிகர் தம்பதிகளான என். எஸ். கிருஷ்ணனும் ரி. ஏ. மதுரமும் நடித்த திரைப்படம் ஒன்றைக் கல்கி பார்த்துவிட்டுத் தமது பாராட்டை நேரில் தெரிவிப்பதற்காக ஒருநாள் மாலை அவர்கள் வீட்டிற்குச் சென்றிருந்தார். இருவரும் அவரை வரவேற்றுர்கள்.

'என்ன சாப்பிடுகிறீர்கள்? காப்பியா டீயா' என்று கேட்டார் கிருஷ்ணன்.

'டீயே மதுரம்' என்றுர் கல்கி'.

இப்படி எத்தனையோ...? ஏன் அவரது கட்டுரைகளில் வரும் நகைச்சுவைகளும் அவரது சொந்த அனுபவம் போலவும்' தாம் எதிர் கொண்ட அனுபவம் போலவும் வலிந்து புகுத்தியது போலன்றியும் அவ்வளவு தத்ரூபமாகவும் இயல்பானதாகவும் இருக்கும்.

'இலங்கைப் பயணம்' பற்றிய கட்டுரையில் அவர் எழுதியுள்ள பின்வரும் பகுதி இதற்கு நல்லதொரு எடுத்துக் காட்டு.

**யாழ். நகர் தமிழ்விழா**

'இலங்கைத் தமிழ் விழாவில் ஒசைச்சுவடி ஊர்வலம் மிகவும் சிறப்பாயிருந்தது. ஊர்வலத்தின் போது நடந்த ரஸமான சம்பவம் கீழே விவரிக்கப்படுகிறது. (இந்தியாவிலிருந்து குளிக்கரைப் பிச்சையப்பா நாதஸ்வரம் கோஷ்டியார் வந்திருந்தனர்).

'ஊர்வலம் பாதி தூரம் வந்தபோது மணி ஒன்பதாகி விட்டது. சிலோன் ரேடியோக்காரர்கள், 'ஒன்பதுமணியிலிருந்து ஒலிபரப்புவதாக அறிவித்திருக்கிறேம்- ஆகையால் நாதசுர வித்துவான்கள்



கல்கி

உடனே பந்தலுக்கு வந்து வாசிக்க வேண்டும்.' என்று வற்புறுத்திஞர்கள். ஆகவே ஊர்வலத்தில் வாசிக்கும் பொறுப்பை இனி உள்ளூர் வித்துவான்களுக்கு விட்டு விட்டுப் பிச்சையப்பா கோஷ்டியார் பந்தலுக்குப் போவதென்று ஏற்பாடாயிற்று.

உள்ளூர் நாதசுரக் கோஷ்டியாரும் வந்து நின்றுர்கள். ஆனுல் வாசிக்கத் தொடங்குவதாக இல்லை. மேலும், கீழும் பார்த்தார்கள். அக்கம் பக்கம் பார்த்தார்கள். மடிலயை உதறிப் பார்த்தார்கள். சட்டைப் பைகளைத் தடவிப் பார்த்தார்கள். 'என்ன? என்ன? என்று பலரும் ஒருவரையொருவர் வினவினுர்கள். சிறிது நேரம் வரையில் விஷயம் மர்மமாகவே இருந்தது. வெளியூர் வித்துவான்களைத் தருவித்ததில் உள்ளூர் வித்துவான்களுக்கு வருத்தமோ என்று கூட நாங்கள் பயந்து போனேம்.

கடைசியில் உண்மை வெளியாயிற்று. தமிழ் விழாவின் கோலாகலத்தில் ஈடுபட்டு மெய்மறந்து போன உள்ளூர் தவில் வித்துவான் தவில் வாத்தியத்தை எங்கேயோ விட்டு விட்டார். நல்ல வேளையாக பிச்சையப்பா கோஷ்டியில் இரண்டு தவில்கள் வந்திருந்தன. அவற்றுள் ஒன்றை வாங்கிக் கொடுத்த பிறகு உள்ளூர் கோஷ்டியார் ஜமாய்க்க தொடங்கினுர்கள். பிச்சையப்பா கோஷ்டியினர் பந்தலுக்குச் சென்றுர்கள். யாழ்ப்பாணத் தமிழர்களின் தமிழ் அன்புக்கு இதைக் காட்டிலும் வேறு உதாரணம் வேண்டுமா?

இப்படிக் கல்கி எழுதியிருந்தார்.

கல்கி இலக்கியத்தில் தொடாத துறைகளே இல்லை. சிறுகதை, நாவல், கட்டுரை, விமர்சனம் இப்படி எல்லாத் துறைகளிலும் புகுந்து விளையாடியது அவரது பேனு. அவர் தொட்ட துறை அனைத்தையும் துலங்கவும் செய்தார்.

**விமர்சனம்**

இசை விமர்சனங்களை எல்லோரும் படிக்க மாட்டார்கள்-படிக்கவும் முடியாது. அத்துறை நுணுக்கங்களை அறிந்தவர்கள் மட்டுமே கதைகளைப் படித்து உணர முடியும்.

ஆனுல் கல்கி தமிழ் படிக்கத் தெரிந்தவர்கள் எல்லாரையுமே அவைகளையும் படிக்கும்படி செய்தவர்கள். அதனுல் வேறொரு வகையில் அவர்களுக்கு இசைமீதும் இசைக் கச்சேரிகள் மீதும் நாட்டம் ஏற்படவும் செய்தார். அவ்வளவுக்கு அவரது இசை நாடக விமர்சனங்களில் கூட 'நகைச்சுவை' இருக்கும்.

நகைச்சுவை என்பது வெறும் பொழுதுபோக்குக்காக மட்டும் இருக்கக் கூடாது. சிரிக்க வைப்பதுடன் மக்களைச் சிந்திக்கவும் வைப்பதாக அமைய வேண்டும். அதுவே, உயர்ந்த வகை நகைச்சுவைக்கு எடுத்துக் காட்டு. அந்த வகையைச் சேர்ந்ததே கல்கியின் நகைச்சுவையும்.

சீரியசான கட்டுரைகள் சாதிக்காதவற்றையெல்லாம் அவரது சிரிப்புக் கட்டுரைகள் சாதித்திருக்கின்றன. அவரது நகைச்சுவையால் சாட்டை அடி பெற்றவர்களும் இருக்கலாம். அப்படியான சிலர் சிரித்துக்கொண்டே தம்மைத் திருத்திக் கொண்டும் இருக்கலாம்.

அவர் நகைச்சுவையை எப்படி எப்படியெல்லாம் எழுத முடியுமோ அப்படி அப்படியெல்லாம் எழுதிக் காட்டி விட்டார். இவை அவர் தனியே நகைச்சுவைக் கட்டுரைகள் கதைகள் என்றும் எழுதி, இத்துறையிலும் முன்னேடியாகத் திகழ்ந்தவர்.

'ஏட்டிக்குப் போட்டி' 'ஓ மாம்பழமே' என்பன இத்தகைய கட்டுரைகளைத் தாங்கி வெளிவந்த அவரது நூல்களாகும்.

நகைச்சுவைக் கட்டுரைகளால் எழுத்தாளன் வாசகர்களுடன் நேரடியாகப் பேசிக் கொள்ளலாம். தங்கள் அனுபவங்களை அவர்களுடன் பகிர்ந்து கொள்ளலாம். அப்படி ஒரு வசதி அதிலே இருக்கிறது. கல்கி வாசகர்களுடன் தமது உறவை இத்தனை தூரம் வியக்கத்தக்க அளவுக்கு வளர்த்துக் கொண்டமைக்கு இதுவும் ஒரு காரணமாக இருந்திருக்கலாம்.

எழுத்துலக மேதை கல்கி, இலட்சக்கணக்கானவர்கள் தமது எழுத்தைப் படித்து மகிழ வேண்டுமென்ற வீறும் வேகமும் கொண்டு எழுதி வெற்றி கண்டவர். வாசகர்களின் எண்ணிக்கையைப் பெருக்கிக் கொள்வதற்காக அவர் என்றுமே தமது எழுத்தையோ, தாம் அவ்வப்போது ஆசிரியப் பொறுப்பேற்று நடத்தி வந்த ஆனந்தவிகடன், கல்கி ஆகிய இதழ்களின் தரத்தையோ குறைத்துக் கொண்டதில்லை.

அவர் மக்கள் இழுத்த இழுப்புக்கெல்லாம் இசைந்து கொடாது, அவர்களைத் தம் எண்ணப்படி தாம் விரும்பிய திசையெங்கும் அழைத்துச் சென்றவர். அதற்கெல்லாம் அவருக்குப் பெரிதும் கைகொடுத்துதவியது அந்த நகைச்சுவைக் கலை.

இந்த நூற்றுண்டின் மக்களுக்குப் பலவித போராட்டங்கள், வறுமை, துன்பம், நம்பிக்கை வரட்சி, ஏக்கம் என்பவற்றிடையே அவர்கள் தவிக்கிறுர்கள்.

இவைகளை எல்லாம் அவர் சில கணங்களாவது மறந்து மகிழ்ச்சியில் திளைக்க நகைச்சுவை ஒன்றினுல்தான் முடியும். இவற்றை நன்கு புரிந்து கல்கி எழுத்துப்பணி புரிந்து வெற்றி கண்டார். ★

வெள்ளித்திரையில்


## "ஷப்ரு" வழங்கும் புதிய வட்டி வீதம்

**நிலையான முதலீட்டுத் திட்டம்**

| காலம் | மாதாந்தம் | முதிர்ச்சி |
|---|---|---|
| 3 மாதங்கள் | — | 15% |
| 6 மாதங்கள் | 15% | 17% |
| 12 மாதங்கள் | 18% | 20% |
| 24 மாதங்கள் | 21% | 23% |
| 36 — | 22% | 24% |

**நிறுவனத்தின் நிதி நிலை விபரம்**

| | 1984→85 | 1985→86 | 1986→87 |
|---|---|---|---|
| மூலதனம் | 2,230,000 | 4,365,000 | 5,817,000 |
| மொத்த ஒதுக்கம் | 1,386,335 | 3,030,474 | 5,485,354 |
| வைப்பு | 27,737,553 | 58,970,386 | 100,577,482 |
| வங்கிக் கடன்கள் | 1 791,516 | 8,283,818 | 7,718,284 |
| ரொக்கமும் வங்கி இருப்பும் | 4,386,371 | 16,206,887 | 25,811,712 |
| வைப்பாளருக்கான வட்டி செலுத்து முன் லாபம் | 5,783,720 | 9,878,026 | 19,310,787 |
| வைப்பாளருக்கான வட்டி | 3,827,514 | 8,505,201 | 16,880,879 |
| வரிசெலுத்து முன் தேறிய லாபம் | 1,956,206 | 1,372,825 | 2,430,012 |
| வரிசெலுத்தியபின் தேறிய லாபம் | 1.356,206 | 1,372.825 | 2,330,012 |
| பங்காளருக்கான சலுகைகள் | | | |

# நம்பிக்கையுடன் சேமிக்க "ஷப்ரு"வை நாடுங்கள்

**நிதித்துறையில் உங்கள் நண்பன், அவனே!**

**பணிப்பாளர் சபை**

திரு. எல். ஈ. கருணரத்ன,
சட்டத்தரணி, சமாதான நீதிவான்
(தலைவர்)

திரு. ஜே. டி. நவரட்ணம்,
(A. I. B. Lond.),
பொது முகாமையாளர்

திரு. எஸ். பாலசுப்பிரமணியம்
(A. I. B. Lond.),
முகாமைப் பணிப்பாளர்

திரு. ஏ. எம். எச். பாரி
(B. A. Hons.)

திருமதி ஆர். பாலசுப்பிரமணியம்

# SHABRA

207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 22073, 24805

61, பௌத்தலோக மாவத்தை, கொழும்பு -4
தொலைபேசி: 589310, 500576


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாவீது



| | | |
|---|---|---|
| 1. உன்னைப்பல | வான்எனநீ | எண்ணியா |
| வாழுகின்றாய் | சொல்மனிதா | உண்மையா |
| ஆண்டவனின் | ஆதரவாம் | கிருபையை |
| அதனைத்தந்த | ஆண்டவனின் | ஆட்களை |
| எதிர்த்துநீயோ | தீயசெயல் | புரிகிறாய் |
| அதைப்பெருமை | யாகப்பேசித் | திரிகிறாய் |
| 2. தீயதான | தந்திரம்நீ | செய்வதில் |
| சதிமுறையில் | அதைமுடித்து | வைப்பதில் |
| கூர்மைநிறை | சவரக்கத்தி | ஒன்றையே |
| உனக்குவமை | கூறவேண்டும் | உண்மையே |
| 3. விரும்பிஏற்க | வேண்டியநல் | நன்மையைக் |
| காட்டிலும்நீ | விரும்புகிறாய் | தீமையை |
| உண்மைதனை | வாழ்க்கையில்நீ | வெறுக்கிறாய் |
| பொய்மைதனைத் | தானேநித்தம் | உரைக்கிறாய் |
| 4. மற்றவன்மேல் | பழிசும ந்த | விரும்புவாய் |
| தீங்குசெய்யும் | எதையும்பேசி | வருகிறாய் |
| பொய்யுரைக்கும் | உன்னுடைய | நாக்கினால் |
| பேசுவாய்தீச் | சொல்லைக்கொடு | நோக்கினால் |
| 5. இந்தகைய | உன்னைஇந்த | உலகினில் |
| இராதபடி | ஆண்டவனார் | விரைவினில் |
| அடித்திடுவார் | அத்துடன்நில் | லாமலே |
| உன்னைஉந்தன் | வீட்டிலும்இல் | லாமலே |
| ஒழித்திடுவார் | நிர்மூலமாய் | ஆகிட |
| அத்துடன்நீ | 'ஜீவனுள்ளோர்' | என்கிற |
| இறைஅடியார் | வாழும்நாட்டில் | இல்லாமல் |
| சாகவும்உன் | வேர் அறுப்பார் | சொல்லாமல் |
| 6. இறைஅடியார் | ஆனநீதி | மான்களே |
| இதனைநன்கு | கண்டிடுவார் | உண்மையே |
| மனதில்ஒரு | பயத்துடன்தான் | காணுவர் |
| பின்புஒரு | சிரிப்புடனே | கூறுவர் |
| 7. 'தம்மிடையே | உள்ளபெருஞ் | செல்வத்தை |
| நம்பிநம்பி | வாழ்ந்ததனால் | உள்ளத்தை |
| வன்மையாக்கித் | தீச்செயலை | மோசமாய் |
| செய்துஅதில் | மேலும்மேலும் | பாசமாய் |
| நின்றதனால் | விண்ணவனும் | இறைவனை |
| இகழ்ந்துநின்ற | மானிடனின் | கதிதனை |
| பார்த்திடுங்கள் | உலகினிலே' | என்றுதான் |
| சிரிப்பினூடே | கூறுகிறார் | இங்குதான் |
| 8. ஆனாலுமோ | எனைப்பொறுத்த | வரையிலே |
| கிளைகள்விட்டுப் | படர்ந்துநல்ல | முறையிலே |
| வளரும்ஒலிவ் | மரத்தைப்போல | இருக்கிறேன் |
| இறைவனாலும் | பாதுகாக்கப் | படுகிறேன் |
| அத்துடனே | இறைவனது | கிருபையில் |
| என்றென்றைக்கும் | நம்புகிறேன் | உண்மையில் |
| 9. ஆண்டவனே | தண்டித்தாய்நீ | எந்தனை |
| என்பதனை | என்றென்றும்நான் | சிந்தனை |
| செய்துஉன்னை | இப்புவியில | துதிக்கிறேன் |
| உன்பெயரை | போற்றிப்போற்றி | மதிக்கிறேன் |
| அத்துடனே | உன்கிருபைக் | காகநான் |
| காத்திருப்பேன் | நிச்சயமாய் | இங்குதான் |
| ஏனெனில் | உலகிலுள்ள | ஆளெல்லாம் |
| உன்கிருபைப் | பண்பறிவர் | நானெல்லாம் |
| 'உண்மையில்நீ | கிருபைநிறை | ஈசனே' |
| என்றவர்கள் | கூறுகிறார் | பூவிலே |

வேதாகம சங்கீதம் - 25

தமிழ் வடிவம்: நவாலியூர் சி. என். செல்லத்துரை

# தான தர்மங்கள் குறித்து அல்-குர் ஆனின் அறிவுரை

நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் தாராளமாகச் செலவு செய்யுங்கள். தவிர, உங்களின் கைகளாலேயே நீங்கள் அழிவில் போட்டுக் கொள்ளாதீர்கள். செலவிடுவதை பயனுள்ள விஷயங்களுக்காக செலவிடுங்கள். நிச்சயமாக அல்லாஹ் பரோபகாரிகளை நேசிக்கிறான்.

(அல் பகரா: 195)

(நபியே) ஜனங்கள் (தானமாக) எதைச் செலவிடுவது? என உம்மிடம் வினவுகின்றனர். (அதற்கு) நீர் 'தேவைக்கு அதிகமாக உள்ளதை' எனப் பதிலளிப்பீராக!

(சூரா பகரா: பிரிவு 27)

விசுவாசிகளே! எவ்வித கொடுக்கல் வாங்கலும் அல்லது எவ்வித நட்புறவும் (அல்லாஹ்வின் அனுமதியின்றி) எவ்வித சிபாரிசும் செய்ய இயலாத ஒரு நாள் வரும் முன்னர், நாம் உங்களுக்கு அளித்தவைகளிலிருந்து செலவிட்டுக் கொள்ளுங்கள்.

(சூரா அல் பகரா: ருகூவு 34)

அல்லாஹ் தஆலா வட்டியை அழிக்கிறான். தான தருமங்களைப் பெருக வைக்கின்றான்.

(அல்பகரா: ருகூவு 38)

முஸ்லிம்களே! உங்களுக்கு மிக்க பிரியமானவற்றை செலவிடாதவரை நீங்கள் (முழுமையான) நன்மையைப் பெற்றுக்கொள்ள மாட்டீர்கள்.


ஆல இம்ரான்: ருகூவு 10

மேலும் நீங்கள் அல்லாஹ்வின் பாதையில் எதைச் செலவிடுகிறீர்களோ அதனுடைய நன்மையை உங்களுக்குப் பரிபூரணமாக நிறைவு செய்து கொடுக்கப்படும். உங்கள் மீது (எந்த விதமான) அநீதியும் இழைக்கப்படமாட்டாது.

(சூரத்துல் அன்பால்: ருகவு 8)

தொகுப்பு:

**- பாத்திமா பஸ்ளு புர்ஹானுதீன் -**



# சஞ்சீவி நூல் வரிசை



வெய்யில் கொளுத்துகிறது. மூச்சுவிடவே சிரமமாக இருக்கிறது. இந்த ஊரின் பெயரைத் தாங்கிய சீமெந்துப்பலகை, அதன் மேல் இரண்டு காக்கைகள்.

சுறு சுறுப்பாக அங்கும் இங்கும் பறந்து திரிந்து, இரை தேடும் இந்தக் காக்கைகள் கூட ஓரிடத்தில் சோம்பியிருக்கின்றனவே...! அவ்வளவு வெய்யிலா...?

ஐஸ்மாதிரிக் குளிராக ஏதாவது குடித்தால் நல்லது.

சிவலிங்கம்... சிவலிங்கம் டேய்...! அவன் மெல்ல அரண்டு விழிக்கிறான். கொட்டாவி விட்டுச் சோம்பல் முறித்து எழுகிறான்.

'என்ன...சின்ன... முதலாளி...?'

'கத்தி... ஒண்டு எடுத்து ஒரு இளனி வெட்டித் தா... போ...'

கனகசிங்கம் நேரே இங்கே தான், சிகரட் வாங்கவாக இருக்கும். வாசலில் ஏறும் போதே 'சூ சரியான வெய்யில்'...... அலுத்தபடியே வருகிறார்.

சிவலிங்கம் குடிக்க ஏதுவாக இளநீர் வெட்டித் தருகிறான். ஆனால் தூக்கிக் குடிக்கவே சோம்பலாக இருக்கிறது.

தூரத்தே யாரோ மஞ்சள் நிற ஜப்பான் குடையுடன் வருகிறார்கள். பெண்ணாக இருக்கலாம்; பெண் தான். அழகாக இருப்பாளோ...! நடை நன்றாக இருக்கிறது.

| | |
|---|---|
| நூல்:- | மோகவாசல் (சிறுகதைத்தொகுதி) |
| கதாசிரியர்:- | ரஞ்சகுமார் |
| அச்சுப்பதிப்பு:- | விஜயா அழுத்தகம் |
| பிரசுரிப்பாளர்கள்:- | யதார்த்தா |
| விலை:- | ரூபா நாற்பது |
| விமர்சனம்:- | உஷா |

மீண்டும் சிவலிங்கம் மேசையில் தூங்கி வழிகிறான். கனகசிங்கத்தார் சிகரெட்டைக் கொளுத்திக் கொண்டு மெதுவாகக் குவாட்டலை நோக்கி நடக்கிறார்.

மீண்டும் வெறுமை ஓரே எரிச்சலாக இருக்கிறது. ரேடியோவைத் திருகுகிறேன். ஏதோ கிரிக்கெட் நேர்முக வர்ணனை, இந்த அறிவிப்பாளரின் சோம்பலான குரலைக் கேட்கவே பற்றிக் கொண்டு வருகிறது. ரேடியோவை வெறுப்புடன் மூடுகிறேன்.

இன்னும் கிட்டே வந்தால்... ஏன் கடைக்கே வந்தால் நன்றாகப் பார்க்கலாம்.

என்ன... இவள் கடைக்கல்லவா வருகிறாள்...! நான் சற்று உஷாராக இருக்க வேண்டும். இப்படியிருந்தால் எப்படி...?

கடைவாசல்படி கொஞ்சம் உயரம். அதில் ஏறும்போது அவளுடைய குதிச்சப்பாத்து வழுக்கப் பார்க்கிறது.

கவனம்... பார்த்து வரக் கூடாதா...?

'It's Allright...... சோடா ஒன்று தாங்க'

சோடா குடுக்க சிவலிங்கத்தை எழுப்பலாமா... வேண்டாம் நானே கொடுக்கலாமே...!

சோடா குடிப்பதற்காகக் கண்ணாடியைக் கழற்றிக் கொள்கிறாள். நல்ல பெரிய விசாலமான கண்கள்.

நான்தான் அவளைப் பார்க்கிறேன்; அவள் என்னைக் கவனிப்பதாகவே காணோம்.

அலுவல் முடிந்து போகும் போது, ஒரு தடவை மின்வெட்டு, இப்போது அவள் மெதுவாக சிரிக்கிறதாக எனக்குப்படுகிறது.

திடீரென பெயர் தாங்கிப் பலகையில் இருக்கும் காக்கைகள் உச்சஸ்தானியில், ஆரவாரமாக... மகிழ்ச்சிப்பெருக்குடன் கரைவதாக எனக்குப் படுகிறது. நெருக்கமாக அமர்ந்து ஒன்றுடன் ஒன்று கொத்தியும் சீண்டியும் விளையாடுகின்றன.

அந்த மாடு இப்போது எழுந்துவிட்டது. புல் மேய ஆயத்தமாகின்றதா...?

ரேடியோவைத் திருகுகிறேன்; சத்தம்... ஏகச்சத்தம்... யாரோ ஸிக்சர் அடித்து விட்டானாம். ஸிக்சர் அடிச்சவனுக்கு ஜே......!

—இது 'மோகவாசல்' சிறுகதைத் தொகுப்பில் தொகுக்கப்பட்ட ஏழு கதைகளில் முதலாவது கதையான 'சுருக்கும் ஊஞ்சலும்' என்ற கதையின் சுருக்கம்.

உடல் சோர்ந்துபோகலாம், உள்ளமும் சோர்ந்துபோகலாம், ஆனால் அதில் எழும் நினைவுகளுக்கு மட்டும் சோர்வே வரக்கூடாது. ஒருவனுடைய உயர்வுக்கும் தாழ்வுக்கும் அவன் மனதில் எழும் எண்ணங்கள்தானே காரணம்? கதையைப் படித்ததும் இப்படித்தான் எண்ணத்தோன்றியது.

மறுகோணத்தில் நின்று பார்த்தால், சக்தி இல்லையென்றால் உலகமே வெறும் ஜடம்தான். அந்தச் சக்தியையே நாம் பெண்ணாக வழிபடுகிறோம்.

இங்கு கதையின் நாயகனுக்கும் உயிர் கொடுப்பது ஒரு பெண்ணின் பார்வைதான்.

சின்ன, மெல்லிய தான ஒரு மன உணர்வைக் கருவாக வைத்து, மிக நாகரிகமாகக் கதாசிரியர் கதையை எழுதி இருப்பதைப் பாராட்ட வேண்டும்.

இதுபோலவே இத்தொகுப்பில் உள்ள அடிசி என்ற கதையும்,

வெறுமையாக எப்போதும் வானத்தையே அண்ணாந்து பார்த்துக்கொண்டிருக்கும் ஒரு அண்ணனுக்கு அற்புதமான ஒரு அண்ணி கிடைக்கிறாள், அவன் வாழ்வும் வளமும் பெற்று உயர்வடைய அந்த சக்தி உறுதுணையாகிறது. நல்லதொரு குடும்பக் கதை.

காலம் உனக்கொரு பாட்டெழுதும், கோசலை ஆகிய கதைகள் சமகால நிகழ்வுகளில் தோன்றிய கதைகள் என்றேசொல்லவேண்டும்.

மேலும், இத்தொகுதியில் உள்ள கதைகள் ஒவ்வொன்றிலும் ஏதோ ஒரு இறுக்கம், தெளிந்த நீரோடையில் சலசலவெனத் துள்ளிவரும் நீரினைப்போல் அல்லாது, இன்றைய சமூகத்தின் விரக்தி மனப்பான்மையைப் பிரதிபலிப்பதாக உள்ளது.

கதைகள் என்றால் பண்டிதர் தொடக்கம் பாமரர் வரை விரும்பிப்படிக்கும் ஓர் அம்சமாகும். இன்னும் கொஞ்சம் விளங்கிக் கொள்ளக் கூடியதாக எழுதியிருந்திருக்கலாம்.

## இதயம் கனக்கிறது!

மைதீட்டிய மலர் ஒன்று
சொன்னது
மோனத்தாமரை நானென்று
நிலவின் குளிர்மையில்
நீலத்திரைகளில்
கானக்குயிலாய் நான்மாறி
சந்தக்கவிதைகள்
சொந்தக் கருவினில்
நான்பாட
பந்தம் விட்டது, பாசம்
கொன்றது
நெருப்பாய் சுட்டது
தணலாக
எடுப்பார் கையினில்
தடுப்பாரின்றியே
கொடுப்பார் கொடுத்தனர்
பொருளாக—
முடிப்பேன் என்றவள்
முடித்தே போயினள்
இரவல் வாங்கிய பேனாவாய்
மையாய் காய்வதும்
மெய்யால் நோவதும்
ஐயா என்னது இதயம்தான்

—செவ்வந்தி மகாலிங்கம்


## சமாதானத்தின் கதி

நாங்கள்
வெண்புறாக்கள்
சமாதானத்தின்
சின்னங்கள்
நம்மையே
வேட்டையாடுகிறார்கள்.

- கலை அரசன்

# சொற்சிலம்பம்

## போட்டி இல: 106



சொற்சிலம்பம் இல: 106
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

பெயர்: ..................................
விலாசம்: ..................................
..................................

———— இங்கே வெட்டுக ————

**முடிவு திகதி: 13 - 09 - 1989**

**இடமிருந்து வலம்:**

1. புகழ்பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்று 6. சரஸ்வதி குழம்பியுள்ளார் 7. வீடுபேறு 8. குந்தி புத்திரரில் ஒருவர் 9. துயரம் 11. தொடர்பின்றி இல்லாமல் செய் (தலைகீழாக) 14. அச்சம் 17. சொல்லுவது 18. ஒரு வகை வாத்தியம் 19. கடலில் தோன்றுவது 21. பாத்திரம் 22. சீவி தயாரிப்பதற்கு.

**மேலிருந்து கீழ்:**

1. சிலம்பு வித்தையை இப்படியும் சொல்வர் 2. பிதிர்களுக்குச் செய்யும் சிரார்த்த தினம் 3. பூமி தலைகீழாகவுள்ளது 5. தலையெழுத்து 7. இள மரத்தை இப்படிக் கூறுவர் 8. நிலவிரிப்பில் இதுவும் ஒன்று 10. தோழன் அல்லது தோழியை அழைப்பது 12. ஒரு வகை மரம் 16. பூ மொட்டுக் குழம்பியுள்ளது. 17. நஞ்சு 18. ஒன்றுசேர்.

**நிபந்தனைகள்**

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்று பேர் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன்/சஞ்சீவி ஊழியர்கள் கலந்துகொள்ள முடியாது.

படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி அனுப்பினால் மாத்திரமே ஏற்றுக்கொள்ளப்படும்.

# நல்ல மனம்

ஒரு காலத்தில் அவர்களும் வசதியாக இருந்தவர்கள் தான். விதி யாரைத் தான் விட்டுவைத்தது. சுழன்றது காலச்சக்கரம். சரிந்தது நிழல்கொடுக்க இருந்த அந்த ஆலமரம். தள்ளப்பட்டது அந்தக் குடும்பம் வறுமைக் கோட்டிற்குள். இதுதான் இதுவரை நடந்து முடிந்த அவர்களது வாழ்க்கைச் சம்பவம்.

பொலிவுடன் திகழ்ந்த அந்தக் குடும்பம் பொலிவிழந்து காணப்பட்டபோது நடேசர் சற்று ஒதுங்கிவாழ முயற்சித்தார். அண்ணனின் இந்தப் போக்கால் மனங்குழம்பிய பூங்காவனம் செய்வதறியாது திகைத்தாள்.

பணமிருந்தபோது வந்த பந்தபாசங்களும் ஓடி ஒதுங்கிக்கொண்டன. பணத்தினால் எதையுமே சாதிக்கமுடியும் என்று நினைக்கும் இந்தச் சின்ன உள்ளம் படைத்த சமுதாயத்தை எண்ணி அவள் வெறுப்படைந்தாள்,

கரடு முரடான பாதையிலே பயணம் செய்துகொண்டிருக்கும் தனது குடும்பத்திற்காக மிகவும் வருந்தினாள்.

தனிமரமாய் இருந்திருந்தால் அவள் இவ்வளவு வேதனைப்பட்டிருக்கமாட்டாள். கிரிஜாவின் எதிர்காலத்தைப் பற்றித்தான் அந்தத் தாயுள்ளம் தவித்தது.

கிரிஜாவின் பள்ளிச் சிநேகிதிகள் குடியும் குடித்தனமுமாக இருக்கும்போது இவள் மட்டும் தனக்காகவும், தன் விதவையான தாய்க்காகவும் இன்ப துன்பங்களை எல்லாம் வெறுத்து, சதாவையல் மெஷினுடன் போராடி, சுமைதாங்கியாக வாழ்வதை நினைக்கும்போது எந்த ஒரு தாயுள்ளமும் வேதனையடையாமல் இருக்க முடியாது.

தனக்காக இரக்கப்படும் தாய்க்காக அனுதாபப்பட்டாள். ஆறுதல் வார்த்தைகள் கூறினாள். இறந்த காலத்தைப்பற்றி எண்ணுவதைவிட, நிகழ்காலத்தைப் பற்றிச் சிந்திப்பதே சிறந்தது என நினைத்த அவள் என்றும் மகிழ்ச்சியாகவே இருந்தாள்.

★ ★ ★

இன்பத்தைக் கண்டு மகிழ்ச்சி அடையும் மனிதன், துன்பத்தைக் கண்டு துவண்டு போவது இயற்கைதான். ஆனால் இன்பமும், துன்பமும் இரண்டறக் கலந்தது தான் மனித வாழ்க்கை என்பதை உணர்ந்துகொண்ட உள்ளங்களுக்கு, துன்பத்தின் பிரதிபலிப்புத்தான் சுபீட்சத்தின் விடிவு என்பது சொல்லாமலே புரிந்துவிடுகின்றன.

திட நம்பிக்கையும், மனோவலிமையும் உள்ளவர்களை நாம் அன்றாடம் சந்திக்க முடியாவிட்டாலும் விதியின் விளையாட்டுக்கள் விஸ்வரூபம் எடுக்கும் பொழுதாவது அவர்களைச் சந்திக்கும் ஒரு சந்தர்ப்பம் கிடைக்கிறதல்லவா...?

நெஞ்சில் உறுதிகொண்ட கிரிஜா போன்றவர்களை நாம் கற்பனையிலே கூடக் காண முடியாது.

மகனுக்கு வசதியான இடத்தில் பெண்பார்க்கும் யோசனை தான் தற்போது நடேசரின் உள்ளத்தில் முளைவிட்டிருந்தது.

என்னதான் இருந்தாலும் நடேசு மாமா தன்னுடைய அந்தஸ்தை விட்டுக்கொடுக்க மாட்டார் என்பதும் கிரிஜாவிற்குத் தெரியும்.

ஆனால் கிரிஜாவுக்கு கைநிறைய சீதனம்கொடுத்து கல்யாணம் செய்துவைக்கும் நிலையிலும் பூங்காவனம் இல்லை.

தங்களின் இயலாமையை நினைத்து தனக்குள்ளேயே வேதனைப்படும் அந்தத் தாய் உள்ளம் நயினாதீவாள்தான் என்னுடைய பிள்ளையைக் காப்பாற்றவேணும் என்று அடிக்கடி கூறிக்கொள்ளும்...

அந்தத் தாயுள்ளத்தின் ஏக்கப் பெருமூச்சுகள் கலைந்து போகாத கற்பனைகளாயின.

முகுந்தனது நல்ல உள்ளத்திலே எழுந்த தியாக அருவிகள் வரண்டுபோன கிரிஜாவின் இதயத்தை இதப்படுத்தத் துடித்தன.

நாட்கள் நகர்ந்தன கிரிஜா—முகுந்தன் சந்திப்புகள் சகஜமாயின.

**- நயினையூர் இ. சிவனேஸ்வரன் -**

சின்ன வயது தொடக்கம் கிரிஜாவை முகுந்தனுக்குக் கல்யாணம் செய்துவைக்க வேண்டும் என்று நடேசரும், தங்கை பூங்காவனமும் தங்களுக்குள்ளேயே தீர்மானித்திருந்தனர்.

பெற்றோரின் உள்ளங்களில் அரும்பியிருந்த ஆசைகள் நிராசைகளாகக் கூடாது என்பது முகுந்தனதும் கிரிஜாவினதும் அப்போதைய நிலைப்பாடாகவும் இருந்தது.

ஆனால் பூங்காவனம் விதவையாகிய பிறகு சொத்துக்களும் மூலைக்கு மூலை முடங்கிப்போக நடேசரின் மனமும் நல்லாய் மாறிப்போய்விட்டது.

தங்களுடைய அந்தஸ்திற்கும் கௌரவத்திற்கும் கிரிஜா மருமகளானால் களங்கமாய்ப் போய்விடும் என்பதற்காக

இது நடேசர் வீட்டிற்கும் படிப்படியாகத் தெரியவந்தது. கிரிஜா மருமகளாவதை விரும்பாத முகுந்தனின் தாய் இந்த உறவை முளையிலேயே கிள்ளி எறிந்துவிடவேண்டும் என்று எத்தனையோ தரம் முயற்சித்தாள். முடியவில்லை!

ஆனால் தனது முடிவை இம்மியளவும் மாற்றிக் கொள்ள விரும்பாத முகுந்தன் கடைசியாகக் கூறினான்.

'அம்மா கிரிஜா என் சொந்த மச்சாள். அத்தோட சின்ன வயதிலேயே கஷ்டத்தை அனுபவிச்சவள். அவளைக் கடைசிவரையும் கண்கலங்காமப் பார்க்க வேண்டுமென்பதுதான் என்னுடைய ஆசை.

என்று கூறி முடிக்க நடேசரும், மனைவியும் மௌனமாய் இருந்தார்கள்.

(யாவும் கற்பனை)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தமிழ் எழுத்து முறையில் மாற்றங்கள்

## வரிவடிவ ஒழுங்காக்கம் - 1

தமிழ் எழுத்து முறையில் மாற்றங்கள் சில புகுத்தப்படல் வேண்டும் என்னும் கருத்து அறிஞர் சிலரால் முன்வைக்கப்பட்டுள்ளன.

மாற்றமே கூடாது என்று நம்புவோரும் வாதிடுவோரும் உள்ளனர்.

மாற்றம் வேண்டும் என்போர் புதிய தேவைகள் சிலவற்றையும் முயற்சிச் சிக்கனத்தையும் எளிமையையும் நியாயங்களாகக் காட்டுவர்.

திருத்தம் அல்லது மாற்றம் வேண்டுவோரின் கருத்துகள் பலவற்றையும் தொகுத்து நோக்குகையில் அவை மூவகைப்பட்டு அமைந்துள்ளமை புலப்படும்.

(அ) தமிழில் இப்பொழுது உள்ள எழுத்துகள் போதியன அல்ல; மேலுஞ் சில எழுத்துகளைச் சேர்த்துக் கொள்ளல் வேண்டும் — இது ஒரு கோரிக்கை.

(ஆ) தமிழில் இப்பொழுது உள்ள எழுத்துகள் அதிகம்; அவற்றின் எண்ணிக்கையைக் குறைத்தல் வேண்டும் — இது மற்றொரு கோரிக்கை.

(இ) தமிழ் எழுத்து வரிவடிவத்தில் ஒழுங்கீனங்கள் உள்ளன. அவற்றைச் சீராக்கல் வேண்டும் — இது இன்னொரு கோரிக்கை.

இவற்றுள், இறுதியாக உள்ள கோரிக்கை — வரிவடிவச் சீரமைப்பு — இப்பொழுது இலங்கையிலுள்ள படிப்பாளிகள் சிலராலும் ஆட்சி அதிகாரம் உள்ள சிலராலும் அடிக்கடி சிந்திக்கப்படுகிறது.

இவைபற்றிக் கருத்தரங்குகளும் பத்திரிகைக் கட்டுரைகளும் வாதப் பிரதிவாதங்களும் நடைபெறுகின்றன. ஆகவே அந்த மூன்றாவது கோரிக்கையை முதலிலே பார்க்கலாம்.

### ஒழுங்கீனம்?

வரி வடிவத்தில் ஒழுங்கீனம் என்று சொல்லப்படுவன எவை?

தமிழிலே பதினெட்டு மெய் எழுத்துகள் உள்ளன. க், ச், ட், த், ப், ற், ங், ஞ், ண், ந், ம், ன், ய், ர், ல், வ், ழ், ள் என்பன அவை.

இவற்றில் ஒழுங்கீனம் உள்ளன என்று யாரும் சொல்லியுள்ளதாகத் தெரியவில்லை. இவற்றுள், த, ற, ந, ழ என்பன அடியிலே ஒரு வித 'வால்' உள்ளனவாய் அமைகின்றன. அந்த வால்கள் இல்லையானால், கணனி முதலிய நவீன பொறிகளுக்கு உகந்தன ஆகும் என்று சிலர் சுட்டிக்காட்டியுள்ளனர். டாக்டர் வா. செ. குழந்தைசாமி 'அறிவியல் தமிழ்' என்னும் நூலில் அவ்வாறு கூறுகிறார்.

ஆயினும் இவற்றை வடிவ ஒழுங்கீனம் என்று கருதுவார் இல்லை; எழுத்துகளை வடிவமைக்கும் நிபுணர்களுக்கும் வார்ப்பகங்களுக்கும் (ஃபவுண்ட்றி) உரிய பிரச்சினை இது.

இதுபற்றி இப்போதைக்கு அதிகம் கவலைப்படாமல், பிறிதொரு தருணத்தில் அந்தப் பிரச்சினையைத் தனியாக நோக்கலாம். இப்போதைக்கு மெய்யெழுத்துகளில் ஒழுங்கீனம் இல்லை என்று கருதிக் கொள்வோம்.

மெய்யெழுத்துக்கள் போலல், உயிர் எழுத்துகள் உள்ளன; உயிர்மெய் எழுத்துகளும் நாம் கவனிக்கவேண்டியவை.

### உயிர் எழுத்து

முதலில் உயிர் எழுத்துகளைப் பார்ப்போம்.

அ, ஆ, இ, ஈ, உ, ஊ, எ, ஏ, ஐ, ஒ, ஓ, ஔ என்பன அவை. இவை குறிலும் நெடிலும் கொண்ட ஐந்து சோடிகளாகவும், ஐ, ஔ என்னும் தனிவகை நெடில்கள் இரண்டும் கொண்டு அமைகின்றன.

இவற்றுள் 'அ' குறில்; 'ஆ' நெடில். இங்கு கீழ் வாலும் சுழியும் கொண்டு நெடிலாக்கம் நிகழ்கிறது. 'இ' என்பதற்கும் 'ஈ' என்பதற்கும் உருவ ஒற்றுமையே இல்லை. அவை முற்றிலும் வித்தியாசமான உருவங்கள்; 'எ' என்னும் குறிலுக்கு, கீழ்ச்சாய்வு சிறுகோடொன்று சேர அது 'ஏ' என்னும் நெடில் ஆகிறது.

'ஒ' என்னும் குறிலுடன் கீழ்ச் சுழி ஒன்று சேர்ந்து நெடில் ஆகிறது; 'உ' என்னும் குறிலுடன் 'ள' ஒன்று தொற்றிக்கொண்டு இருக்கும்போது அது நெடில் ஆகிறது.

சுருக்கமாகச் சொல்வதானால், உயிர்க் குறிலை நெடில் ஆக்கும்போது இரண்டு இடங்களிற் சுழி பயன்பட, ஏனைய மூன்று இடங்களிலும் மூன்று வித்தியாசமான உபாயங்கள் பயன்படுகின்றன. இவற்றினை ஒரு சீராக்கி எளிமைப்படுத்துதல் நன்று.

க, கா, ச, சா...... ந, நா, ம, மா முதலிய எழுத்துக்களை நோக்குகையில் அவற்றில் எல்லாம் 'ா' என்பது நெடிலாக்கக் குறியாகப் பயன்படுகிறது. 'ா' என்பதன் பயன்பாட்டை விரிவுபடுத்தி உயிர் எழுத்துகளின் நெடிலாக்கத்துக்குப் பொதுவான உபாயமாகக் கொள்ளுதல் வேண்டும் என்பது நிபுணர்கள் சிலரின் கருத்தாகும்.

கொடுமுடி எஸ். சண்முகம் அவர்களும் குழந்தைசாமியும் இவ்வாறு கருதுகிறார்கள்.

இந்த மாற்றத்தை ஏற்றுக் கொண்டால் உயிர் எழுத்துகள் அ, அா, இ, இா, உ, உா, எ, எா, ஐ, ஒ, ஒா, ஔ என்று வரும். இவ்வாறு செய்ய ஆ, ஈ, ஊ, ஏ, ஓ ஆகிய எழுத்துருக்களை விட்டுவிடலாம். இப்படிச் செய்வதனால் எழுதுவோருக்கும் வாசிப்போருக்கும் சிரமம் குறையும்.

### உயிர்மெய் எழுத்து

இனி, உயிர்மெய் எழுத்து வரும் உயிர்க்குறிகளைப் பார்ப்போம். எடுத்துக்காட்டாக, 'பானு' வரியை நோக்குவோம்.

'ப, பா, பி, பீ, பு, பூ, பெ, பே, பை, பொ, போ, பௌ' என்று அது வரும்.

இவற்றிலே பல ஒழுங்கீனங்கள் உள்ளன.

(i) குறில்களை நெடில் ஆக்குவதற்கு, ஓர் இடத்தில் 'ா' என்பதும் ஏனைய இடங்களிலே சுழிகளும் பயன்பட்டுள்ளன. இந்தச் சுழிகள் மேலும் கீழும் பக்கத்திலுமாகப் பலவகைப்பட்டு இணைந்துள்ளன.

(ii) சில எழுத்துகளில் இரண்டு அலகுகள் உள்ளன. (பா, பெ, பே, பை என்பவற்றைக் காண்க)

(iii) சில எழுத்துகளில் மூன்று அலகுகள் உள்ளன. (பொ, போ, பௌ என்பவற்றைக் காண்க)

(iv) சில எழுத்துகளில் உயிர்க்குறிகள் மெய்க்குறியைத் தொடர்ந்து வலக்கைப் பக்கமாக வருகின்றன. (பா, பி, பீ, பு, பூ என்பவற்றைக் காண்க)

(v) சில எழுத்துக்களில் உயிர்க்குறிகள் மெய்க்குறியின் இடப்புறத்தில் அமைகின்றன. (பெ, பே, பை ஆகியவற்றைக் காண்க)

(vi) சில எழுத்துகளில் மெய்க்குறியின் இடத்தும் புறத்துமாக வருகின்றன.

சாலினி இளந்திரையன்

இந்த ஒழுங்கீனங்களை எல்லாம் மனத்திற் கொண்டு போலும் முனைவர் (திருமதி) சாலினி இளந்திரையன் 'தமிழ் எழுத்துக் குறியீடுகள், எழுத்தின் மேலேயும் கீழேயும் முன்னேயும் பின்னேயும் நாலுவிதமாகத் தொற்றிக் கிடந்து எழுத்தின் அழகைக் குலைக்கும் நிலை' என்று குறிப்பிடுகிறார்.

மேற்குறிப்பிட்ட ஒழுங்கீனங்களைத் தீர்ப்பதற்கு யோசனைகள் பல கூறப்பட்டுள்ளன; அவற்றுள் ஒரு யோசனையின்படி, உயிர்மெய் வரிசைகள் பின்வருமாறு வரும்:

லா, லா, லி, லீ, ல‌ு, லூ, லெ, லே, லை, லொ, லோ, லய என்று வரும்.

ு, ூ, ய என்னும் புதிய எழுத்துக்குறிகள் புகுத்தப்பட்டுள்ளன. அத்துடன் கிரந்த எழுத்துகளிலிருந்து கடன்பெற்ற ு, ூ என்னும் குறிகளும் பயன்பாட்டு விரிவு பெறுகின்றன. சிலர், உயிர் மெய் வரிசையில் வரும் உயிர்த் துணைக் குறிகளே உயிர் எழுத்து வரிசையிலும் வருதல் வேண்டும் என்றும் வாதிப்பர்.

அவர்களின் கொள்கைப்படி, உயிர் எழுத்துகள் பின்வருமாறு வரும்:

அ, அா, அி, அீ, அு, அூ, அெ, அே, அை, அொ, அோ, அய.

★ கி, கீ ஆகிய எழுத்துக்கள் மேல் காணப்படும் விசிறிகளை அ வுக்கு மேல் பாவிக்க இ, ஈ என்ற எழுத்துகள் வரும்.

இத்தனை மாற்றங்களையும் சேர்த்து ஒரு சிறு பந்தியை எழுதிப் பார்ப்போம்.

(அ) இப்பொழுதுள்ள பழைய எழுத்து முறைப்படி:

உங்கள் ஊர் முருகன் அருளால் நிச்சயமான விஷயம் இது: விவாகமும் அவன் சந்நிதியிலே நடப்பதுதான் பொருத்தம். சென்னை சேர்ந்ததும் முகூர்த்தத்துக்கு நாள் குறிப்பிட்டு நாளைத் தபாலிலேயே உங்களுக்கு எழுதி அனுப்புகிறோம்.

(ஆ) புதிய முறைப்படி:

அுஙகாள அூர முருகான அருளால நிசசாயமானா விஷயாம அாது. விவாகாமும அவான சாநநிதியில யேே நாடபபதுதான பரேுததாம. சனெனஐ சாோநததாும முகூாததாததுககு நாள குறிபபிடடு நாளைத தாபாலிலயேே அுஙகாளுககு அமெழுதியானுபபு கிறூம.

இவ்வாறு ஒழுங்கினத்தைத் திருத்தும்போது, அதனுற் கிடைக்கும் நன்மை என்ன? எழுத்துக்கள் தருக்கரீதியாக ஒழுங்காக அமைக்கப்பட்டுள்ளன என்று மன நிறைவு கொள்ளலாம். புதிய முறையைப் பழகிக் கொள்வதும் ஒருவேளை இலகுவாக இருக்கக்கூடும்; பழகியவர்கள் அந்த முறைப்படி எழுதுவதும் வாசிப்பதும் இலகுவாகலாம். தட்டச்சு, கணனி எழுத்து, அழுத்தல் அச்சீடு (லெற்ற(ர்)ப் பிறெஸ்) ஆகியவையும் இலகுவாதல் கூடும்.

### பெரிய நட்டம்

ஆனால் ஒரு பெரிய நட்டம் உண்டாகிவிடும். உலகத்திலுள்ள எழுத்தறிவுள்ள அத்தனை தமிழர்களும் எழுதப் படிக்கத் தெரியாதவர்களாக மாறிவிடுகிறார்கள். எழுதுவதிலும் வாசிப்பதிலும் உள்ள வேகம் பாரதூரமாகப் பாதிக்கப்படும்.

அதுமட்டுமன்றி, ஏற்கெனவே எழுதி அச்சிடப்பட்டுள்ள நூல்களை வாசித்து விளங்குவதற்குப் பழைய முறையையும் தெரிந்தவர்களாகத் தமிழர்கள் இருத்தல் வேண்டும். இது கல்வி அறிவுக்கும் வாசிப்புப் பழக்கத்துக்கும் பெரியதொரு தடையாக அமையும்.

தருக்க ஒழுங்கினைப் பேண என்று புறப்பட்டு, இத்தனை பெரிய நட்டங்களை நாங்கள் அடைவதா?

கூடாது; கூடாது.

அப்படியானால் நாம் செய்யத்தக்கது என்ன?

மாற்றமே வேண்டாம் என்று சும்மா இருப்போமா?

(வளரும்)

- முருகையன் -

## பொது அறிவுப்போட்டி இல. 32

1. உலகின் அதி உயர யுத்தமுனை எது? ... ... ... சியாச்சென் / பெய்ரூட்
2. சிலசமயம் இதுவும் தூங்கிவிடுவதுண்டு? ... ... ... ... கண்கள் / மனம்
3. பாரதியாரின் முக்கிய கொள்கை எது? ... ... மது ஒழிப்பு / சாதி ஒழிப்பு
4. கப்பலோட்டிய தமிழன் என்று அழைக்கப்படுபவர்? ... ... ... ... ... ... ... ... வ. உ. சிதம்பரனார் / வாஞ்சிநாதன்
5. ஒரு நிமிடத்திற்கு எத்தனை வார்த்தைகள் பேசலாம்? ... 100-200 / 50-100
6. சீக்கிய மதத்தை உருவாக்கியவர் யார்? ... ... ... ஆதிசங்கரர் / குருநானக்
7. சிந்தனைக்கு முக்கியம் எது? ... ... ... ... ... இயற்கை அறிவு / படிப்பு
8. முல்லை நிலத்திற்கு விளக்கம் தருவது? ... ... ... ... காடுகள் / வயல்கள்
9. சீறாப் புராணத்தைத் தந்தவர் யார்? உமறுப் புலவர் / சோமசுந்தரப் புலவர்
10. அதிக வெப்பமுள்ள மண் எது? ... ... ... ... ... கரிசல் மண் / களிமண்
11. ஊனம் இங்கும் ஏற்படலாம்? ... ... ... ... ... உடலில் / உள்ளத்தில்
12. சங்க காலம் எத்தனை வகை? ... ... ... ... ... .. ... மூன்று / ஐந்து

பெயர்:- ..............................

விலாசம்:- ..............................

..............................

பொது அறிவுப்போட்டி இல: 31
சஞ்சீவி,
292/2, நாவலர் வீதி,
யாழ்ப்பாணம்.

..................இங்கே வெட்டுக..................

### நிபந்தனைகள்

சரியான விடைகளை அனுப்பியவர்களில் மூன்றுபேர்கள் குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்பட்டு பரிசுகள் வழங்கப்படும். கடிதம் கிடைத்தவுடன் நேரில் வந்து பணத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

ஆசிரியரின் தீர்ப்பே முடிவானது. உதயன் / சஞ்சீவி ஊழியர்கள் போட்டிகளில் கலந்து கொள்ள முடியாது.

சரியான விடைகளின் கீழ்க் கோடு இடுக. பின்னர் இப்படிவத்தைக் கத்தரித்து அஞ்சல் அட்டையில் ஒட்டி 20 - 09 - 1989 புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

கடித உறையினுள் வைத்து அனுப்பப்படும் படிவங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.

| | |
|---|---|
| முதலாம் பரிசு: | 100 ரூபா |
| இரண்டாம் பரிசு: | 50 ரூபா |
| மூன்றாம் பரிசு: | 25 ரூபா |

### நேசிக்க மாட்டேன்!

வானத்து
நட்சத்திரங்கள்
எனக்கு
எட்டவில்லைதான்
அதற்காக
கண்ணாடிக் கற்களை
நேசிக்க மாட்டேன்.

— [illegible]

# தவறை ஒப்புக் கொள்பவனே தலைசிறந்த மனிதன் ஆவான்!

சிந்தனைக் கட்டுரை

- தமிழில் கே. வி. இராமநாதன் -

ஒரு நுண்ணியமான இயந்திரம் பழுதடைந்துவிடில் அதன் காரணத்தைக் கண்டறிய சோதனை செய்து பார்க்க வேண்டும் என்பது பகுத்தறிவாகும்.

அந்த இயந்திரத்தைப் பழுது பார்க்கும் திறன் கொண்ட ஒருவரைக்கொண்டு பரிசோதனை செய்ய வேண்டும் என்பதைப் பகுத்தறிவு உணர்த்திவிடும்.

தன்னுள்ளே இருக்கும் மனசு என்ற நுண்ணிய இயந்திரத்தைப் பகுத்தறிவால் ஆராய்ச்சி செய்ய வேண்டும் என்று ஒரு சிலரே உணர்ந்து கொண்டார்கள்.

இயந்திரத்தின் ஒரு பாகமான மூளை வேலை செய்து கொண்டிருக்கும்போது இடை இடையே தற்காலிகத் தடங்கல்கள் ஏற்படுகின்றன. பல காரணங்களினால் இத்தடங்கல்கள் ஏற்படுகிறது. முக்கியமாக கெட்ட கோபம், எரிச்சல், சஞ்சலம், குன்றிய மனவுறுதி என்பனவற்றைக் குறிப்பிடலாம்.

தொண்ணூறு சதவிகிதமும் மேற்காட்டிய தீமைகள் ஒரு சிந்தனை அல்லது பல எண்ணங்கள் ஒன்று சேர்ந்து இறுகிய மணல் துணுக்குகள் சக்கரத்தைச் சுழலவிடாது தடை செய்வதுபோன்று, இயந்திரத்தைச் செயலிழக்கச் செய்து விடுகிறது.

ஆத்ம சோதனை செய்வதால் நல்ல பயனடையலாம். இதன் மூலம் அடுத்தடுத்து நிகழும் துன்பம், மகிழ்ச்சி, இந்த இரண்டிற்குமுள்ள எல்லா மாறுபாடுகளையும் தெரிந்து கொள்ளலாம்.

எப்போதாவது அடக்கமாக ஆத்ம சோதனை செய்து வந்தால் தலைசிறந்த அனுபவம் ஏற்படும்.

அடிக்கடி வீண்பெருமை கொள்வது இயந்திரத்தில் படியும் அழுக்குப் போன்றது. செய்த பிழைகளை நன்ருக அறிந்து இருந்தாலும், அது தன்னால் இழைக்கப்பட்ட தவறென்று ஏற்றுக்கொள்ள வீண்பெருமை இடம் கொடாது.

மனக்குறையுடன் ஆழ்ந்த யோசனை உண்டாகும். கற்பனை செய்தவைகள் எல்லாம் உண்மை போன்று தோற்றம் அளிக்கும். கறுப்புக் கண்ணாடி அணிந்து கொண்டு உலகைப் பார்ப்பது போல் இருக்கும். தன்னையும், தன்னைச் சார்ந்தவர்களையும் துக்கத்தில் ஆழ்த்தி விடும்.

தன்னால் இழைக்கப்பட்ட தவற்றை ஒப்புக்கொள்ளத் தயங்காதவன் நிச்சயமாக ஒரு சக்தி வாய்ந்த மனிதனாவான்.

தன்னை ஏமாற்றிக் கொள்ள அவனது சுயமரியாதை இடங்கொடாது. அவனுக்கு மற்றவர்களின் மேலிருக்கும் மரியாதையின் நிமித்தம் தவறை ஒப்புக்கொள்ளும் போது எந்தவிதமான தப்பபிப்பிராயத்திற்கும் சந்தர்ப்பம் அற்றுப் போய்விடுகிறது.

அடுத்தமுறை தவறு ஏற்பட்டு எல்லோரும் உன்னைத் திரும்பிப் பார்க்கும்போது தவறு உன்னுடையதல்ல என்ற நிலையில் இருக்க வேண்டும்; குற்றத்தை ஒப்புக்கொள்ள சக்தி வாய்ந்தவனாயிரு.

ஆங்கில மூலம்; The Human Machine By E. R Thompson, M A

# சுகவாழ்வுக்கு அயோடின் சத்து

உப்பின் உபயோகங்கள் எண்ணிலடங்காதது என்பது எல்லோருக்கும் தெரிந்ததே.

உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாக்கும் ஜீவநாடியாக இருப்பதோடு மட்டுமல்லாமல், விவசாய வளர்ச்சியிலும், இரசாயனத் தொழிற்சாலைகளிலும், மருந்துகள் தயாரிப்பதிலும் உப்பு மகத்தான பங்குவகிக்கிறது.

நாட்டின் வளர்ச்சிக்கு முதுகெலும்பாக உப்பு இருக்கிறது என்ருல் அது மிகையாகாது.

கொய்ட்டர் (Goitre) என்று சொல்லப்படும் குரல்வளைச் சுரப்பி வீக்கநோயைக் கட்டுப்படுத்துவதற்கு உபயோகிப்பதன்மூலம் சமீபகாலமாக உப்பின் முக்கியத்துவம் மேலும் அதிகரித்துள்ளது.

நாம் அனைவரும் உணவில் தினமும் நிர்ணயிக்கப்பட்ட ஓர் அளவில் உப்பைச் சேர்த்துக்கொண்டால் அது நமது உடலில் குறைவாகவுள்ள சில தாதுப்பொருள்களை உட்கொள்வதற்கு ஈடாகிறது.

ஆரோக்கியமாக வாழ நமக்குப் பல தாதுப்பொருள்கள் உதவுகின்றன. அதில் குறிப்பிடத்தக்கது அயோடின்.

இச்சத்து நாம் உண்ணும் உணவு, தானியங்கள், தண்ணீர், காய்கறிகள் மூலம் இயற்கையாக பூமியிலிருந்து நமக்குக் கிடைக்கிறது.

இந்தச் சத்தின் தேவை மிக மிகச் சிறிய அளவாகும்.

நாளொன்றுக்கு நம் உடல் இயக்கத்திற்குத் தேவையான அயோடின் அளவு 100 - 150 மைக்ரோகிராம் (ஒரு மைக்ரோகிராம் என்பது ஒரு கிராமில் பத்து லட்சத்தில் ஒரு பங்கு) ஆகும்.

இக்கணக்கின்படி எழுபது வருஷ வாழ்வில் ஒரு மனிதன் உட்கொள்ளும் அயோடினின் அளவு ஒரு தேக்கரண்டி, அதாவது 5 கிராம்.

ஆனால் இச்சிறிய அளவு அயோடின் சத்தும் கிடைக்க வாய்ப்பில்லாமல் போகலாம்.

### கழுத்தில் வீக்கம்


ஏனெனில் நாளடைவில் மழையினாலும், வெள்ளத்தினாலும் மண் பாதிக்கப்பட்டு மண்வளத்தில் இச்சத்துக் குறைந்துவருகிறது.

இச்சத்து போதிய அளவு கிடைக்காவிடில் நம் உடல், மன ஆரோக்கியம் பாதிக்கப்படும்.

உடலின் முக்கிய சுரப்பியான தைராய்டு (Thyroid) சரிவர வேலைசெய்யாமல் கழுத்தின் அடிப்பாகத்தில் பெரியவீக்கம் (Goitre) தோன்றும்.

அது தவிர உடல் போதிய வளர்ச்சி அடையாமை, தளர்ந்த நடை, நரம்புகளின் ஒத்துழையாமை, மாறு கண், காது கேளாமை, வாய் பேசாமை, மூளை பாதிப்பு போன்ற அபாயகரமான கோளாறுகள் ஏற்படுகின்றன.

தாய்மையுற்ற பெண்ணின் உடலில் அயோடின் குறைவு ஏற்பட்டால் கருவிலுள்ள சிசுவின் உடல் வளர்ச்சியும் மூளை வளர்ச்சியும் பாதிக்கப்படும். கருச்சிதைவு மற்றும் குழந்தை இறந்து பிறக்கும் நிலைமையும் ஏற்படும்.



ஒரு நாட்டின் கல்வியில் முன்னேற்றம் இல்லாமைக்கும் பின்தங்கிய நிலைமைக்கும் அயோடியன் பற்ருக்குறை ஒரு காரணமாகக் கருதப்படுகிறது.

இவ்விதமாக அயோடின் பற்ருக்குறையால் மனித சமுதாயம் பெருமளவில் பாதிக்கப்படுகிறது.

இந்த அயோடின் குறைபாடு நம் நாட்டில் மட்டுமன்றி உலகின் எல்லா நாடுகளிலும் காணப்படுகிறது.

குறிப்பாக ஆபிரிக்க, ஆசியக் கண்டங்களில் இப்பாதிப்பு அதிகமாகவுள்ளது.

### தீமை இல்லை

நம் நாட்டின் சூழ்நிலையில் தினமும் 100 மைக்ரோகிராம் அயோடின் சத்து நம் உடலுக்குப் போதுமானது. இதில் எவ்வித விஷத்தன்மையும் இல்லை.

அப்படியே அயோடைஸ்டு உப்பில் (Iodised salt) அயோடின் அளவு அதிகமாக இருந்து அதை நாம் உட்கொண்டால்கூட அதிகப்படியான அயோடின் சிறுநீர் மூலமாக வெளியேற்றப்பட்டுவிடும்.

இது சம்பந்தமாக அமெரிக்க நாட்டு நிலைமையைக் குறிப்பிடலாம்.

அந்நாட்டில் 1924 ஆம் ஆண்டு முதல் அயோடைட் உப்பு விநியோகம் அமுலில் இருந்துவருகிறது.

இன்றும் அங்கு அயோடின் குறைபாடு இல்லாத நிலைமையிலும் ஜனத்தொகையில் 85 சத மக்கள் 100ppm பொட்டாசியம் அயோடைட் (130 ppm பொட்டாசியம் அயோடேட்) கொண்ட உப்பைப் பயன்படுத்துகிறார்கள். ★

### அசைந்திடும் இனிய காட்சி!

கொன்றையின் பூ மலர்ந்து
கொட்டிடும் அழகு யானை
நெற்றியின் பட்டம் போலும்
நங்கையர் அணிகள் போலும்

கொன்றையின் பூங் கொத்துக்கள்
கிளைக்கது அழகு சேர்க்கும்
மன்னனின் போர் யானைக்கு
பொன்மணி ஓடை போலும்

கொன்றையின் அழகுப் பூக்கள்
கொப்புகள் தோறும் தொங்கி
அசைந்திடும் இனிய காட்சி
அடுக்கிய பொற் காசுக்கள்
அசைவது போலத் தோன்றும்

கொன்றையின் மரத்தில் யானை
நின்றுமே உராய்வ தாலே
அடிமரம் பொரிந்து தோன்றும்
அதன்மலர் கொத்தாய் தொங்கும்

மலரது சடைகள் போலே
மற்றதன் அடி மரமும்
குளிக்காத உடம்பு போலே
கொன்றையோ மலையில் நின்று
தவத்தினில் வீற்றி ருக்கும்
தவசியர் போலே தோன்றும்

—வ. யோகானந்தசிவம்

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**தான்சன் கல்விநிலையம்**
தெல்லிப்பழை.
91 O/L DAY CLASS
நடைபெறுகின்றன.
விஞ்ஞானம் — திரு. J. R. சூரி
கணிதம் — திரு. மகேந்திரன், மதி
தமிழ் — திரு. கணேஷ்
ஆங்கிலம் — திரு. M.A. ஹரிதாஸ்
சமூகக்கல்வி — திரு. V. S. R.
வர்த்தகம் — திரு. வரதன்

சஞ்சீவி சஞ்சிகை
09 - 09 - 1989 சனிக்கிழமை

**தான்சன் கல்விநிலையம்**
கே. கே. எஸ்.றோட், தெல்லிப்பழை
91 A/L வகுப்புகள்
நடைபெறுகின்றன.
பொருளியல் — திரு. சண்
அளவையியல் — திரு. சயந்தன்
வர்த்தகம் — திரு. சிவா
கணக்கியல் — திரு. யோகராஜா
தமிழ் — திரு. கணேஷ்
இந்துநாகரீகம் — திரு. M. R.
அரசியல் — திரு. செபராஜா

# அணிசேரா அமைப்பு பயன்தரும் விதத்தில் தொடர்ந்து இயங்குவது சாத்தியமா?

## சித்தாந்த ரீதியில் பிளவுபடும் ஆபத்து

அணிசேரா நாடுகளின் நான்கு நாள் உச்சி மாநாடு கடந்த திங்கட்கிழமை யூகோஸ்லாவியாவின் தலைநகரான பெல்கிரேட்டில் ஆரம்பமானது. இம் மாநாட்டில் 101 நாடுகள் கலந்து கொண்டன, 102 ஆவது நாடாக வெனிசுலா ஏற்றுக் கொள்ளப்பட்டது.

அடுத்த 3 ஆண்டு காலத்துக்கு அணிசேரா நாடுகளின் தலைமை யூகோஸ்லாவியாவிடம் இருக்கும். யூகோஸ்லாவிய ஜனாதிபதி யானேஸ் டொர்னேவ்செக் (Janez Dvnovsek) தலைவராக இருப்பார்.

கடந்த 3 ஆண்டுகள் தலைமைப்பதவி சிம்பாப்பேயிடம் இருந்தது. 1986 ஆம் ஆண்டு கடைசியாக சிம்பாப்பேயின் தலைநகரான ஹராரேயில் அணிசேராநாடுகளின் உச்சி மாநாடு நடைபெற்றிருந்தது.

### பிறப்பிடம் யூகோஸ்லாவியா

அணிசேரா நாடுகளின் பிறப்பிடம் யூகோஸ்லாவியா. 28 ஆண்டுகளுக்கு முன்னர் அதாவது 1961 ஆம் ஆண்டு அணிசேரா நாடுகள் ஸ்தாபனம் உருவாக்கப்பட்டது.

அணிசேராக் கொள்கைக்கு வித்திட்டது 1954 பாண்டுங் மாநாடு ஆகும்.

காலஞ்சென்ற மார்ஷல் டிட்டோ (யூகோஸ்லாவியா) ஜவஹர்லால் நேரு (இந்தியா) எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்கா (ஸ்ரீலங்கா) சுஹார்னோ (இந்தோனேஷியா) காமல் அப்துல் நாஸர் (எகிப்து) ஆகியோரே இதன் ஆரம்ப ஸ்தாபகர்களாகக் கருதப்படுகின்றனர்.

### ஸ்தாபக நாடுகளில் அரசியல் மாற்றம்

ஆனால் அணிசேரா நாடுகள் ஸ்தாபிக்கப்பட்ட காலத்தில் இருந்த நிலைமை இன்று இந்த நாடுகளில் பெரும்பாலும் மாறிவிட்டது என்றே கருதப்படுகிறது. இதனாலேயே அணிசேரா நாடுகள் இயக்கம் திசை திரும்புகிறதா? என்ற கேள்வி கேட்கப்பட்டு வருகிறது.

எகிப்து காமல் அப்துல் நாஸரின் காலத்தின் பின்னர் மேற்குநாடுகளின் ஆதரவு நாடாகத் தற்போது மாறி வருகிறது. 1979 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட காம்ப் டேவிட் ஒப்பந்தம் எகிப்தின் வெளிநாட்டுக் கொள்கையில் பெரும் மாற்றத்தை ஏற்படுத்தி இருக்கிறது. காம்ப் டேவிட் ஒப்பந்தம் காரணமாக அரபு லீக்கில் இருந்து வெளியேற்றப்பட்ட எகிப்து



பிரேமதாஸ

சமீபகாலத்தில்தான் மீண்டும் சேர்த்துக் கொள்ளப்பட்டிருக்கிறது.

அணிசேரா நாடுகளில் இன்று பலம் வாய்ந்த நாடுகளில் ஒன்றாகக் கருதப்படும் இந்தியாவும் ராஜீவ்காந்தியின் தலைமையில் மிதவாதக் கொள்கையையே கடைப்பிடிக்கிறது. ஜவஹர்லால் நேரு, கிருஷ்ணமேனன் (அப்போதைய பாதுகாப்பு மந்திரி) ஆகியோர் காலத்தில் இருந்த ஏகாதிபத்திய எதிர்ப்புக் கொள்கைகள் தற்போது கைவிடப்பட்டு விட்டன.

ஸ்ரீலங்காவிலும் இதே நிலை தான். தெற்கு ஆசியாவில் பாகிஸ்தானுக்கு அடுத்ததாக மேற்குலகின் சிறந்த நண்பனாக ஸ்ரீலங்கா மாறி வருகிறது.

இந்தோனேஷியாவில் சுஹார்னோவின் வீழ்ச்சியின் பின்பு சர்வதேச அரங்கில் இந்தோனேஷியா ஒதுங்கி வாழ்கிறது. தற்போது உள்ள சுஹார்ட்டோ தலைமையிலான ஆட்சியும் தீவிர வலது சாரிப் போக்குடையதே.

அணிசேரா நாடுகளின் ஸ்தாபகர் மாஷல் டிட்டோவின் காலத்தில் யூகோஸ்லாவியாவுக்கு சர்வதேச அரங்கில் இருந்த பெருமை இன்று இல்லை. யூகோஸ்லாவியா இன்று பெரும் பொருளாதார நெருக்கடியில் சிக்கி இருக்கிறது. இனப்பிரச்சினை காரணமாக நாடு சின்னாபின்னப்பட்டு வருகிறது. சோவியத் அதிபர் மிக்கெயில் கோர்பசேவின் சீர்திருத்தக் கொள்கைகளை யூகோஸ்லாவியா ஆதரித்து வருகிறது.

அணிசேரா நாடுகள் ஸ்தாபனத்தில் உள்ள பெரும்பாலான நாடுகள் நடுநிலைமைக் கொள்கையில் இருந்து நழுவி வருவதாக இந்த இயக்கத்தில் உள்ள கியூபா, வடகொரியா, லிபியா, தென் ஏமன், வியட்நாம் ஆகிய நாடுகள் குற்றஞ்சாட்டி வருகின்றன.

### பங்குபற்றத் தவறிய முக்கிய புள்ளிகள்

இம்முறை பெல்கிரேட் உச்சி மாநாட்டில் பங்குபற்றத் தவறிய முக்கிய புள்ளிகளில் ஒருவர் கியூபா ஜனாதிபதி பிடல் காஸ்ட்ரோ. யூகோஸ்லாவியாவுடனான கருத்து வேறுபாடுகளே இவர் பங்குபற்றாததுக்குக் காரணம் என்று நம்பப்படுகிறது.

பாகிஸ்தான் பிரதமர் பெனாஸிர் பூட்டோ, ஈராக் ஜனாதிபதி சத்தாம் ஹுசேன், ஈரான் ஜனாதிபதி ரப்சன்ஜானி, ஸ்ரீலங்கா ஜனாதிபதி பிரேமதாச ஆகியோர் மாநாட்டில் கலந்து கொள்ளத் தவறிய ஏனைய தலைவர்கள்.



பெனாஸீர் பூட்டோ

ஈரானுக்கும் ஈராக்கும் இடையிலான வளைகுடாப் பிரச்சினை தொடர்ந்து முட்டுக்கட்டை நிலையிலேயே இருந்துவருகிறது. ஈரான் – ஈராக் ஜனாதிபதிகளை பெல்கிரேட் மாநாட்டுக்கு அழைத்து பேச்சுவார்த்தை நடத்த ஐ. நா. பொதுச் செயலாளர் யாவியர் டி குயிலர் (Javier de Cueilar) திட்டமிட்டிருந்தார். ஆனால் அவர் எடுத்த முயற்சிகள் பலன் அளிக்கவில்லை.

எட்டு ஆண்டு யுத்தத்தின் பின் (1980 - 88) தற்போது சண்டை நிறுத்தம் அமுலில் உள்ள போதிலும் ஈரானும் ஈராக்கும் தொடர்ந்து போர் விளிம்பிலேயே இருந்து வருகின்றன.

பெனாஸிர் பூட்டோ பெல்கிரேட் வராததுக்கு ஆப்கன் நெருக்கடி மோசம் அடைந்து வருவது ஒரு காரணமாக இருக்கலாம்.

தென் இலங்கையில் மேலும் அடைந்து வரும் சம்பவங்களினால் ஸ்ரீலங்கா ஜனாதிபதி பெல்கிரேட் மாநாட்டில் கலந்துகொள்ளவில்லை.

### வெளிநாட்டு கடன் பிரச்சினை

அணிசேரா நாடுகள் இன்று எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினை வெளிநாட்டுக்கடன் பிரச்சினை ஆகும். ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகள் பல பெரும் கடன் சுமையில் வாழுகின்றன.

உலகின் வறிய நாடுகள் பட்டியலில் முதன்மை ஸ்தானம் வகிக்கும் பங்களாதேஷ் 950 கோடி டாலர் கடனாளியாகவும்—

ஆபிரிக்க நாடான கமெரூன் 650 கோடி டாலர் கடனாளியாகவும்—

மற்றொரு ஆபிரிக்க நாடான கொங்கோ 470 கோடி டாலர் கடனாளியாகவும் இருந்து வருகின்றன.

அணிசேரா நாடுகளில் பெரும் அளவில் கடனாளியாக உள்ள நாடு ஆர்ஜென்டீனா. இந்த நாடு பெற்ற வெளிநாட்டுக் கடன் 600 கோடி டாலர்கள்,

### சித்தாந்த ரீதியில் இயங்க முடியாத நிலை

அணிசேரா நாடுகள் சித்தாந்த ரீதியில் இயங்குவதற்கு பிரதான முட்டுக்கட்டையாக இருப்பது இந்தக் கடன் பழுவே. பெரும்பாலான அணிசேரா நாடுகள் மேற்கு நாடுகளிடமே கடனாளியாக இருக்கின்றன. அல்லது மேற்கு நாடுகளின் ஆதிக்கத்தில் உள்ள சர்வதேச நாணய நிதியத்தில் கடன் பெற்றுள்ளன.

நிக்கராகுவா, கியூபா, வியட்நாம், வடகொரியா ஆகிய நாடுகள் அணிசேரா இயக்கம் சித்தாந்த ரீதியில் இயங்க வேண்டும் என்று வற்புறுத்தி வருகின்றன.

பெரும்பாலான உறுப்பு



ராஜீவ்காந்தி

நாடுகளில் உள்ள அரசியல், பொருளாதார நிலைமைகளால் இது சாத்தியமாகும் வாய்ப்புகள் குறைந்தே காணப்படுகின்றன.

பொருளாதாரப் பிரச்சினைகளுடன் அரசியல் பிரச்சினைகளையும் அணிசேரா நாடுகள் எதிர்நோக்கி உள்ளன.

நிக்கராகுவா, ஆப்கானிஸ்தான், லெபனான், கம்போடியா, நமீபியா வளைகுடா பிரச்சினைகள் அணிசேரா நாடுகள் சம்பந்தப்பட்ட பிரச்சினைகள் ஆகும்.

இவற்றில் நமீபியா சுதந்திரப் பிரச்சினையைத் தவிர, ஏனைய பிரச்சினைகளில் தொடர்ந்து முட்டுக்கட்டை நிலை நீடிக்கிறது.

சிம்பாப்பே பிரதமர் றொபேர்ட்முகாபே அணிசேரா நாடுகளின் தலைமைப் பொறுப்பை ஏற்றிருந்த கடந்த 3 ஆண்டு காலத்தில் நமீபியாப் பிரச்சினைத்தீர்வில் முக்கிய பங்கு வகுத்திருந்தார்.

எல்லையில் உள்ள கறுப்பு நாடுகளின் மீது தென் ஆபிரிக்கா அடிக்கடி நடத்திவந்த தாக்குதல்களும் நிறுத்தப்பட்டுள்ளன. நேபாள – இந்திய வர்த்தகத் தகராறும் ஸ்ரீலங்கா — இந்தியப்படை விலக்கல் தகராறும் இன்னும் தீர்க்கப்படவில்லை.

28 ஆண்டுகளுக்கு முன் அணிசேரா நாடுகள் இயக்கம் உருவானபோது மேற்கு நாடுகளுக்கும் கிழக்கு நாடுகளுக்கும் இடையில் அப்போதிருந்த ஆதிக்கப்போட்டியைத் தளர்த்துவதே முக்கிய நோக்கமாக இருந்தது.

தற்போது அந்த நோக்கம் பெரும் அளவு நிறைவேறி விட்டது.

மேற்குலகும் கிழக்குலகும் நெருங்கி வர அணிசேரா இயக்கம் தான் காரணம் என்று கூறமுடியாவிட்டாலும் அந்த நோக்கம் ஓரளவுக்கு எட்டப்பட்டுவிட்டது.

உறுப்பு நாடுகளில் உள்ள அரசியல் – பொருளாதாரப் பிரச்சினையைத் தீர்க்கும் ஒரு ஸ்தாபனமாகவே எதிர்காலத்தில் இது பெரும் பங்கு ஆற்றும் நிலையில் உள்ளது.

★

உலக உலா
என்.பி. சீலன்

## பாவப் பிறவிகளா...?

நாங்கள்
"பாவப் பிறவிகள்"
எங்களுக்கும் அழகுண்டு,
அறிவுண்டு ஆனாலும் நாங்கள்
"பாவப் பிறவிகள்!"
அச்சம், மடம், நாணம் என்ற
அத்தனையும் நமக்குண்டு..
ஆனாலும் நாங்கள்
பாவப் பிறவிகள்தான்!!
ஏனென்றால்......
இலட்சணங்களைப்
படைத்தவன்
எம்மோடு—
இலட்சங்களைப்
படைக்கவில்லையாம்...!?

— நல்லூர் தாஸ்பிரியா.

# யோகாசனம் மூலம் மன வலிமை பெற்று உலக சாம்பியனான உடற்பயிற்சி வீரர்

உடற்பயிற்சிக் கலையில் பெரும்பாலோர் உடல் தசை வளர்ச்சியையும், உடற்பலத்தையும் கூட்டுவார்கள்.

ஆனால் 'மைக்கேல் டைய்டன்' (மைக் டைய்டன்) தன்னுடைய உடல் வலிமையோடு, மனவலிமையையும் கூட்டி புதுமுறைப் பயிற்சியினால் கைவிலங்குகளை நொறுக்குவதில் பெரும் வீரராக திகழ்கிறார்.

மைக் டைய்டன் கலிபோர்னியாவில் பிறந்தவர். சிறு வயதுமுதல் ஏதாவது சாதிக்க வேண்டுமென்று ஆர்வத்துடன் இருந்தவர்.

அவரது 15 வயது பருவத்தில் முதன் முதலில் உடற்பயிற்சிக் கலையை ஆரம்பித்து திறம்பட பயிற்சிகளை செய்து வந்தார்.

'மிஸ்டர் கலிபோர்னியா' பட்டத்தை வென்றவுடன் 'மிஸ்டர் அமெரிக்கா' பட்டத்தைப் பெறுவதற்கு வந்தார்.

அந்த வருடத்தில் 1969ஆம் ஆண்டு போட்டி கடுமையாக இருந்தது. 'பொயர்கவ்' $70\frac{1}{2}$ புள்ளிகளைப் பெற்று முதலிடம் பெற்று பட்டத்தை வென்றார். அப்போது மைக் 58 புள்ளிகளைப்பெற்று ஏழாவது இடத்தைப் பெற்றார்.

### மிஸ்டர் அமெரிக்கா

எனினும் பயிற்சிகளை மேலும் கடுமையாக்கி 1976 ஆம் ஆண்டு 'மிஸ்டர் அமெரிக்கா' பட்டத்தை வென்றார். எனினும் 'பொடி பில்டிங்'குடன் வேறு ஏதாவது சாதிக்க நினைத்தார்.

அதன் பிறகு உடல் வலிமையை மட்டும் கூட்டினால் போதாது மனவலிமையையும் கூட்ட முடிவு செய்தார். 'யோகாசனம் பயின்று மனக் கட்டுப்பாட்டுமுறையை நன்கு கற்றுத் தேர்ந்தார்.

உடல் வலிமையோடு மன வலிமையையும் சேர்த்து புதுவித பயிற்சிமுறையை தேர்ந்தெடுத்தார்.

குங்ப்பூ கலையை நன்கு கற்றுத் தேர்ந்து 'மாஸ்டர் ஆப் ஷெய்'யாக விளங்கினார்.

இந்தக் கலையில் கடுமையான உடற்பயிற்சிகளைச் செய்தார்.

இவரைப் பற்றி இவருடன் உடற்பயிற்சியில் ஈடுபட்டவர்கள் இவர் பயிற்சியை தொடர்வது மிகவும் கடினம் என்று காதுபடவே பேச ஆரம்பித்தனர். எனினும் இவர் மனம் தளரவில்லை.

தினமும் காலை 4 மணி முதல் 8 மணிவரை கடுமையான உடற்பயிற்சிகளை மேற்கொண்டார். கிட்டத்தட்ட இரண்டரை வருடங்கள் உடற்பயிற்சியின் விளைவாக அவருடைய உடம்பு அவருக்கேற்றவாறு வளைந்து கொடுத்து, கட்டுப்பாட்டின் கீழ் வந்தது.

எனினும் அவர் உடல் வலிமையையோ, உடலின் வனப்பையோ இழக்காமல் இருந்தார்.

யார் யார் அவரால் சாதிக்க முடியாது என்று கூறினார்களோ அவர்களே மைக் டைய்டன் விடாமுயற்சியையும், அவருடைய அற்புத சாகசங்களையும் கண்டு பிரமித்தனர்.

மைக் டைய்டன் தன் கைகளை இரும்பு விலங்குகளால் பிணைத்து விடுவார்.

பிறகு தனது உடல் வலிமையாலும், செய் முறையாலும் [illegible] இரும்பு விலங்குகளை [illegible] தள்ளுவார்.

இவரின் காட்சி நடைபெறாத அமெரிக்க நகரங்களே இல்லையெனலாம்.

அந்தளவுக்குத் தன்னுடைய திறமையை அனைவரின் முன்னிலையிலும் நிகழ்த்திக் காட்டினார்.

அதேபோல் கை கால்களையும் இரும்புச் சங்கிலியால் பிணைத்து அனைவரும் ஆவலோடு எதிர்பார்க்கும்போது அதை தெறித்துவிழச் செய்வார்.

பொதுவாக உடற்பயிற்சி வீரரின் தொடர்பு பளு தூக்குவதுடன் இருக்கும்

### குங்ப்பூ

ஆனால் இவர் குங்ப்பூவுடன் தொடர்பு ஏற்படுத்திக் கொண்டு உடற்பயிற்சிக் கலையை சேர்த்து பயிற்றுவிக்கத்தொடங்கினார்.

இதனால் குங்ப்பூ கற்றுக் கொள்ள வருபவர்களின் உடல்வலிமை, மனவலிமை பெருகுவதற்கு பெரும் வழி வகுத்தார்.

இவருடைய பயிற்சியின் முக்கிய நோக்கம் உடல் வலிமையை அதிகரிக்க உடல் கூறுகளுக்கு ஏற்ற பயிற்சி அளித்தல், பயத்தைத் தவிர்த்து அவநம்பிக்கையை நீக்குதல், உணர்ச்சிகளைக் கட்டுப்படுத்துதல், உடல் கூறை வளர்த்து சமப்படுத்துதல், தேவையற்ற எடையைக் குறைத்தல் மற்றும் உடல் வலிமையை ஒருமுகப்படுத்தி அதை மேலும் மேலும் பெருக்குதல்— என்ற முறையைப் போதித்து வந்தார்.

(எ-4)

## பொது அறிவுப் போட்டி இல: 31

**சரியான விடைகள்:**

1. கோபம், 2. கந்தன், 3. 1/40 வினாடி, 4. அழ. வள்ளியப்பா, 5. பொறுமை, 6, பீஷ்மர், 7. அரிஸ்ரோட்டில், 8. மழலைகள், 9. இந்தியா, 10. மொறீசியஸ், 11. செயல், 12. சொல்.

**பரிசு பெற்றவர்கள் விவரம்**

**முதலாவது பரிசு:**
பா. தமிழ்ச்செல்வன்,
சீனன் கலட்டி அருகாமை, அளவெட்டி வடக்கு,
அளவெட்டி.

**இரண்டாவது பரிசு:**
செல்வி எஸ். அனுஷ்யா,
கொக்குவில் மேற்கு, கொக்குவில்.

**மூன்றாவது பரிசு:**
திரு. வே. குமாரசுவாமி அதிபர்,
யா/வல்வை அ. மி. த. க. பாடசாலை,
வல்வெட்டித்துறை.



## ஒளியே! ஞாயிற்றின் உயிரே!!

ஒளியே, நீ யார்?
ஞாயிற்றின் மகளா?
அன்று; நீ ஞாயிற்றின் உயிர்.
அதன் தெய்வம்;
ஞாயிற்றினிடத்தே நின்னைத்தான் புகழ்கின்றோம்;
ஞாயிற்றின் வடிவம் உடல். நீ உயிர்.
ஒளியே, நீ எப்போது தோன்றினாய்?
நின்னை யாவர் படைத்தனர்?
ஒளியே, நீ யார்?
உனதியல்பு யாது?
நீ அறிவின் மகள் போலும்;
அறிவுதான் தூங்கிக் கிடக்கும்.
தெளிவு நீ போலும்.
அறிவின் உடல் போலும்.
ஒளியே, நினக்கு வானவெளி எத்தனை நாட்பழக்கம்?
உனக்கு அதனிடத்தே இவ்வகைப்பட்ட
அன்பு யாது பற்றியது?
அதனுடன் நீ எப்படி இரண்டறக் கலக்கிறாய்?
உங்களை யெல்லாம் படைத்தவள் வித்தைக்காரி;
அவள் மோஹினி, மாயக்காரி;
அவளைத் தொழுகின்றோம்;
ஒளியே, வாழ்க!

— பாரதியார்

வருகிற திங்கட்கிழமை மகாகவி சுப்பிரமணிய பாரதியாரின் நினைவு தினம் ஆகும்.

அவரின் நினைவாக அவரது வசன கவிதைகளில் ஒன்று இங்கு பிரசுரமாகிறது.

11 . 12 . 1882இல் பிறந்த சுப்பிரமணிய பாரதியார் 11 . 09 . 1921 இல் மறைந்தார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org